பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 21 திங்கட்கிழமை (03-05-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:160

# நேற்று ஜனாதிபதியுடன் பேசிய நோர்வேக் குழு இன்று வன்னிக்கு!

கொழும்பு,மே3

**இலங்கையின் சமாதான முயற்சிகளில் அனுசரணைப்பணி வகிக்கும் நோர்வேயின் விஷேடதூதுக்குழு நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அவரின் நுவரெலியா இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியது.**

**உத்தேச சமாதானப் பேச்சுக்களை எந்த அடிப்படையில் கொண்டு செல்வது என்பது குறித்தும் - புலிகளின் பூரண ஒத்துழைப்புடன் வடக்கு-கிழக்கில் தாமதமின்றி அபிவிருத்திப் பணிகளைத் தொடங்குவதற்கான தேவை குறித்தும்- இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதியின் செயலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

வடக்குக் கிழக்குப் பகுதியில் அபிவிருத்தி தொடர்பில் ஆரம்பிக்கப்படவிருக்கும் நிறுவன ரீதியான ஏற்பாடுகள் குறித்தும், சமாதானப் பேச்சுக்களின் வழிமுறை பற்றியும் நோர்வேத் தூதுக்குழுவுக்கு ஜனாதிபதி விளக்கினார் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நோர்வேத் தூதுக்குழுவில் அந்நாட்டின் வெளிவிவகார பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸன், கொழும்புக்கான

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சை முடிக்க காலவரையறை; கண்காணிப்புப் பணிக்கு இந்தியா

### ஜனாதிபதிக்கு ஜே.வி.பியின் நிபந்தனைகள்

கொழும்பு,மே3

★ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் முடிக்கப்பட வேண்டும்.

★ இந்தியா உட்பட ஆசிய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களே யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளோடு புதிய அரசு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்நிபந்தனையாக மேற்கண்ட இரு விடயங்களையும் ஜே.வி.பி. முன்வைத்திருக்கிறது.

ஜே.வி.பி.கட்சியின் இந்த நிபந்தனைகள் ஜனாதிபதி சந்திரிகா குமார

(16ஆம் பக்கம் பார்க்க)

### அரியாலை மாம்பழம் சந்தியில்

## பஸ்-மோட்டார் சைக்கிள் விபத்து அளவெட்டி இளைஞர் மரணம்!

யாழ்ப்பாணம்,மே3

அரியாலை, மாம்பழம் சந்திக்குச் சமீபமாக - ஏ-9 வீதியில் - போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் நேற்றுக்காலை 8 மணியளவில் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் ஓட்டிச் சென்ற இளைஞர் படுகாயமடைந்து பின்னர் மரணமானார்.

அளவெட்டியைச் சேர்ந்த சிவநேசன் பாபுசங்கர் (வயது-28) என்ற இளைஞரே இந்த விபத்தில் மரணமானார். இவர் 'உதயன்' விநியோகப் பகுதியில் பணியாற்றியவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிக

(16ஆம் பக்கம் பார்க்க)

## சென். ஜோன்ஸ் ஆசிரியர் கடலில் வீழ்ந்து மரணம்!

### நெடுந்தீவு சென்று திரும்புகையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மே3

நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் நோக்கிப்புறப்பட்ட பயணிகள் படகிலிருந்து தவறிவீழ்ந்த ஒருவர் கடலில் மூழ்கிவிட்டார்.

சங்கானையைச் சேர்ந்தவரும் யாழ் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பொருளியல் ஆசிரியருமான இரத்தினம் ஜெயசீலன் (வயது-35) என்பவரே இவ்வாறு நீரில் மூழ்கினார்.

நேற்று நண்பகல் 1.30 மணியளவில் நெடுந்தீவு மாவலித்துறைமுகத்திலிருந்து குறிகாட்டுவான் நோக்கிப் புறப்பட்ட படகில் மேற்பகுதியிலிருந்து (அணியத்திலிருந்து) பயணித்த போது

(16ஆம் பக்கம் பார்க்க)




சுவிற்ஸர்லாந்தில் மேதினத்தன்று ஈழத் தமிழர்கள் பிரமாண்டமான பேரணி ஒன்றை நடத்தினர். தலைவர் பிரபாகரனின் படங்களைச் சுமந்தவாறு பெரும் எண்ணிக்கையானோர் பேரணியில் பங்குபற்றினர். அங்கு எடுக்கப்பட்ட படம் இது. (ஐ)

# எழுத்துமூல உறுதிமொழியை அரசிடம் கேட்கிறது நோர்வே!

### பேச்சுக்கான நிகழ்ச்சித் திட்டம், அடிப்படை விடயங்கள் குறித்து

கொழும்பு,மே3

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதாயின் அந்தப் பேச்சு தொடர்பான அடிப்படை ஏற்பாடுகள் மற்றும் நிகழ்சசித் திட்ட வரையறைகள் என்பன தொடர்பாக அரசுத்தரப்பின் நிலைப்பாட்டைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எழுத்தில் சமர்ப்பிக்கவேண்டும். - இவ்வாறு இலங்கை அரசுத்தரப்பிடம் அனுசரணைப்பணியை ஏற்றுள்ள நோர்வே கோரும் எனத்தெரியவருகிறது.

புதிய அரசு தற்போது பதவியேற்றுள்ள நிலையில் - அந்த அரசு பல்வேறு முரண்பட்ட தரப்புக்களின் கூட்டமைப்பாக இருப்பதால் - புலிகளுடனான சமரச முயற்சிகளை ஆரம்பிக்க முன்னர் இலங்கை அரசுத் தரப்பின் திட்டவட்டமான நிலைப்பாட்டை எழுத்தில் அறிந்து கொள்வது நல்லது என நோர்வேத்தரப்பினர் கருதுகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

சமாதான முயற்சிகளில் தனது அனுசரணைப் பணியை ஆரம்பிக்க முன்னர், அந்த முயற்சிகள் தொடர்பாக ஐ.ம.சு.கூட்டமைப்பின் கொள்கை இலக்குகளைத் தெளிவாக வரையறுத்து உறுதிசெய்து கொள்வது அவசியமானது என்று நோர்வே கருதுகிறது.

மீண்டும் சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாட்டைப்பற்றி நோர்வே அனுசரணையாளர்கள் நன்கு அறிந்திருக்கின்றனர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆரையம்பதியில் இளைஞர் சுடப்பட்டு மரணம்!

மட்டக்களப்பு,மே3

மட்டக்களப்பு மண்முனைத் துறைக்குச் செல்லும் வழியில் 5ஆம் கட்டைச்சந்தியில் வைத்து இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமாலை 6.40 மணியளவில் இடம்பெற்றது.

ஆரையம்பதியைச் சேர்ந்த பொன்னையா ஜீவரத்தினம் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

ஆரையம்பதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்து 5ஆம் கட்டைச் சந்தியில் வைத்து இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் தெரிவித்தார்.

கொல்லப்பட்டவர் கருணாவின் முக்

(16ஆம் பக்கம் பார்க்க)



இலவச ஆயுள் காப்புறுதிக் காப்பு!

தேசிய சேமிப்பு வங்கியின் ஏதாவது ஒரு சேமிப்புக் கணக்கில் 180 நாட்களுக்கு கூடுதலாக குறைந்தபட்சம் 20,000 ரூபாவை அல்லது அதற்குக் கூடுதலாக வைத்திருத்தல்.

- இயற்கை மரணம் - வைப்பில் உள்ள தொகைக்கு சமமான தொகை வழங்கப்படும். என்றாலும் ஆகக் கூடிய தொகையாக ரூபா.50,000 மாத்திரமே வழங்கப்படும்.
- விபத்து மரணம் - வைப்பில் உள்ள தொகைக்கு சமமான தொகை வழங்கப்படும். என்றாலும் ஆகக் கூடிய தொகையாக ரூபா.500,000 மாத்திரமே வழங்கப்படும். (இச்சலுகைக்கு தகுதியான வயதெல்லை 18-70 வருடங்கள்)

NSB
தேசிய சேமிப்பு வங்கி

# கலாசாரச் சீரழிவுக்கு போரையும் இராணுவத்தையும் காரணம் கூறிக்கொண்டு வாளாவிருக்க முடியாது!

## கட்டுப்படுத்தும் வழிகளை அனைவரும் சிந்திக்கவேண்டும் என்கிறார் பாலகுமாரன்

யாழ்ப்பாணம்,மே3

கலாசா. சீரழிவுகளுக்கு இராணுவத்தையும் போரையும் காரணம் கூறிக்கொண்டு இருக்காது சமூக சீரழிவுகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் பற்றி எல்லோரும் சிந்திக்கவேண்டும்.

-இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன்.

நேற்று யாழ்.கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற போராளிக்கவிஞர் வீராவின் 'முதன்முதலாய்...' ஒலி இறுவட்டு மற்றும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வில் சிறப்புரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதேச ரீதியாக எமது மக்களின் செயற்பாடுகளைப் பார்க்கமுடியாது. ஒட்டுமொத்தமாகத் தமிழ்த் தேசிய ரீதியாக நிலைமைகளைப் பார்க்க வேண்டும்.

கடந்தகாலங்களில் எம் மண்ணில் இடம்பெற்ற போர் எம்மக்களை உளவியல் தாக்கங்கள் பலவற்றைக் கொண்டவர்களாக மாற்றியுள்ளது.

இது சமூகச்சீரழிவுகள் பலவற்றுக்கு இன்று வழிவகுத்துள்ளது. நாம் போரையும், இராணுவத்தையும் மட்டும் காரணம் கூறிக்கொண்டு தொடர்ந்து கலாசாரச் சீரழிவுகளைப் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. அதைத் தடுக்கும் வழிகளைப் பார்க்க வேண்டும்.

எமது மக்கள் மத்தியில் நல்ல வாசிப்புப்பழக்கம் குறைந்து வருகிறது. சினிமாவுக்குள் மூழ்கிக் கிடக்கிறோம். சினிமா பார்க்கக்கூடாது என்று யாரும் நினைக்கக் கூடாது. நல்ல சினிமாப் படங்களைப் பார்க்க வேண்டும். அத்துடன், நல்லபுத்தகங்களையும் தேடிப்படிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் மேற்குலக கலாசாரம் தலைவிரித்தாடுகிறது. அயல் வீட்டுக்காரனுடன் உறவுகள் இல்லாதிருப்பது வேதனைக்குரியது.

யாழ்ப்பாணத்தில் பனைமரம் தெரியாத மாணவர்கள் இருப்பது மேற்குலக கலாசார பின்பற்றுதலின் விளைவாகும்.

சமூகச்சீரழிவுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு புலிகளுக்கு மட்டும் உரியதல்ல. அது சகலருக்கும் உரியது.

சமூகச்சீரழிவுளைக் கட்டுப்படுத்த போர் ஒன்று அவசியம் என்று யாரும் நினைக்கக் கூடாது.

போர் பல வரலாற்று இலக்கியங்களைத் தந்துள்ளது. அவற்றை வாங்கி வாசித்துப்பேண வேண்டிய பொறுப்பு எலலோருக்கும் உரியது. கலையுணர்வுகளைத் தட்டிக்கொடுக்க வேண்டும் என்பதுடன் ஆதரவு தந்து எல்லோரும் உற்சாகப்படுத்த வேண்டும். நல்ல மனித நேய கலையுணர்வுக்கு முக்கியமளிக்கப்படவேண்டும்.



இன்றைய அரசியலை நோக்கும் போது சந்திரிகா பல சவால்களை எதிர்கொண்டுள்ளார்.

ஜே.வி.பி. பல இடர்களைப் புதிய அரசில் ஏற்படுத்திவருகிறது. இவை எல்லாம் தமிழர்களுக்குச் சார்பான விடயங்களாகவே உள்ளன. இந்த நேரத்தில் தமிழினம் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும்.

சர்வதேச சமூகத்தின் பார்வை தமிழர்களின் பக்கம் திரும்பி வருகிறது. - இவ்வாறு தெரிவித்தார் பாலகுமாரன். (ஐ-12)

## கவிஞர் வீராவின் கவிதை இறுவட்டு நேற்று வெளியீடு

யாழ்ப்பாணம்,மே3

போராளிக் கவிஞர் வீராவின் 'முதனமுதலாய்...' கவிதை இறுவட்டு மற்றும் கவிதை தொகுதி வெளியீட்டு நிகழ்வு நேற்று மாலை யாழ் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

'நிதர்சனம்' பொறுப்பாளர் சேரலாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் லெப்டினன்ட் அரசுவின் தந்தையார் மற்றும் சட்டத்தரணி சிறிகாந்தா ஆகியோர் ஏற்றிவைத்துள்ளனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றினார்.

வெளியீட்டுரையினை தமிழீழக் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

நூலை யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி வெளியிட்டுவைக்க, முதல்பிரதியினை யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் என்.சண்முகலிங்கன் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு இடம்பெற்றது. நூலின் மதிப்பீட்டுரைகளை கவிஞர் சோ.பத்மநாதன், பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

பதிலுரையினை நூலாசிரியர் வழங்கினார்.

(ஐ-12-86)

# கந்தப்பொல வன்முறைகளைக் கண்டித்து மலையகத்தில் இன்று முழு வேலைநிறுத்தம்!

## 5 லட்சம் பேர் பணிக்குச் செல்லார்

கொழும்பு,மே3

**நுவரெலியா மாவட்டம் கந்தப்பொலவில் தமிழர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்து மலையகத்தில் சுமார் ஐந்து லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் இன்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர்.**

கடந்த புதன்கிழமை இரவு கந்தப்பொல நகரில் தமிழர்களுக்குச் சொந்தமான கடைகளை எரித்து சேதப்படுத்தி தமிழர்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இரண்டு தமிழர்கள் பலியாகினர். தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இந்தக் கலவரத்தைக் கண்டித்தே இன்றுவேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

கட்சி பேதங்களின்றி சகல தரப்பினரையும் இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் பங்குகொண்டு கந்தப்பொலச் சம்பவத்திற்குத் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த முன்வருமாறு இ.தொ.காங்கிரஸ் அழைப்பு விடுத்துள்ளது.

கந்தப்பொல கலவரத்தின் சூத்திரதாரிகள் அடையாளம் காணப்பட்டு சட்டத்துக்குமுன் கொண்டுவரப்படவேண்டும். எவ்வித முன்னறிவிப்பும் இன்றி தான்தோன்றித்தனமாக செயற்பட்ட பொலஸாரையும், இரண்டு தமிழர்களை எவ்வித காரணமும் இன்றி சுட்டுக்கொன்ற பொலஸாரையும் சட்டத்துக்கு முன் நிறுத்தி தகுந்த தண்டனை வழங்கப்படல் வேண்டும் என்பதே இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தின் கோரிக்கையாக முன் வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இதுபோன்று மலையகத்தில் தமிழர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டால், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், வெறுமனே கைகட்டிப்பார்த்துக்கொண்டிருக்காது என கந்தப்பொலச் சம்பவத்தை ஒட்டிய அதன் கண்டன செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத்துறையில் தொழில் புரியும் சகல தமிழர்களும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என கண்டி மாகாணசபையின் முன்னாள் பிரதித்தலைவரும் இ.தொ.காவின் மத்திய மாகாண அமைப்பாளருமான துரை.மதியுகராஜா தெரிவித்தார். (ஐ-க)

## சிகிரியாவில் குளவி கொட்டி 200 பேர் பாதிப்பு!

குகை ஓவியங்கள் நிறைந்த சிகிரியாக் குன்றுக்குச் சுற்றுலா மேற்கொண்டோர் மீது குளவிகள் கொட்டியதில் சுமார் இருநூறு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மிகவும் விஷத்தன்மை வாய்ந்த குளவிகள் கொட்டியதால் காயமடைந்த இவர்கள் கிம்பிகஸ்ஸ கிராம வைத்தியசாலையிலும், தம்புள்ள பொது வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகிரியாவுக்குச் சென்ற பாடசாலை மாணவர்கள் சிலர் அங்கிருந்த குளவிக்கூடுகள் மீது கற்களை வீசியதாலேயே அவை தம்மைக் கலைத்துக் கொட்டியதாகக் காயமடைந்த சிலர் தெரிவித்துள்ளனர்.

(ஐ-க)




**போராளிக் கலைஞர் வீராவின் 'முதன்முதலாய்...' கவிதை நூல் மற்றும் இறுவட்டு வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நூலை வெளியிட்டு வைக்க சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி என்.சண்முகலிங்கன் அதனைப் பெற்றுக்கொள்கிறார். இறுவட்டையும் படத்தில் காணலாம். (படங்கள்-வசந்தன்)**

## வடமேல் மாகாண முதல்வராக அதுல

கற்பிட்டி,மே3

வடமேல் மாகாணத்தின் புதிய முதல்வராக சட்டத்தரணி அதுல விஜேசிங்க எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை சத்தியப்பிரமாணம் செய்து கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொள்வார்.

அதுல விஜேசிங்க ஒரு சட்டத்தரணியாவார். குருநாகல் மலியதேவ கல்லூரியில் கல்வி பயின்ற இவர், குளியாப்பிட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளருமாவார்.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு சொற்பவாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்த இவர், பின்னர் நடைபெற்ற மேல்மாகாணசபைத்தேர்தலில் 70 ஆயிரத்துக்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்களில் முதலிடத்தைப்பெற்றார்.

வடமேல் மாகாணத்தில் ஐந்தாவது முதல்வரான இவர், இரண்டாவது முறையாகவும் முதல்வராகப் பதவியேற்கிறார். (ஐ-க)

## அரச அதிபரின் அழைப்பு

யாழ்ப்பாணம்,மே3

யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்ற செயலாளர்களுடனான கலந்துரையாடலில் குடாநாட்டில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர்களையும், உதவி அரச அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (ஏ)

# கந்தப்பொலவில் வழமை நிலை

கொழும்பு,மே3

கலவரத்தினால் பாதிக்கப்பட்ட கந்தப்பொலவில் தற்போது நிலைமைகள் வழமைக்குத் திரும்பியுள்ளதாக நுவரெலிய பொலீஸ்மா அதிபர் எ.டபிள்யூ.ஆரியரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை அங்கு தமிழ்-சிங்கள மக்களிடையே ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து கலவரம் வெடித்து இரு தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். சுமார் 25 வர்த்தக நிலையங்கள்; மற்றும் வீடுகள் போன்றவை சேதமாக்கப்பட்டன.

நிலைமை தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளதால் கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் இடம்பெற்று வருவதாகவும், பொதுமக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகளை வழமைபோல் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அங்கு பாதுகாப்புக்கருதி இராணுவத்தினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என நுவரெலிய பொலீஸ்மா அதிபர் எ.டபிள்யூ.ஆரியரட்ன தெரிவித்தார். (ஐ-க)

## குடாநாட்டு பாடசாலைகளுக்கு சீருடைத்துணி கிடைக்காமை குறித்து மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

யாழ்ப்பாணம்,மே3

யாழ். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளுக்கு இந்த முறை சீருடைத்துணி முழுமையாக வழங்கப்படவில்லை என்று மனித உரிமை ஆணைக்குழுவிடம் பெற்றோர் தரப்பினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் கல்வித் திணைக்களங்களில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சமூக பொருளாதார அபிவிருத்தி சர்வதேச சட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு அரசு வழங்குகின்ற இலவச சீருடைத்துணி இந்தமுறை முழுமையாக வழங்கப்படவில்லையென்று பெற்றோர்கள் மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு யாழ். அலுவலக இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகரா வலயக்கல்விப் பணிப்பாளர்களுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அவர்கள் தமக்கும் சீருடைத்துணி வழங்கும் திட்டத்திற்கும் எதுவிதத் தொடர்பும் இல்லையெனத் தெரிவித்தனர்.

இதனையடுத்து இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகரா இது தொடர்பாகக் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தார்.(ஜரி)

# ஜெனீவா சட்ட விதிகள் தெரியாதவர்களே ஈராக் கைதிகளைச் சித்திரவதை செய்தனர்!

## அமெரிக்கா கூறுகின்றது

வாஷிங்ரன்,மே3

ஈராக்கில் கைதிகளை மோசமாக நடத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அமெரிக்க வீரர்கள் ஜெனீவா மரபுகளின் கீழ் பயிற்சி பெறாதவர்கள் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கிளர்ச்சியாளர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படும் ஈராக்கியர்களை ஈராக்கிலுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படையினர் நிர்வாணமாக்கிச் சித்திரவதை செய்து வருகின்றனர் என்று கடுமையான குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஈராக்கியர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படும் புகைப்படங்களும் வீடியோப் பதிவுகளும் வெளியிடப்பட்டுள்ளன.

இது ஈராக்கியர்களை ஆத்திரங்கொள்ள வைத்துள்ளதுடன் உலகெங்கும் இருந்து கண்டனங்களையும் கிளப்பியுள்ளது.

அமெரிக்க அதிபர் புஷ் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் ஆகியோரும் தமது படையினரின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளைக் கண்டித்துள்ளனர்.

குற்றம் இழைத்த படையினருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிபர் புஷ் அறிவித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் புஷ், "வீரர்களின் செயல்கள் அமெரிக்கர்களின் இயல்பைப் பிரதிபலிப்பதாக இல்லை. அமெரிக்காவில் இம்மாதிரி நாங்கள் நடப்பதில்லை. இச்செயலை நான் விரும்பவில்லை. கைதிகள் நடத்தப்பட்ட முறை வெறுப்பளிக்கின்றது." - என்றார்.

ஈராக்கியர்களை நிர்வாணமாக்கி மோசமாக நடத்தினார்கள் என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 6 அமெரிக்கப் படையினர் நீதிமன்ற விசாரணைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

அமெரிக்க இராணுவத்தின் 800 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் ஜெனரல் ஜானில் கர்பின்னியும் 65 படையினருமே நீதிமன்ற விசாரணைகளை எதிர்கொண்டுள்ளனர். ஏற்கனவே அவர்கள் பணியிடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். எனினும், பணியிடைநீக்கம் பற்றிய செய்திகள் தெளிவாக இல்லை. கர்பின்னி அமெரிக்கா திரும்பிச் சென்றிருப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. குற்றஞ்சாட்டப்பட்டுள்ள படையினருக்கு ஈராக்கிலேயே வேறு பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை - ஈராக்கியர்களைப் பிரிட்டிஷ் படையினர் சித்திரவதை செய்தனர் என்பதை நிரூபிக்க வெளியிடப்பட்ட படங்கள் குறித்து பிரிட்டிஷ் அதிகாரிகள் சந்தேகங்களைத் தெரிவித்துள்ளனர். அந்தப் படம் உண்மையானதாக இருந்தால் அச்செயலை ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தெரிவித்தார்.

ஆனால், அந்தப் புகைப்படம் ஈராக்கில் எடுக்கப்பட்டதாக இருக்காது என்று பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். அதற்காக அவர்கள் சில காரணங்களை முன்வைக்கின்றனர்.

ஈராக்கியக் கைதிகளை அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படையினர் சித்திரவதை செய்ததை ஐநா. செயலாளர் கோபி அனான் கண்டித்துள்ளார். இந்த விவகாரம் தன்னை மிகவும் பாதித்துள்ளது என்று கூறியுள்ள அவர், "எல்லா இடங்களிலும் எல்லாச் சூழல்களிலும் சர்வதேச மனித உரிமை விதிகளின்படிதான் கைதிகள் நடத்தப்படவேண்டும்" - என்றும் வலியுறுத்தினார். (க)

# கலவரங்களை அடக்கத் தனிப்படை அமைப்பதற்கு அமெரிக்கா முடிவு

உலகில் எங்காவது கலவரம் ஏற்பட்டால் அங்கு அமைதியை நிலைநாட்ட 75 ஆயிரம் பேர் கொண்ட நிரந்தர படையை உருவாக்க அமெரிக்கா திட்டமிட்டு வருகின்றது.

கலவரம் ஏற்படும் இடங்களில் இப்படை தலையிட்டு அமைதியை நிலைநாட்டும் என்று அமெரிக்க வெளிவிவகார துணை அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் வியாழக்கிழமை கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

அமைதிகாக்கும் பணியில் ஈடுபடுவோருக்கு ஆபிரிக்காவில் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்துக்காக முதல் ஆண்டில் ரூபா 900 கோடியும் அடுத்த 5 ஆண்டுகளில் ரூபா 5 ஆயிரம் கோடியும் செலவாகும். இதற்கான நிதியை அமெரிக்க இராணுவமும் அரசும் வழங்கும் என்றார்.

இது தொடர்பாக இராணுவத் துணைச்செயலர் பால் வால்.:. போவிட்ஸ் கூறியதாவது:-

உள்நாட்டுப் போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வரும் சூடான் போன்ற நாடுகளுக்கு இப்படையை அனுப்பலாம். ஏனைய நாடுகளின் படைகளுக்கு அமைதிகாக்கும் பணியில் பயிற்சி அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கம்.

அண்மையில் லைபீரியாவிலும் இப்போது கெயிட்டி நாட்டிலும் ஏற்பட்டுள்ளது போன்ற அமைதி காக்கும் பணிகளுக்கு வெளிநாட்டுப் படைகளில் இருந்தும் ஆள்களைச் சேர்த்துக்கொள்ளலாம். அமெரிக்கப் படைகளையே எதிர்பாராமல் மற்ற நாட்டவரையும் பயன்படுத்தலாம். போர்செய்ய இப்படையைப் பயன்படுத்தக்கூடாது. அமைதியைப் பராமரிக்கவே பயன்படுத்தவேண்டும் - என்றார் அவர். (க)

# சவூதியில் தாக்குதல் நடத்தியவர்கள் அல்கெய்டாவைச் சேர்ந்தவர்களாம்!

## அந்நாட்டு பிரிட்டிஷ் தூதர் தகவல்

சவூதி அரேபியாவில் யன்புன் துறைமுகத்தில் பிரிட்டிஷ் எண்ணெய்க் கம்பனிகள் அமைந்துள்ள பகுதயில் புகுந்து துப்பாக்கிச் சூடு நிகழ்த்தியவர்கள் அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று தமது அரசு கருதுவதாக பிரிட்டனிலுள்ள சவூதி அரேபியத் தூதுவர் இளவரசர் துர்க்கி அல் - பாயிசல் கூறியிருக்கிறார்.

எண்ணெய் நிறுவனக் கட்டடங்கள் இருக்கும் பகுதிகளில் தாக்குதல் நடத்துவதற்கு முன்னர் அந்த நிறுவனங்களின் அலுவலகங்களுக்குள் கிளர்ச்சியாளர்கள் உடைத்துத் தகர்த்துக்கொண்டு நுழைந்திருக்கிறார்கள். அரேபியக் காவலர்களால் துரத்திச் செல்லப்பட்ட அவர்கள் அருகலிருக்கும் குடியிருப்புக்களில் வைத்து மடக்கித் தாக்கப்பட்டார்கள். மூவர் அதே இடத்தில் சுட்டுக்கொல்லப்பட்டனர். நான்காவது நபர் கைது செய்யப்பட்டார்.



சம்பவத்தில் காயமடைந்த ஒருவர்

இதேவேளை - பிரிட்டிஷ் எண்ணெய்க் கம்பனி ஊழியர்கள் கொல்லப்பட்டிருப்பது குறித்து பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ட்ரோ அதிர்ச்சியும், கவலையும் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சவூதியில், பிரிட்டிஷ் - சவூதி எண்ணெய்க் கம்பனிக் கட்டடத் தொகுதிகள் அமைந்தள்ள பகுதியில் கிளர்ச்சியாளர்கள் புகுந்து தாக்குதல் நடத்தியதில் குறைந்தது ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட பிரிட்டிஷ் காரர்களில் இரசாயனப் பொறியியலாளரான மைக்கல் மெக்கில்லனும் ஒருவரெனத் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் மேலும் கூறுகையில் -

பயங்கரவாதிகள் வெற்றி பெறுவதற்கு நாம் அனுமதிக்கமுடியாது. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு சவூதி அரேபியா கடுமையாக உழைத்து வருகிறது. அவர்களுக்கு எமது ஒத்துழைப்பு எப்பொழுதும் உண்டு என்றார்.

இரு அமெரிக்கர்களும் ஓர் ஆஸ்திரேலியரும் ஒரு சவூதி தேசிய காவல் படையைச் சேர்ந்தவரும் மரணமாகியிருப்பது தெரியவந்துள்ளது.

மேலும் ஓர் அமெரிக்கர் ஒரு கனேடியர், ஒரு பாகிஸ்தானியர், 25 சவூதி அரேபியர்களும் காயமடைந்துள்ளனர். (ப)

# ஐரோப்பிய ஒன்றியத்தில் மேலும் 10 நாடுகள் புதிதாக இணைவு

பிரஸல்ஸ்,மே3

ஐரோப்பிய ஒன்றியத்தில் மேலும் 10 நாடுகள் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே இருந்த 15 நாடுகளுடன் இவையும் இணைநது கொண்டதன் மூலம் ஒன்றியம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. செக்குடியரசு, எஸ்தோணியா, ஹங்கேரி, லத்துனியா, லித்துவேனியா, மோல்டா, போலந்து, சுலோவாக்கியா, சுலோவேனியா மற்றும் சைபிரஸ் (கிரேக்கம்) ஆகிய நாடுகளே ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்து கொண்டன.

ஒன்றியத்தின் 25 நாடுகளிலும் இணைப்புக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. பிரதான நிகழ்வுகள் ஒன்றியத்திற்கு இப்போது தலைமைதாங்கும் அயர்லாந்தில் நடைபெற்றது. "பெரும் எதிர்பார்ப்புக்குரிய ஒரு நாள் இன்று" என்று அயர்லாந்துப் பிரதமர் தெரிவித்தார்.

அயர்லாந்துப் பிரதமர் அலுவலகத்தில் நடந்த எளிமையான வைபவத்தில் ஒன்றியத்தில் புதிதாக இணைந்து கொண்ட நாடுகளின் தலைவர்கள் ஒன்றியத்தின் ஏனைய தலைவர்களுடன் சேர்ந்து கலந்துகொண்டனர்.

புதிதாக இணைந்துகொண்ட நாடுகளில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணி தாண்டியதும், நீல நிற பின்னணியில் மஞ்சள் நட்சத்திரங்கள் வட்டமாகப் பதிக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியக் கொடிகள் ஏற்றப்பட்டன; ஒன்றியத்தின் தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.

பேர்லின் சுவரின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஐரோப்பாவின் கிழக்கு, மேற்கு பிரிவினையின் இறுதி அஸ்தமனம் இது என்று ஐரோப்பியத் தலைவர்கள் புதிய நாடுகளின் இணைப்பைப் பாராட்டியுள்ளார்கள். (க)

## உலக அமைதிக்காக

# 1 ½ லட்சம் கிலோ மீற்றர் தூரம் நடந்தே கடந்த தூத்துக்குடி வாசி

உலக அரங்கில்

உலக அமைதியை வேண்டி ஒன்றரை லட்சம் கி.மீ.தூரத்தை நடந்தே கடந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார் தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தைச் சேர்ந்த எம்.கண்ணன் (வயது 53).

எளிய தோற்றம், காவியாடை, சலிக்காத நடை இதுதான் கண்ணன். தினசரி அதிகாலை 4மணிக்கு நடைப் பயணத்தை தொடங்கும் இவர் இரவு 9 மணிவரை நடக்கிறார்.

கோயில் கோயிலாகச் செல்லும் கண்ணன், உலக அமைதிக்காகவும், உலக மக்களின் நன்மைக்காகவும் வேண்டிக்கொள்கிறார்.

16 பேர் கொண்ட ஒரு தொழில் குடும்பத்தில் 7ஆவது பிள்ளையாகப் பிறந்த கண்ணனுக்கு பாடசாலை நாள்களிலேயே ஆன்மீகத்தில் ஆர்வம் பிறந்துவிட்டது. பி.யூ.சி.படித்த பின்னர் மதுரை ஐ.டி.ஐயில் எலக்ரீஷியன் கோர்ஸ் முடிந்ததும் ஆன்மீகத்தில் தீவிரமாக இறங்கிவிட்டார். திருமணம் செய்யவில்லை.

இதுவரை இவர் திருச்செந்தூருக்கு 70 தடவைகளும் திருப்பதி 23, திருத்தணி 23, திருவண்ணாமலை 23, சென்னை 23, பழனி 30, மருதமலை 5, சபரிமலை 2, சங்கான் கோவில் 46, குற்றாலம் 23 தடவைகள் சென்றுள்ளார்.

ஒரு ஜோடி ஆடை தவிர கையில் பணமோ, பொருளோ வைத்துக்கொள்வதில்லை. வழியில் சந்திப்போர் அளிக்கும் உதவிகளைக் கொண்டே பயணத்தைத் தொடர்கிறார்.

இரவில் யாராவது தங்கள் இல்லத்தில் தங்கும்படி வற்புறுத்தினால் மட்டும் தங்குகிறார். இல்லாவிட்டால் ஏதாவது பொது இடம்தான்.

சாதி, மத, பேதம் கருதாமல் யார் அளிக்கும் உணவையும் உண்ணும் இவர், பசியை ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை என்கிறார்.

இவர் பஸ்ஸில் பயணம் செய்து 23 ஆண்டுகளாகிவிட்டன. தினசரி தவறாமல் குளித்தாலும், தலைக்கு எண்ணெய் தேய்ப்பது இல்லை. முடி வளர்ந்ததும் கோயில்களில் மொட்டை போட்டுவிடுகிறார். இதுவரை 193 முறை மொட்டை போட்டுள்ளார்.

கண்ணனிடம் வேறு சில வித்தியாசமான விஷயங்களும் காணப்படுகின்றன. இவர் சாதாரணமாக கண் இமைப்பதில்லை. நடக்கும் போது கைகளை வீசுவதில்லை.

பிதாமகன் படப் பாதிப்பா என்று கேட்டால் நான் படமே பார்ப்பதில்லை என்கிறார். இதுவரை இவர் எந்த

# சிறையிலிருந்து வெளியே வந்தவுடன் மீண்டும் கைதானார் இந்தோனேஷிய மதத் தலைவர்

## பாலித்தீவு குண்டுவெடிப்புடன் தொடர்பு இருப்பதாகக் குற்றச்சாட்டு

தீவிரவாதக் குழுக்களின் தலைவர் என்று குற்றஞ்சாட்டப்படும் இஸ்லாமிய மதத் தலைவர் அபூபக்கர் பஷீர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட கையோடு மீண்டும் இந்தோனேஷியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

2002ஆம் ஆண்டு இந்தோனேஷியாவின் சுற்றுலாத் தளமான பாலித்தீவில் தீவிரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலுடன் இவருக்குத் தொடர்பு இருந்தது என்று பொலீஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டார். அந்தத் தாக்குதலில் 180 இற்கு மேற்பட்ட வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

ஜமாத் இஸ்லாமிய என்ற அமைப்பே இந்தத் தாக்குதலை நடத்தியது. அதன் ஆன்மீகத் தலைவர் பஷீர் என்று பொலீஸார் கூறுகின்றார்.

இதனடிப்படையிலேயே பஷீர் மீது குற்றச்சாட்டுக்கள் பதிவுசெய்யப்பட்டன.

நாட்டுக்கு எதிரான சதி முயற்சிகளில் ஈடுபட்டமை, குடியுரிமைச் சட்ட விதிகளை மீறியமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். நேற்று வெள்ளிக்கிழமையன்று அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

சிறைக்கு வெளியே காத்திருந்த பொலீஸார் உடனடியாகவே அவரைக் கைதுசெய்து வாகனத்தில் ஏற்றி ஜகார்த்தா பொலீஸ் தலைமையகத்துக்குக் கொண்டு சென்றனர்.

பொலீஸார் அவரைக் கைது செய்தபோது சிறைக்கு வெளியே கூடியிருந்த அவரது நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் பொலீஸாருடன் மோதலில் ஈடுபட்டனர்.

கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும் தண்ணீரைப் பீச்சியடித்தும் பொலீஸார் அவர்களைக் கலைத்தனர். அல்லாஹ் அக்பர் என்று குரலெழுப்பிய ஆதரவாளர்கள் "துணிவிருந்தால் எங்களையும் கைதுசெய்" என்று கோஷமெழுப்பினர்.

பொலீஸாருக்கும் பஷீர் ஆதரவாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட இந்த வன்முறையில் சிலர் காயமடைந்தனர் சில கார்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

பஷீரை சட்டத்துக்கு புறம்பாக கைதுசெய்து தடுத்து வைத்திருக்கிறார்கள் பொலீஸார் என்று அவரது சட்டத்தரணிகள் கூறுகின்றனர்.

"இது கைது அல்ல, இது ஒரு கடத்தல், இது குறித்து நாங்கள் நீதிமன்றத்தில் வாதாடுவோம்" என்றனர் அவர்கள்.

பொலீஸார் வெள்ளிக்கிழமை காலை சிறைக்குச் சென்று பஷீரை அவரது அறையிலிருந்து வெளியே இழுத்து வந்து தமது வாகனத்தில் ஏற்றினர் என்று நேரில் கண்ட சிலர் தெரிவித்தனர்.

பொலீஸ் வாகனத்தில் ஏற்றப்பட்ட போது அங்கு கூடியிருந்த செய்தியாளர்களைப் பார்த்து சிரித்தபடியே "கடவுள் என்னை நிச்சயம் வெளியே கொண்டுவருவார்" என்று பஷீர் கூறினார்.

ஆனால், பாலி குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் பஷீருக்குத் தொடர்பு இருந்தது என்பதை நிரூபிக்கத் தம்மிடம் போதிய ஆதாரங்கள் உள்ளன என்கின்றனர் பொலீஸார்.

# வியட்நாமில் படகு மூழ்கி 25 பேர் உயிரிழந்தனர்!

வியட்நாமில் கடலில் படகுமூழ்கி 25 பேர் இறந்துள்ளனர். தெற்கு வியட்நாமில் வெள்ளிக்கிழமையன்று இச்சம்பவம் நடந்துள்ளது.

மீன்பிடிக்கும் படகில் இவர்கள் சுற்றுலா சென்றுள்ளனர். படகில் ஏற்பட்டகோளாறு காரணமாக அது கடலில் மூழ்கியுள்ளது.

"94 பேர் உயிரோடு மீட்கப்பட்டுள்ளனர்; 25 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. எத்தனை பேர் சென்றார்கள், எத்தனை பேரைக்காணவில்லை என்ற விவரம் தெரியவில்லை" என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

இறந்தவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் சிறுவர்களாவர். அமெரிக்காவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட 29ஆவது ஆண்டைக்கொண்டாடும் முகமாக உயர் நிலைப்பள்ளி மாணவர்கள், அவரது குடும்பத்தார் உள்ளிட்ட 200 பேர் படகில் சென்றதாக அரசுத் தகவல் தெரிவிக்கின்றது.

# பாராட்டி வாழ்த்துகிறோம்

J/61, J/62 கிராம அலுவலர் பிரிவுகளில் நீண்டகாலம் கடமையாற்றி தற்போது J/63 பிரிவில் கடமையாற்றிக் கொண்டிருக்கும்

## செல்வி இ.கமலவேணி

தரம் 1 கிராம அலுவலராகப் பதவியுயர்வு பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். அவர் மேன்மேலும் சிறப்புற்று வாழ சந்திர சேகரப் பெருமானை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

(31568)(34-11-16) - கொழும்புத்துறை மக்கள்.



# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

வெளிநாட்டில் உடனடி வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருவதில் வெற்றிநடைபோடும்

## ராஜ் லங்கா ரூர்ஸ்

நிறுவனத்தின் வேலைவாய்ப்புச் செய்தி

| டோகா/சவூதி | அபுதாபி (இலவச வேலைவாய்ப்பு) | சம்பளம் |
|---|---|---|
| A/C மெக்கானிக் | பொருத்துநர் (தொ.நு.சான்று) | 32,400 |
| வாகன ரிங்கர் | பொருத்துநர் | 27,000 |
| வாகன பெயின்ரர் | வெல்டர் (தொ.நு.சான்று) | 40,500 |
| வாகன மெக்கானிக் | வெல்டர் | 35,100 |
| மேசன் | ரிங்கர் | 27,000 |
| காப்பென்ரர் | மெற்றல் றேட் | 21,600 |
| கம்பி கட்டுபவர் | சாரதி | 40,500 |
| அலுமினியம் பிற்சர் | ஒப்பறேற்றர் | 45,900 |
| பிளம்பர் | பிளாஸ்ரர் | 21,600 |
| கனரக வாகன சாரதி | பெயின்ரர் | 24,300 |
| விற்பனைப் பிரதிநிதி | Machinist | 32,400 |
| வோட்டர் பம் மெக்கானிக் | உதவியாளர் | 16,200 |
| வெல்டர் | Planning Engineer | 67,500 - 81,000 |
| கூலி | Material Controler | 67,500 |
| கிளீனர் | பாதுகாப்பு அதிகாரி | 67,500 |
| | Civil Engineer | 67,500 |
| | Mechanical Supervisor | 67,500 |
| | Man Power Coordinator | 54,000 |
| | Personal Staff | 54,000 |

இத்துடன் இன்னும் பலவகை வேலைவாய்ப்புகளும் உண்டு

அனுபவம் குறைந்தவர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவர். கொழும்பிலிருந்து வருகைதருவோரால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படும்.

நேர்முகப் பரீட்சை காலம் இன்று 03-05-2004 முதல் 05-05-2004 வரை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.

## ராஜ் லங்கா ரூர்ஸ்

220A, 2ஆம் குறுக்குத் தெரு,
(ஆஸ்பத்திரி வீதி வழியாக) யாழ்ப்பாணம்.

(C/34876)
(26-11-16-34)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவகங்கை மூர்த்தி (தெல்லிப்பழை)

தெல்லிப்பழை, பொன்னர் வளவையும் 5, **Jaya Road,** பம்பலப்பிட்டியையும் வதிவிடமாகக் கொண்டவருமாகிய திருமதி சி.மூர்த்தி 01.05.2004 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற **Dr.S.V.** மூர்த்தி (மலேசியா) அவர்களின் அன்பு மனைவியும் ராஜலட்சுமி, சத்தியமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, **Dr.**சிவமூர்த்தி (முன்னாள் டாக்டர், தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ராஜரட்ணம் **(Accountant)**, மாலினி, ரதி ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **No.5, Jaya Road** இல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2004) திங்கட்கிழமை 1.00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.30மணிக்கு கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**Dr.V.Sivamoorthy,**
19 1/3, Milagiriya Avenue,
Bambalapitiya,
T.P.:2559622.

தகவல்:-
**V.Rajaratnam,**
No.5, Jaya Road, Bambalapitiya,
T.P. : 2582425

(C/34875)(38-34-11-16)

## பாலச்சந்திரன் மகீசன்

பிள்ளையார் கோவிலடி, தாவடி கிழக்கைச் சேர்ந்த யாழ். மத்திய கல்லூரி மாணவன் பாலச்சந்திரன் மகீசன் 02.05.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பாலச்சந்திரன் - கமலராணி தம்பதிகளின் புதல்வரும் மயூரன், மயூராஜ், மதுசன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2004) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*தாவடி கிழக்கு.* (31570)(34-11-16) பாலச்சந்திரன் (சந்திரன்).

## திருவருள் தர்மகுலசிங்கம்

(சின்னத்தம்பி/இளையண்ணை)

(ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி, மலேஷியா)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் மலேஷியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருவருள் தர்மகுலசிங்கம் 01.05.2004 சனிக்கிழமை மலேஷியாவில் காலமானார்.

அன்னார் பன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திருவருள் - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் திரேசாவின் அன்புக் கணவரும் சுதேஸ், அருள்தேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், குலசிங்கம், பரராஜசிங்கம் மற்றும் விஜயசிங்கம் (இந்தியா), ஜெயசிங்கம் (U.K.), துரைராசசிங்கம் (பன்னாலை), திருமதி குமாரசாமி (சுழிபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.05.2004) மலேஷியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பன்னாலை,*
*தெல்லிப்பழை.* (31569)(34-11-16)
திரு.தி.துரைராசசிங்கம் (சகோதரர்)
திருமதி குமாரசாமி (சகோதரி).

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே3

நல்லூர் கைலாசபிள்ளையார் தேவஸ்தான பிள்ளையார் வாசல் வருடாந்த உற்சவத்தில் இரதோற்சவம் இன்று காலை இடம்பெறும்.

காலை 7மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 9.15 மணிக்கு பிள்ளையார் தேரில் ஆரோகணிப்பார்.

நாளை காலை 9மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாகும். தீர்த்த உற்சவம் 10 மணிக்கு ஆலய தீர்த்தவாரியில் இடம்பெறும். (எ-3)

★ ★ ★

வலி.தென்மேற்கு,மே3

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் ஆலய இரதோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தீர்த்த உற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும். (எ-135)

★ ★ ★

வலி.தென்மேற்கு,மே3

யாழ். மாவட்டத்தில் காவடிகளுக்கு பிரசித்திபெற்ற ஆலயமான மாதகல் நுணசை ஸ்ரீ முருக மூர்த்தி ஆலய இரதோற்சவம் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. தீர்த்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் நடைபெறும்.

(எ-135)


## தவறிவிட்டது

(பிட்டியெல்லை, காரைநகர் கிழக்கைச்சேர்ந்த பழனி தர்சினிதேவி என்பவரது தே.அ.அ. 12.04.2004 அன்று மீசாலையிலிருந்து காரைநகருக்குச் செல்லும்போது மீசாலைக்கும், யாழ்ப்பாணத் திற்கும் இடையில் பேர்சுடன் தவறவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

**பழனி தர்சினிதேவி,**
பிட்டியெல்லை, காரைநகர் கிழக்கு.
தொலைபேசி: 077 6049573.

(31573)



## தேவை

கோண்டாவிலில் இயங்கும் வர்த்தக நிறுவனமொன்றிற்கு காசாளர் (ஆண்/பெண்), வேலையாள்கள் இருவர் தேவை.
(அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு: 021-222-3501
(31565)



உலகப்புகழ் பெற்ற தரமான **PI, PII, PIII, Lap Top (TOSHIBA)** கணனிகளை மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்!

**PI-200MHz/1.6GB/32Ram - 12, 900/=**
(மொத்தமாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கு விசேடகழிவுகள் உண்டு)
**PII-366MHz/6GB/64Ram - 21, 100/=**
(with Multimeedia)
**PIII-550MHz/8GB/128Ram - 32, 000/=**
(with Modem and Multimeedia)
**Lap Top (TOSHIBA)** கணனிகள்
Intel Celeron 600 MHz/128 Ram/6GB - 50, 000/=
(with 56kbps Modem)
**BRAND NEW COMPUTERS**
PIV 1.8GHz/128MB Ram/40GB HDD - 52, 000/=
PIV 2.8GHz/256MB Ram/40GB HDD - 62, 900/=
PIV 2.0GHz/256MB Ram/40GB HDD - 54, 000/=
AMD Ation 2.0GHz/128MB Ram/40GB HDD - 46,000/=
(15" Monitor 52xCD Rom, M/M Speakers Keyboard, Mouse and Pad)

விசேட விலை UPS-Powertree 4,200/=



**NORTH EAST TECHNOLOGIES**
34, Saddanathar Road, Nallur, Jaffna.
T.P.:021-2223786, 0777-708498 (hotline) (C/34670)
NET


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 08 - 1944



மறைவு 16 - 04 - 2003

## சுந்தரம் இராசலிங்கம்

அன்பின் பிறப்பிடமாகத் திகழ்ந்த ஐயாவே
பண்பின் சிகரமாக வாழ்ந்த உங்களை
எங்களால் மறக்க முடியவில்லையே!
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கிறோம்.

நாளை (04-05-2004) மதியம் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி,
தொண்டமனாறு. (31574) (26-11-16-34) - குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணகம் 08 - 08 - 1936



விண்ணகம் 04 - 04 - 2004

## அமரர் முத்துக்குமாரு ஜெயநாதன்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், பரந்தன் விவசாயக் கந்தோர்)

துணையாக நின்று தூய நல் வழிகாட்டி
நிறையாத வேளையில் நீங்கள் பிரிந்த தேனோ?
அணையாத விளக்காய் அவனியிலே என்றும்
அன்புயர்ந்த தெய்வமே! எம் அகங்களில் வாழ்ந்திடுவீர்.

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் முத்துக்குமாரு ஜெயநாதன் அவர்களின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (03.05.2004) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.

மனைவி: இராசம்மா,
பிள்ளைகள்: பகீரதன் (லண்டன்), ஜெயபாரதி (சுவிஸ்), ஜெயரோகினி (லண்டன்).
மருமக்கள்: நாகபூஷணி, மனோகரன் (சுவிஸ்), நாகேந்திரராசா (லண்டன்).

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (31572) (24-11-16-34)

உதயன்

## வினை விதைக்கு உடனே அறுவடை!

'வினை விதைப்பவன் வினை அறுப்பான்' என்பது அர்த்தமுள்ள அருமையான தமிழ் முதுமொழி.

சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசு படப்போகின்ற பாட்டை நினைக்கும் போது இந்த முதுமொழிதான் நினைவுக்கு வருகின்றது.

'அரசு அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்' - என்று சொல்வார்கள். ஆனால், அரசே தவறிழைத்தால் இப்போதெல்லாம் தெய்வம் நின்று கொல்வதில்லை. அன்றே அனுபவிக்க வேண்டியதாகிவிடுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் புதிய அரசு பதவியேற்ற பின்னர், சமாதான முயற்சிகளின் போக்கு எப்படியிருக்கும் என்பதே பல தரப்பிலும் பேசப்பட்ட முக்கிய விடயமாக இருந்துவந்தது.

இந்தியாவுக்குச் சென்றிருந்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இவ்விடயம் தொடர்பாக அங்கு தெரிவித்த கருத்துக்கள் தென்னிலங்கைச் சிங்கள சமூகத்தின் மத்தியில் பெரும் பூகம்பத்தைக் கிளப்பியிருக்கின்றது.

சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான ஏது நிலையை ஏற்படுத்தத் தக்கவகையில் ஆக்கபூர்வமான முன் நடவடிக்கைகளை முன்னெடுக்காமல் - அல்லது கருத்துக்களை முன்வைக்காமல் - உத்தேச சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் காலகட்டத்தை நிர்ணயிப்பதுபோல - இந்தியாவில் வைத்து - ஒரு தலைப்பட்சமாகக் கதிர்காமர் அறிவித்தபோது, அவர் 'வெறுங்கையில் முழம் போடுகின்றார்' - என விமர்சித்திருந்தோம்.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு புலிகள் தரப்பிலிருந்து இணக்கம் கிட்ட முதல் - அதற்கான சூழ்நிலையைத் தன்னும் ஏற்படுத்தாமல் - பேச்சு ஆரம்பமாகக் கூடிய காலகட்டத்தை கதிர்காமர் ஒரு தலைப்பட்சமாக அறிவித்த போது அப்படித்தான் கருதமுடிந்தது.

ஆனால், அதே புதுடில்லியில் வைத்து வேறு ஒரு செய்தியாளர்களுக்கு அளித்த செவ்வியில், பேச்சு மேசைக்கு ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான புலிகளை வரவழைப்பது தொடர்பான ஆக்கபூர்வமான சில கருத்துக்களை அவர் முன்வைத்திருக்கின்றார்.

ஈழத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாகப் புலிகளை ஏற்றுக்கொள்வது, கடந்த அரசு விட்ட நிலைமையிலிருந்து இந்தச் சமாதான முயற்சிகளை மீளப் புதுப்பித்து முன்னெடுப்பது, புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்தும் ஆரம்பப் பேச்சுக்களில் கலந்துரையாடுவது போன்ற விடயங்களுக்கு அரசு தயார் என்பதை மேலோட்டமாகத் தன்னும் அப்பேட்டியில் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார் அரசின் வெளிவிவகார அமைச்சர்.

அமைச்சர் கதிர்காமரின் இந்தப்பேட்டி கடந்த வெள்ளியன்று வெளியானது. அவ்வளவுதான். தென்னிலங்கையில் அதற்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது. பேரினவாதிகள் வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் குதிக்கத் தயாராகிவிட்டார்கள். அமைச்சர் கதிர்காமரைக் கிழிகிழியெனக் கிழிக்கும் ஊடக 'அநாகரிகம்' ஆரம்பமாகிவிட்டது.

தாங்கள் ஆட்சியைப் பிடிக்கவேண்டும் என்பதற்காக முன்னைய அரசு நடத்திய சமாதான முயற்சிகளைக் கடுமையாக விமர்சித்தவர்களும், இனவாதக் குரோதத்தை அதற்கு எதிராகத் திருப்பி விட்டவர்களும் இப்போது ஆட்சிப்பீடம் ஏறியிருக்கின்றார்கள். இப்போது அவர்கள் அதே சமாதான முயற்சியல் ஈடுபட, எத்தனிக்கும் போது அவர்கள் ஏவிய அதே அம்பு அவர்களுக்கு எதிராகத் திரும்புகின்றது. வினை விதைத்தவர்கள், வினையை எதிர்கொள்ள வேண்டியவர்களாகின்றனர். அது தான் இது.

சமாதான முயற்சிகளில் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்தமுயன்ற ஐ.தே.முன்னணி அரசை, நான்கு ஆண்டுகள் முன்னதாகவே அதனை வீட்டுக்கு அனுப்பும் வகையில், கடந்த மார்ச்சில் - இரண்டு மாதங்களுக்கு முன்புதான் - அதனைக் கலைத்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

முந்திய அரசின் சமாதான முயற்சிகளை பேரினவாதப் போக்கில் விமர்சித்து வந்த ஜனாதிபதி, இப்போது தாம் அந்த முயற்சியை முன்னெடுக்க எத்தனிக்கும் சமயத்திலேயே அதே பேரினவாத எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியவராக இருக்கின்றார்.

அதாவது, தாம் விதைத்த வினைக்கு உரிய பலனை உடனேயே அறுவடை செய்யவேண்டியவராகிறார் அவர். இப்போதெல்லாம் தெய்வம் நின்று கொல்வதில்லை அல்லவா?........!

---

தமிழீழத் தேசியக் கொடி, பிரபாவின் படம் ஏந்தியவாறு

# நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் பொங்குதமிழ் மே தின எழுச்சிப் பேரணி

ஒஸ்லோ,மே3

தமிழீழத் தேசியக் கொடி மற்றும் தமிழீழத் தேசியத் தலைவரின் திருவுருப்படங்கள் தாங்கியபடி சிவப்பு - மஞ்சல் பலூன்களைப் பறக்கவிட்டு, தமிழ்மக்களின் உரிமைக்குரலை உரக்க முழக்கமிட்டவாறு நோர்வேயில் பொங்குதமிழ் மே தின எழுச்சிப் பேரணி இடம்பெற்றுள்ளது.

இந்தப் பேரணி குறித்து ஏற்பாட்டாளர்கள் விடுத்த செய்திக் குறிப்பு வருமாறு:-

என்றுமில்லாதவாறு பெரும் எண்ணிக்கையிலான தமிழர்கள் திரண்டு, பொங்குதமிழ் எழுச்சியோடு கிளர்ந்து பவனி சென்ற காட்சி பார்வையாளர்களைப் பிரமிப்பில் ஆழ்த்தியது. மரபுப் பறை முழங்க, பொய்க்கால் குதிரையாட்டம், கரகாட்டம், காவடி ஆட்டம், சிறுவர்களின் கோலாட்டம் முதலான காட்சி அம்சங்களோடு சென்ற இப்பேரணியைக் கண்ட மக்கள் கரகோஷம்செய்து மகிழ்ச்சியினை வெளிப்படுத்தினார்கள்.

தமிழீழத் தேசியக் கொடிகளும், தமிழீழத் தேசியத் தலைவரின் திருவுருவப்படங்களும், பதாதைகளும், சுலோக அட்டைகளும், சிவப்பு - மஞ்சள் பலூன்களுமாக எங்கு நோக்கினும் எழுச்சிப் பிரவாகம் ததும்பித்தெரிந்தது.

தமிழீழ மக்களின் அடிப்படைத் தேசிய அபிலாசைகளை சர்வதேசம் புரிந்துகொண்டு எமக்காகப் பேச முன்வரவேண்டும், நோர்வேயின் பார்வையில் நடைபெற்றுவந்த பேச்சுக்களை மீண்டும் தொடரவேண்டும், தாயகம் தேசியம் சுயநிர்ணயம் என்னும் தமிழரின் வேணவா வெல்லப்படவேண்டும், இராணுவ அடக்குமுறை அட்டூழியம் நிறுத்தப்படவேண்டும், தமிழரின் ஏகப்பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்பதைச் சர்வதேசமும் ஒப்புக்கொள்ளவேண்டும் ஆகிய சுலோகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும், அட்டைகளையும் தாங்கியவர்கள்.. 'எங்கள் தலைவன் பிரபாகரனே!..' என்று முழக்கமிட்டவண்ணம் எழுச்சிநடை நடந்தார்கள்.

வேதனைமுற்றிட வெந்து வெந்து.. இரும்புருக்கு உலையின் கனலென உயிர்த்த ஈழத்தமிழர்கள் உள்நிறைவெப்போடு உலகம்காணவென ஒரேதலைமையின்கீழ் உணர்வுப் பெருக்காறாய் திரண்டுள்ளார்கள் என்பதை என்றுமில்லாவண்ணம் இந்தப் பேரணி எடுத்துக்காட்டியது

ஒடுக்கப்பட்ட இனங்களின் உரிமைக்குரலுக்கான தினமாக உலகெங்கும் அங்கீகாரம் பெற்றுள்ள தொழிலாளர் தினமான மே தினத்தில், உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் உளம்திறந்து முழங்கிய உரிமைக் குரலோடு நோர்வேவாழ் தமிழர்களின் குரலும் சீரிய சிறப்போடு வீரிய நிறைவோடு சங்கமித்தது.

பேரணியின் முடிவில் நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் மாஸ்டரின் உரை இடம்பெற்றது.

நோர்வேயிலுள்ள பிரதான நகரங்களான ஒஸ்லோ, பேர்கன், துரணியம், ஸ்தவங்கர் முதலான இடங்களிலும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் உணர்வுப் பெரும் மே தின ஊர்வலங்கள் வெகுசிறப்பாக நடைபெற்றன. (எ)

---

# 75 வீதமான மாணவர்களுக்கு பல் சம்பந்தமான நோய்கள்

பரிசோதனைகளில் கண்டுபிடிப்பு

வலி. தென்மேற்கு,மே3

யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் 75 வீதமானவர்களுக்கு பல் சம்பந்தமான நோய்கள் இருந்து வருவதாக யாழ். சுகாதாரத் திணைக்களம் அண்மையில் நடத்திய சுகாதாரப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டுள்ளது.

பல் சம்பந்தமான நோய்களில் "பற் சூத்தை" எனப்படும் நோயினால் மாணவர்களில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளில் மாணவர்களிடையே ஏற்படும் பல் சம்பந்தமான நோய்கள் பற்றியும், அவற்றை வருமுன்பு தடுப்பதற்கேற்ற வழிமுறைகள் பற்றியும் பற்களைத் தீட்டுகின்ற முறை பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக வீடியோ படக்காட்சி காண்பிக்கப்பட்டு வருகிறது. சுகாதாரத் திணைக்களத்தின் நடமாடும் திரைப்படப் பிரிவினால் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாகப் பாடசாலைகள் தோறும் மேற்படி திரைப்படம் காண்பிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை -

முன்பள்ளிகளில் கற்கும் சிறார்களின் பற்சுகாதாரத்திலும் தற்போது தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தமது பிரிவிலுள்ள பொதுநல நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற உதவி வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் முன்பள்ளி மாணவர்களுக்குப் பல் தீட்டல் உபகரணங்களை வழங்கி வருகின்றனர்.

அண்மையில் சுன்னாகம் ஸ்ரேசன் வீதியிலுள்ள முன்பள்ளி ஒன்றில் கற்கும் 58 மாணவர்களுக்கு நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் பல் தீட்டும் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (எ-4-135)

---

# ஆரியம்பிட்டி, முள்ளானை மயானங்களை சிரமதானம் மூலம் துப்புரவுசெய்ய ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே3

நவாலி, ஆரியம்பிட்டி மயானம், முள்ளானை, கிராய்டி மயானம் (சூரியன் காடு) என்பன சிரமதானம் மூலம் விரைவில் துப்புரவு செய்யப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் பி.விக்டர் மேற்கொண்டுள்ளார்.

நவாலி, ஆரியம்பிட்டி மயானம், ஆனைக்கோட்டை உப அலுவலக ஊழியர்களின் உதவியுடனும் -

முள்ளானை (கிராய்டி), சூரியன் காடு மயானம் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டினம் மற்றும் கிராம அலுவலக ஊழியர்களைப் பயன்படுத்தியும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளன.

நவாலி - முள்ளானை மயான சிரமதானப் பணிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி சிரமதான நிகழ்வுகளில் அப்பகுதியில் உள்ள சன சமூக நிலையங்களும் பொது அமைப்புக்களும் இணைந்து செயற்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-185)

---

# மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதிக அக்கறையுடன் செயற்படுக!

யாழ். தளபதி பொலிஸாருக்கு அறிவுரை

யாழ்ப்பாணம்,மே3

குடாநாட்டு மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்துப் பொலீஸார் அதிக அக்கறை காட்டவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலா.

கடந்த வியாழக்கிழமை யாழ். பொலீஸ் நிலையத்திற்கு விஜயஞ்செய்த இராணுவத்தளபதி பொலீஸ் நிலைய உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியபோது இதனைத் தெரிவித்தார்.

இது விடயமாகப் படைத்தளபதி மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் தற்போது சுமார் ஐந்துலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கின்ற முழுப்பொறுப்பும் பொலீஸாருக்கே உண்டு.

தொடர்ச்சியாக நடைபெற்று வரும் குற்றச்செயல்கள், வன்முறைகளைத் தடுப்பதற்குப் பொலீஸாருக்கு மேலதிக உதவி தேவைப்பட்டால் அதனை எப்பொழுதும் வழங்கத் இராணுவத்தினர் தயாராகவுள்ளனர்.

மக்களின் பாதுகாப்பிலும் அவர்களது உரிமை தொடர்பான விடயத்திலும் இராணுவம் எப்போதும் உறுதுணையாக இருக்கும்.

சமாதான காலத்தில் இராணுவத்தினரும் பொலீஸாரும் தமது கடமைகளில் மிகவும் அவதானமாகச் செயற்படவேண்டும் - என்றார் அவர்.

பொதுமக்கள் - பொலீஸார் நல்லுறவு தொடர்பாகவும் பொலீஸ் அதிகாரிகளிடம் அவர் கேட்டறிந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பில் இராணுவத்தளபதியுடன் பிராந்திய பொலீஸ்மா அதிபர் ஜெயந்த பெனாந்த, யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் எஸ்.வானகுரு, யாழ். பொலீஸ நிலைய அத்தியட்சகர் ஆனந்த செனவிரத்ன மற்றும் யாழ். பொலீஸ் நிலைய சிறு குற்றத்தடுப்புப்பிரிவு குற்றவியல் பிரிவு, போக்குவரத்துப் பொலீஸ் பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-7)

---

# பொது இடங்களில் நிறுவப்பட்ட வீடுகளை உடன் அகற்ற நடவடிக்கை எடுக்குக!

## மாநகர ஆணையாளரிடம் குருநகர் முன்னணி கோரிக்கை

குருநகர்,மே3

குருநகர்ப் பகுதியிலுள்ள பொது இடங்களில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புக்களை உடனடியாக அகற்றுவதற்கு நட வடிக்கை எடுக்குமாறு யாழ். மாநகர ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இது குறித்து மேற்படி அமைப்பு ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குருநகர் ஐஸ் தொழிற்சாலை வீதியில் மணல்கொண்டு நிரப்பப்பட்டுள்ள பகுதியில் குருநகரிலுள்ள சிலர் அத்துமீறிய குடியிருப்புக்களை அமைத்துள்ளனர். இவ்விடம் குருநகரிலுள்ள இளைஞர், சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்துவதற்காகவே அவ்வாறு அமைக்கப்பட்டது.

எனவே, அப்பகுதியில் அத்துமீறி வீடுகளை அமைத்துள்ள குடியிருப்புக்களை உடன் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

பொது இடங்களுக்கும், பொது மைதானங்களுக்கும் பாதிப்பினை ஏற்படுத்தி அமைக்கப்பட்டுள்ள அத்துமீறிய குடியிருப்புக்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

குறிப்பாக குருநகர் ஐஸ்தொழிற்சாலை வீதியில் அமைந்துள்ள குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் மற்றும் குருநகர் தண்ணீர்த்தாங்கி அமைந்துள்ள உள்வளவிலும் தனிப்பட்ட சிலர் குடியிருப்புக்களை அமைத்துக் குடியேறியிருக்கின்றனர்.

எதிர்காலத்தில் வீதிகளுக்கும், வடிகால்களுக்கும் பாதிப்பினை ஏற்படுத்தும் கட்டடம், மதில், மலக்குழி அமைப்பு வேலைகளை மேற்கொள்ளும் குடியிருப்பாளர்களைக் கட்டுப்படுத்தி மேற்படி நிர்மாண வேலைகளை ஒழுங்காக அமைக்குமாறு பணித்தார் - என்று அதில் உள்ளது. (எ-51)

---

### நாளை

சித்திரை 22
செவ்வாய்க்கிழமை
(04.05.2004)
திதி : பூரணை
பின்னிரவு 2.33 வரை
நட்சத்திரம்: சுவாதி
பின்னிரவு 1.10 வரை
சித்திரா பூரணை விரதம்
சுபநேரம்: 10.26 - 11.56
ராகுகாலம்: 2.56 - 4.26
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கோபத்தோடு எழுந்திருப்பவன் நஷ்டத்தோடு உட்கார்வான்.

# தமிழர் தேசம் விடுதலை பெற்றால் மட்டுமே தொழிலாளர் விடிவினை எதிர்பார்க்க முடியும்

## மேதினக் கூட்டத்தில் இளம்பரிதி பேச்சு

- அலுவலகச் செய்தியாளர் குழு -




யாழ்ப்பாணம்,மே3

தமிழ்த் தொழிலாளர்களுடைய விடிவிற்கும் வாழ்வுக்கும் எமது நாட்டின் விடிவுதான் வழி அமைக்கமுடியும். இந்தவகையில், எமக்கென்று ஒரு நாடு வேண்டும் என்பதற்காக மக்கள் இம்மண்ணில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்த் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

தமிழ்த் தேசியக் கூட்டுதொழிற் சங்கத்தின் மே தினக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடமராட்சிக் கடற்தொழிலாளர் சமாசத் தலைவர் க.சூரியகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது வாழ்வுரிமைக்காகப் போராட்டத்தை முன்னெடுத்த நாம் இன்று இறுதிக் கட்டத்திற்கு வந்து நிற்கின்றோம். சில இடங்களில் மே தினக் கூட்டங்கள் வெறும் அரசியலுக்காக நடத்தப்படுகின்றது.

இன்று இங்கு இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மே தினக் கூட்டமானது தொழிலாளர்களின் நலனுக்காகவும் இருப்புக்காகவும் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றது.

பாட்டாளி மக்களின் நல்வாழ்வுக்கும் திருப்பு முனைக்கும் காரணமாக எமது தேசியத் தலைவர் கவனமாக இருக்கின்றார். விடுதலைப் போராட்டத்தில் மாவீரர்களின் தியாகங்கள் அர்ப்பணிப்புக்களுடன் பாட்டாளி மக்களினதும், வர்க்கத்தினதும் வாழ்வும் நலன்களும் பின்னிப்பிணைந்து நிற்கின்றன.

இம்மண்ணில் வெறுமனே தொழில் பறிப்புக்களும் தொழில் இழப்புக்களும் தொழில் இன்மையும் மட்டும் இடம்பெறவில்லை.

உயர் பாதுகாப்பு வலயம் என்று இராணுவ அடக்குமுறையின் கீழ் சுமார் 26 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு அவர்களுடைய நிலங்களும்கூடப் பறிக்கப்பட்ட நிலைமைதான் இங்கு காணப்படுகின்றது.

இத்தகைய சூழ்நிலைகளில் இருந்து நாமே விடுபட வேண்டுமாக இருந்தால், எமக்கென்று ஒரு நாடு இருக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

உயர் கல்வியைப் பொறுத்தவரையில் 18 ஆயிரம் பேர் பரீட்சைக்கு தோற்றினால் வெறும் 800 பேர் மட்டுமே உயர் கல்விபெற வாய்ப்பளிக்கப்படுகின்றனர்.

இதிலும்கூட, 400 பேருக்கு மட்டுமே வேலை வாய்ப்புக் கிடைக்கின்றது.

உயர் கல்வி வாய்ப்பை இழந்தவர்கள் தொழிலைப் பெறுவதாக இருந்தால்கூட ஒரு ஸ்திரமான தொழிலைப் பெறமுடியாத நிலைமையே காணப்படுகின்றது, தொழிலைப் பெற வேண்டும், தொழில் பாதுகாப்பைப் பெறவேண்டுமாக இருந்தால் எமக்கென்று ஒரு நாடு இருக்க வேண்டியது அத்தியாவசியம் ஆகும்.

எமக்கென்று ஒரு நாடு வேண்டும் என்று போராடும் மக்களுக்காகத் தலைவர், அரசியல், இராணுவ, இராஜதந்திர ரீதியாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். எமது நாட்டின் விடிவுதான் எமது தேசியத் தொழிலாளர்களின் விடிவாகவும் அமையமுடியும்.

மலைநாட்டில் கந்தப்பொலவில் எமது சகோதரத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டும் கொலைசெய்யப்பட்டும் உள்ளனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இத்தகைய ஒருநிலைமையும் சூழ்நிலையும் எமது சகோதரர்களுக்கு ஏற்பட இடமளிக்கக்கூடாது.

இம்மண்ணில் எத்தனை ஆயிரம் இராணுவ வீரர்கள் ஆயுதங்களுடன் நின்றாலும்கூட எமது மக்களின் எண்ணங்களும் செயற்பாடுகளுமே வெற்றி பெறும். இந்தவகையில் இரண்டு நாள்களுக்கு முன்னர் போராளிகள் என்று தெரிந்து கொண்டும் தாக்கிய பொலீஸாரை உரிய இடத்திற்குப் போராளிகளின் வாகனத்தைக் கொண்டு வந்து கொடுத்து அவர்களிடம் மன்னிப்பும் கேட்கச் செய்யும் வல்லமை உடையவர்களாக மக்கள் இருக்கின்றார்கள்.

முன்னாள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் "இலங்கை அரசமைப்பை மீள அமைக்க சந்திரிகா முயன்றால் இதற்குச் சமமாகத் தமிழ் மக்களும் தமது அரசமைப்பை உருவாக்குவார்கள் என்று கூறியுள்ளார். இது தமிழ் மக்களுடைய எண்ணங்கள், சிந்தனைகளைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

சிங்களப் பாட்டாளி மக்கள் சிங்களப் பேரினவாதிகளினதும் இன விரோதிகளினதும் பிடிகளில் இருந்தும் விடுபடவேண்டும். தமிழ்த் தேசிய இனத்தின் தன்மான சுய நிர்ணய வாழ்வுக்கு இணைந்து வழி சமைக்க உதவவேண்டும் எனச் சிங்களத் தொழிலாளர் வர்க்கத்திடம் வேண்டுகின்றோம்.

'இதுவரை காலமும் தமிழர்களின் போராட்டத்திற்குச் சர்வதேச சமூகத்தின் செயற்பாடும் ஆதரவும் எதிர் மறையாக இருந்தன. ஆனால், இன்று நிலைமை மாறி சர்வதேசத்தின் ஆதரவு இப்போராட்டத்திற்கு உண்டு என்று ஜப்பான் நாட்டுப் பத்திரிகையாளர் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தமை சிந்திக்கத்தக்கது.

அரசு தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை ஏற்று அதற்கு மதிப்பளித்து உண்மையுடன் நடக்கவேண்டும். தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை ஏற்று அதற்கு மதிப்பளிக்கப்படுமாக இருந்தால் அரசு நோர்வேயிடம் கேட்டுக்கொண்டதற்கு இசைவான முடிவை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அரசு மக்களுடைய பிரச்சினையை உண்மை நிலையுடன் ஏற்று மதிப்பளித்து செயற்படும் சந்தர்ப்பம் காணப்பட்டால் பேச்சுக்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படத் தலைமையும் வழிசமைக்க முன்வரலாம் - என்றார்.

### ஸ்ரீகாந்தா உரை

ரெலோ முதல்வரும் சட்டத்தரணியுமான என்.ஸ்ரீகாந்தா தமது உரையில் கூறியதாவது:-

மே தினத்தைச் சர்வதேச தொழிலாளர் தினமாகக் கொண்டாடுவதுதான் வழக்கமாகும். இலங்கையில் இன, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் தொழிலாளர்கள் ஒன்றுபட வேண்டும் என்ற கோஷம் இடதுசாரிகளால் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்து 8 மாதங்களுக்குள் 1948 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை, அன்றைய சிங்கள அரசால் திட்டமிட்டுப் பறிக்கப்படடது. இதனை அன்றைய சிஙகள இடதுசாரித் தலைவர் நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் எதிர்த்தனர்.

ஆனால், 1956 இல் சிங்களம் மட்டும் கோஷத்துக்கு இடது சாரித் தலைவர்களில் ஒருவரான பிலிப் குணவர்த்தனா துணைபோனார். அந்த நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்த சமசமாஜ, கம்யூனிஸ்ட் தலைவர்கள் 10 வருடங்களின் பின்னர் 1966 இல் டட்லி - செல்வா ஒப்பந்தத்தின் பிரகாரம் கொண்டுவரப்பட்ட தமிழ்மொழி விசேட விதிகள் சட்டத்தை எதிர்த்துக் கொழும்பில் ஊர்வலம் நடத்தினர்.

இதேபோல, மலையகத் தமிழ் மக்களில் சுமார் ஐந்தரை லட்சம் பேரை இந்தியாவுக்கு அனுப்ப வழி வகுத்த ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் அங்கம் வகித்த கூட்டரச காலத்தில் 1964 இல் கையெழுத்தானது.

மேலும் "ஒரு மொழி இருநாடுகள்", "இரு மொழிகள் ஒரு நாடு" என்ற தீர்க்க தரிசனத்தை 1956இல் தெரிவித்த சமசமாஜத் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா 1972இல் ஸ்ரீலங்கா குடியரசு அரசமைப்பைத் தயாரிப்பதில் அரசமைப்பு விவகார அமைச்சர் என்ற வகையில் முன்னணி வகித்தார்.

தமிழ் அரச ஊழியர்கள் சிங்களம் படிக்க நிர்ப்பந்திக்கப்பட்ட 1960 களில் இடது சாரித் தலைவர்கள் அவர்களைக் கைவிட்டனர். இதுதான் இடதுசாரிகளின் வரலாறு.

இதனால்தான் இலங்கையில் தொழிலாளர் தினமான மே தினத்தைத் தம் தொழிலாள வர்க்கம் தமிழ்த் தேசிய எழுச்சியுடன் இணைந்தே கொண்டாடி வந்திருக்கின்றது - என்றார் அவர்.

### மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர்

மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி தமது உரையில்:-

எமது விடுதலைப் போராட்டத்தின் மூலம் எமக்கென ஒரு தேசத்தை அமைக்கமுடியும்.

எமது விடுதலைப் போராட்டத்தில் தேச விடுதலைக்காக உழைக்கும் தொழிலாளர்களின் பணி முக்கியமானதாகும்.

ஒரு தேசத்தை உருவாக்கவேண்டுமானால் அந்த தேசத்தில் நாட்டுக்காக உழைக்கும் மக்கள் கூட்டம் வேண்டும்.

தேசத்திற்கு என உழைக்கும் தொழிலாளர்கள் மூலம்தான் தேசத்தை முன்னேற்ற முடியும்.

உழைக்கும் மக்களுக்கு எந்தவொரு நெருக்கடிகள், அழுத்தங்கள், சுமைகள் இருக்கக்கூடாது.

எமது தேச விடுதலைக்காக உழைக்கும் தொழிலாளர்களைக் கௌரவிக்கும் நாளாக இந்த மே தினத்தை நாம் கொண்டாடுகிறோம் - என்றார்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவனேசன் தமது உரையில்:-

இந்த மண்ணில் சுதந்திரமாக வாழும் சூழல் ஏற்படுத்தப்படவேண்டும். இன்று இருக்கின்ற அரசியல் சூழலில் எமது தேசியத் தலைமையின் கீழ் அணிதிரண்டு நிற்க இந்த மேதினத்தில் உறுதியெடுத்துக் கொள்ளவேண்டும் - என்றார்.

### பத்மினி நா.உ.

நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தமது உரையில்:-

எமது விடுதலைப் போராட்டம் மூலம் சகல ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் குரல் கொடுத்து வந்துள்ளோம்

அகிம்சை ரீதியிலான போராட்டம் வெற்றியளிக்காத நிலையில் ஆயுதப் போராட்டமாகத் தமிழீழ விடுதலைப் போராட்டம் வலுப்பெற்றது.

ஒடுக்குமுறைகளில் அடக்குமுறைகளில் இருந்து விடுபடவேண்டும் என்ற நோக்கத்திற்காக மக்கள் விடுதலைப் போராட்டத்துடன் பலமாக இணைந்து நிற்கின்றார்கள்.

அண்மையில் நடைபெற்ற தேர்தல்கூட தமிழர்கள் அடக்குமுறைகளில் இருந்து விடுபட்டு சுயநிர்ணய உரிமையோடு வாழவேண்டும் என்ற மக்களின் எண்ணங்களின் வெளிப்பாடுதான் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஜி.ஜி.கஜேந்திரகுமார் மற்றும் தமிழாசிரியர் சங்கச சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம், விரிவுரையாளர் க.குமரவடிவேல், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ப.பகீரதன், சிற்றூர்த்திச் சேவைச் சங்கச் செயலாளர் சேரன் சிவராசா, சிகை அலங்கரிப்பாளர் சங்கத் தலைவர் எஸ்.அல்பிரட் உட்படப் பலரும் உரை நிகழ்த்தினர். (எ-3-4-6-7-12- -86)

## கைப்பணிப் பொருள் உற்பத்தியை மேம்படுத்த கிளிநொச்சியில் கண்காட்சி

வலி. மேற்கு,மே3

வடக்கு - கிழக்கு மாகாணக் கைப்பணிப் பொருள்களின் உற்பத்தியை மேம்படுத்தும் முகமாக மாபெரும் கைப்பணிப் பொருள் கண்காட்சி ஒன்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சிக்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணத் தொழிற்துறைத் திணைக்களப் பணிப்பாளர் ஆர்.விஸ்வலிங்கம் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பிரதேச செயலர்களுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்

அந்தக் கடிதத்தில்:-

கண்காட்சியில் கைத்தறித்துணிகள், கைப்பணிப் பொருள்களைக் காட்சிக்கு அனுப்ப விரும்புபவர்கள் தமது விவரங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5-175)

## அனுமதி இன்றி மதுபானம் விற்ற நால்வருக்கு ரூ.26 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,மே3

அனுமதிப்பத்திரம் இன்றி மது பானம் விற்பனை செய்த நால்வருக்கு யாழ். நீதிமன்றம் 26ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

கோண்டாவில் மேற்கு, ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்த சசிகரன் இரஞ்சிதமலர், யாழ். மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தைச் சேர்ந்த இராசதுரை மகாலட்சுமி ஆகியோரைத் தலா மூவாயிரம் ரூபா தண்டப்பணமாகவும் இரண்டாயிரம் ரூபா தர்மப்பணமாகவும் செலுத்துமாறும் -

பூங்கா வீதி, குருநகரைச் சேர்ந்த அலோசியஸ் இராசேஸ்வரி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த கந்தையா இராஜன் ஆகியோரைத் தலா 5 ஆயிரம் ரூபா தண்டப்பணமாகவும் 3 ஆயிரம் ரூபா தர்மப்பணமாகவும் செலுத்துமாறும் யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார். (எ-6-5)

## எந்தவகை உதவி கேட்டாலும் இந்தியா இலங்கைக்கு வழங்கும்

### இந்திய வெளியுறவு அமைச்சர் யஷ்வந்த் சிங்கா

புதுடில்லி,மே.3

இலங்கை அரசு எந்தவகை உதவி கேட்டாலும் அந்தவகையில் உதவிபுரிய நாம் தயாராக இருக்கிறோம் - என்று இந்திய வெளியுறவு அமைச்சர் யஷ்வந்த் சிங்கா கூறியிருக்கிறார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் பேச்சுக்களை முடித்துக்கொண்ட பின்னர் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையுடனான உறவுகளில் இந்தியா மிகஉயர்ந்த மதிப்பு வைத்திருக்கின்றது. இலங்கையின் புதிய அரசுடன் இந்த உறவை இன்னும் மேம் படுத்திக்கொள்ளவும், அதனை ஆழமாகவும் நெருக்கமாகவும் வளர்த்துக்கொள்ளவும் விரும்புகின்றோம் - என்றார் அவர். (ப)

## யோகாசனப் பயிற்சி



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் யோகாசனப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுவருகின்றன. பயிற்சியின்போது எடுக்கப்பட்ட படம். (எ)

## மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி,மே3

மீசாலை வடக்கு அறிவொளி முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப. 2.00 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் த.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜும் சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா, தென்மராட்சி மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் செல்வி அன்பு ஆகியோரும் கலந்துகொள்வர்.(எ-117)



உ
ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ!



# யாழ். வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய

## (நாச்சிமார் கோயில்)



# தேர்த்திருவிழாச் சிறப்புமலர் - 03.05.2004



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



வண்ணையில் எழுந்தருளியிருக்கும் அன்னையாம் ஸ்ரீகாமாட்சி அம்பிகை இன்று தேரேறி வருகின்றாள். அழுது தொழுது நிற்கும் அடியார்களின் அல்லல் களைந்து, இன்னல் போக்கி துன்பம் துடைக்கும் தாயவளாக அம்பிகை சித்திரத்தேரினிலே பக்தர்களுக்கு அருட்காட்சி அளிக்கின்றாள்.

இன்றைய தேர்த்திருவிழா ஒரு பொன்னான நன்னாள். மஹோற்சவத்திலே ரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். ஆகவே, அம்பிகை அகந்தையை அழித்து, அசுரத் தனத்தை ஒடுக்கி ஆணவத்தை அடக்கும் தேவியாகத் தேரேறிப் புறப்பட்டுவிட்டாள். இனிமேல் நல்லதே நடக்கப்போகிறது. தீயவை அழியப்போகின்றன. அவளது எல்லையில்லாத பேரருட் கருணை எல்லோருக்கும் கிடைக்கவேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து நல்லாசிகளை வழங்குகின்றோம்.

ஆதிபராசக்தியானஅம்பிகை காமாட்சியின் திருவருள் நிறைந்த பரிபூரண கிருபாகடாட்சம் அனைவருக்கும் கிட்ட நல்லைக் குருமணியின் திருவடி தொழுது அமைகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.



## தாயே காமாக்ஷி அருட்காட்சி தாராய்!

சித்திரத் தேரேறிவரும் சிங்காரவல்லி நீயே
தாயே காமாட்சி நீ அருட்காட்சி தாராய்!
இத்தரை மீதிலென்றும் இங்கிதமாயருள் புரியும்
இராஜராஜேஸ்வரியே இரதமேறி வருக!
பத்தரை மாற்றுப் பொன்னாய் பட்டொளி வீசும் தாயே
பக்தருக்கருள் புரிய திருவீதி வலம் வந்து
அத்தினமதிலே இரட்சிக்க வேண்டும் அம்மா !
வண்ணை காமாட்சியே வந்தெ மையாள்வாய்!

அம்பிகையே காமாக்ஷி அருள்புரிய வேண்டும்
ஆதரித்தே எமைக் காப்பாய் இராஜேஸ்வரி நீயே
நம்பி வந்தோம் அம்மா! நாடி வந்தோம் எம் தாயே!
தேரேறி வருகின்ற தேவியே சரணம் அம்மா!
தும்பிமுகனும் தம்பியும் அருகே சூழ்ந்து வர
வீதிவலம் வருகின்ற அருட்காட்சிகண்டோம்
வெம்பி அழுதே நாமும் வேண்டுதல் செய்தோம் தாயே!
வெற்றியைத்தந்து காத்தருள்வாய் அம்மா!

- காமாக்ஷி பக்தன்

# அழகிய தேரிலே ஆரோகணிப்பாய் அம்மா!



- சிவநெறிக் கலாநிதி -
இராசையா ஸ்ரீதரன்

ஆதிபராசக்தியான உலோகமாதாவானவள், மதுரையிலே மீனாட்சியாகவும் காசியிலே விசாலாட்சியாகவும் காஞ்சியிலே காமாட்சியாகவும் எழுந்தருளி வீற்றிருந்து திருவருள் புரிகின்றாள். ஈழமணித் திருநாட்டிலே யாழ். வண்ணை மாநகரினிலே பொற்றொழிலாளர்களின் குலதெய்வமாக விளங்கும் ஸ்ரீ காமாட்சி அம்பிகையானவள் வழிபடும் அடியார்களின் தொல்வினை களைந்து நல்லருள் புரியும் நோக்கில் எழுந்தருளியிருக்கும் திருத்தலந்தான் நாச்சிமார் கோயில், இன்று இங்கே தேர்த்திருவிழா.

இந்த நாச்சிமார் கோயிலிலே நான்மறைகளேந்தும் நாயகியாக அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாள் வீற்றிருந்து திருவருள் பாலிக்கிறாள்.

இன்று அன்னை ரதமேறிப் புறப்பட்டுவிட்டாள். சித்திரத்தேரிலே - சித்திரைப் பெருவிழாவிலே - சிங்காரப்பவனிவரும் சிங்காரக்காட்சி சிந்தையைக் குளிரவைக்கும் சிறந்ததொரு காட்சியாகும். விக்கினந்தீர்க்கும் விநாயகர் முன்னே வர, வில்லங்கம் போக்கும் வேலவன் அடுத்துவர, பொல்லாவினை நீக்கும் நல்லோர் வணங்கும் காமாக்ஷி அம்பிகை சர்வாலங்கார பூஜிதையாக அழகிய தேரிலே ஆரோகணித்து வரும் காட்சி பக்திபூர்வமானது.

எல்லோருக்கும் அருள்புரியும் அம்மை காமாட்சி அன்னைக்கு அன்னையாக, தாய்க்குத் தாயாக, லோகமாதாவாக வீற்றிருக்கும் அற்புதக்காட்சி காண்பதற்கரியது. இந்தக் காமாட்சியம்மன் ஆலயம் காங்கேசன்துறை வீதியிலே கம்பீரமாக விளங்கும் இராஜ கோபுரத்துடன் கவின்மிகு தலமாகக் காட்சியளிக்கின்றது.

## கடைக்கண் பாராயோ காமாக்ஷித்தாயே!

'நம்பினார் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு, அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாமே' என்றபடி வேதநாயகியாக விளங்கும் நாத சொரூபியான அன்னை அருளை அள்ளிச்சொரியும் அற்புத ஆலயம் இந்த நாச்சிமார் கோயில்.

இந்தக்கோயில் தேர்வடம் பிடித்திழுத்தால் சொர்க்கத்திலே ஓர் இடம் பிடிக்கலாம் என்ற நம்பிக்கையோடு நேர்த்திகளைப் பூர்த்திசெய்யவரும் அடியார் திருக்கூட்டம் அலைமோதும் காட்சி அருமையான காட்சியன்றோ!

ஆகவே, அம்பிகை அடியார்களாகிய நாமும் அவளது பாதாரவிந்தங்களைப் பணிந்து வாழ்த்திப் போற்றித் துதித்து நற்கதியடைய அவளருளையே நாடிநிற்போமாக.

## தேர்த்திருவிழாச் சிறப்புற வாழ்த்துவோர்:


திருமணப்பட்டுப் புடைவைகளுக்கும், தரமான துணிவகைகளுக்கும் தவறாமல் நாடவேண்டிய இடம்:
**அபிராமி புடைவையகம்**
155, 156, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

அசல் 22 கரட் தங்க நகைகளை நவீன டிசைன்களில் செய்திட
**காயத்திரி நகைத் தொழிலகம்**
பழைய, புதிய சினிமாப் படப்பிரதிகளை CDயிலிருந்து நேரடியாகப் பதிவுசெய்து பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள நாடவேண்டியது:
காயத்திரி வீடியோ விஷன்
637, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777 - 111024

வெயிலில் நடந்து களைத்துவிட்டீர்களா? தாகமாயிருக்கின்றதா? குளிர்பானம் அருந்தவேண்டும் போலிருக்கிறதா! கவலையை விடுங்கள்! உடனே விரையுங்கள்:
**லிங்கம் கிறீம் ஹவுஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தரமான அழகிய அச்சுவேலைகளுக்கு நம்பிக்கையாக நாடுங்கள்:
**சாந்தி அச்சகம்**
575, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார்கோயிலடி.
Tel.: 222 2821

அசல் 22 கரட் தங்கத்தில் ஓடர் நகைகளைக் குறித்த தவணையில் நவீன டிசைன்களில் அழகாகச் செய்து பெற்றுக்கொள்ள:
**பாஸ்கரன் நகைத் தொழிலகம்**
உரிமையாளர்: குலசிங்கம் பாஸ்கரன்
சம்பந்தர் கடையடி, கரவெட்டி.
மாலுசந்தி, அல்வாய்.

சித்திர வேலைப்பாடு நிறைந்த அழகிய ஓவியங்களுக்கும், பெயின்ற் வேலைகளுக்கும் சிறந்த இடம்:
**க.அப்பன் ஆட்ஸ்**
576, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

ருசிமிக்க உணவு வகைகளுக்கு சுகாதாரம் நிறைந்த இடம்:
**நீலாம்பரி உணவகம்**
526, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

நல்ல ரகமான பலசரக்குப் பொருள்களுக்கு தவறாமல் நாடுங்கள்:
**லிங்கம் ஸ்ரோர்ஸ்**
603, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார்கோயிலடி.

சைக்கிள் உதிரிப்பாகங்களுக்கும் பூட்டு வகைகளுக்கும் சிறப்பான நல்ல இடம்:
**கிருஷ்ணபிள்ளை & சன்ஸ்**
1155 (615), கே.கே.எஸ். வீதி, நாச்சிமார்கோயிலடி.

மோட்டார் உதிரிப்பாகங்களுக்கும் மற்றும் மின்சாரப் பொருள்களுக்கும் நம்பிக்கையான இடம்:
**ரவி மோட்டேர்ஸ்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஓவிய வேலைகள், பிளாஸ்ரிக் எழுத்து வேலைகள் செய்து பெற்றுக்கொள்ளவும்
ISO 9001 தரச்சான்றுபெற்ற Multilac பெயின்ற் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஓம்சக்தி வர்ணமஹால் ரூபன் ஆட்ஸ்
896, கே.கே.எஸ். றோட், நாச்சிமார்கோவிலடி.

அலங்காரக் கட்டிங் வேலைகளுக்கு நம்பிக்கையான இடம்
**சாருணி ஜுவல் கட்டிங் வேக்**
74, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

தரமான பலசரக்குப் பொருள்களுக்குச் சிறந்த இடம்
**துளசிகா களஞ்சியம்**
1004, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார்கோயிலடி.

அசல் 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்துகொள்ள நாடுங்கள்:
**சடாச்சரம் அன் சன்ஸ்**
219, கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

நவீன பாணியிலமைந்த தங்க நகைகளுக்குச் சிறந்த இடம்:
**நியூ இந்திரன் ஜுவலர்ஸ்**
213A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**இந்திரன் ஜுவலர்ஸ்**
இல. 10, நவீன சந்தை, சாவகச்சேரி.

மின்சார உபகரணங்கள், T.V. அன்ரனாக்கள், பைப் வகைகள், போட்டோப் பிரதிகளுக்கு நாடுங்கள்:
**ரஜீவன் எலக்ரிக்கல்ஸ்**
1008, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார்கோவிலடி.

**கவியரசு நகைப்பூங்கா**
இரத்தினக் கல் வியாபாரம்
190, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: கவியரசு ஆயுத விற்பனையகம்
859, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**துர்க்கா ஜுவல் & மெசின் கட்டிங்**
அல்வாய் வீதி (காமாட்சி அம்மன் கோவிலடி), மாலுசந்தி.

சகலவிதமான கேற் கிறில், இரும்பு வேலைகளும் செய்துகொடுக்கப்படும்.
**சிறி அம்பாள் எலெக்ரிக்கல்ஸ்**
1039, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

இல்லங்களில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு பந்தல் சேவையினைப் பெற்றிட நாடவேண்டிய இடம்:
**அம்பாள் பந்தல் சேவை**
596/4, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 5067



நவநாகரீக நங்கையருக்கேற்ற தங்க நகைகளை தரமாகச் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:
**வைஷ்ணவி நகைப் பூங்கா**
பிரதான வீதி, நெல்லியடி.

நவநாகரீக நவீன டிசைன்களில் தங்க நகைகளை தரமாகச் செய்திடவும் உறுதியான வேலைப்பாட்டுக்கும் உத்தரவாதத்துக்கும்
**ரூபி நகைமாளிகை**
111/1, 227 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel.: 021 222 2828, 021 222 5128, 0114516511

(சி-34855) (24-13)



ஓம் சக்தி

# கொக்குவில் , தா

# அருள்தரும் அன்னை ஸ்ரீ வடபத்

# தாரண வருஷ இரதே

03.05.2004 திங்கட்கிழமை சி





## பக்தருக்கருள் புரியும் பத்திரகாளித் தாயே!

கொக்குவில் தாவடி தெற்குக் கிராமத்திலே வடதிசை நோக்கி எழுந்தருளி வேண்டுவார்க்கு வேண்டும் வரம் தந்து காத்து அருள்பாலிக்கும் அன்னை ஸ்ரீ வடபத்திரகாளியின் அருள் பிரவாகம் அளவிட முடியாது.

அடியார்களினால் 'எங்கடை ஆச்சி' , 'பத்திரகாளி ஆச்சி' என அன்பு ததும்பச் செல்லமாக அழைக்கப்படுபவள். கிராம மக்கள் தாம் எண்ணும் கருமங்களின் சிந்தனையில் ஆச்சிக்கே முதலிடம் கொடுப்பவர்கள். இன்றும் அவளின் அற்புத அருளுக்குப் பாத்திரராகிப் பயத்துடனும் பக்தியுடனும் வழிபடுபவர்கள். இத்தகைய சிறப்புப் பெற்ற எங்கள் பத்திரகாளியின் தல வரலாறு மகத்துவமானது.

சுமார் 48 நிலப்பரப்பளவைத் தன்னகத்தே சுற்றாடலாகக் கொண்டு அமர்ந்திருந்து அருளாட்சி செய்பவள். சரித்திரம் தெரிந்தவரை 200 வருட காலத்திற்கு முற்பட்ட காலப்பகுதி வரையறை தெரியாத சரித்திர வரலாறு கொண்டவள் எங்கள் ஆச்சி.

உறவு முறை கொண்ட நான்கு அந்தண சிரேஷ்டர்கள் அம்பாள் ஆலயம் அமைய அத்திவாரமிட்டவர்கள். முதலில் மண் கோயிலாக மடம் கட்டி அதில் அம்பாளை வைத்து வழிபட்டதாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. வளர்ச்சிப் படிமுறையில் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டு ஓலைக் கொட்டிலில் அம்பாளின் வழிபாடுகள் வளர்ச்சியடைந்தது. வளர்ச்சியின் அடுத்தநிலையில் ஆலயத்தை மெருகூட்ட எடுத்த முயற்சி வெள்ளைக் கற்களினால் அதை உருவாக்கும்வரை நிறைவேறியது. இக்காலப்பகுதியில் இடம்பெற்ற அற்புதங்கள் பல அளவிடமுடியாதவை.

ஆலய சுற்றாடலில் அன்னையின் நடமாட்டம் அதிகமாக இருக்கும். அடியார்கள் அவ்வழியே செல்வதற்கு அஞ்சுவர். இன்றும் பல அடியார்கள் இதை நினைவுபடுத்தும் போது மெய்சிலிர்க்கும். காலக் கிரமத்தில் அம்பாளின் திருவுருவில் ஏற்பட்ட சிறு பின்னல் காரணமாக 1965ஆம் ஆண்டில் புதிய அம்பாள் பிரதிஷ்டை பண்ணும் தேவைக்கு வழிகோலியது. எனினும், இன்றும் ஆலய உள் பிரகாரத்தில் பின்புறத்தில் ஆதி அம்பாள் வீற்றிருந்து அருள் வழங்குவது சிறப்பம்சமாகும்.

தினமும் மூன்று நேரப் பூசைகள் நேரம் தவறாமல் நடைபெறும் எமது ஆலயத்தில் சித்திரா பௌர்ணமியைத் தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு 15 தினங்கள் மஹோற்சவம் வெகுசிறப்பாக நடைபெறும். இக்காலப்பகுதியில் ஆலயமும் சுற்றாடலும் கிராமமும் கோலாகலமாகக் காணப்படும்.

இந்த ஆலயத்தில் கௌரி நோன்பு, நவராத்திரி விழா நாள்களும் சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. குடாநாட்டின் பல பகுதிகளிலும் மற்றும் வெளிநாடுகளிலிருக்கும் அம்பாள் அடியார்களும் நோன்புக் காப்பை வந்து பெற்றுக்கொள்வார்கள்.

இவற்றுடன் தைப்பொங்கல், மாசி மகம், பங்குனித் திங்கள், வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிச் செவ்வாய், ஐப்பசி வெள்ளி, கார்த்திகைத் திங்கள், மார்கழித் திருவெம்பாவை போன்ற அனைத்து மாதாந்த உற்சவங்களும் சிறப்பாக நடைபெறும்.

மாசி மாதக் கடைசி வெள்ளிக்கிழமையில் அம்பாளுக்கு விளக்கேற்றும் வைபவம் நடைபெறும். பங்குனி மாத முதல் வெள்ளிக்கிழமை அம்பாள் அழகிய காராம்பசு வாகனத்தில் அடியார்கள் புடைசூழ எழுந்தருளி கிராம ஊர்வலம் வந்து அடியார்கள் குறைகள் களையும் திருக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழியெங்கும் பூரண கும்பங்களும் அடியார் கூட்டங்களும் அம்பாளை வரவேற்றுத் தம் குறை கூறி அருள் பெறுவர்.

கிராம ஊர்வலத்தின்போது அடியார்களின் வெப்ப நோய்களை அம்பாள் தன்னகத்தே எடுத்து அருள் வழங்குவதான அற்புதம் தனித்துவமானது. அம்மா, பிள்ளையார், முருகன் பிள்ளைகள் இருவரையும் மற்றும் தோஷ நிவர்த்தி செய்யும் நவக்ரக நாயகர்களையும் பைவரர், சண்டேஸ்வரி உள்ளிட்ட பரிவார மூர்த்திகளையும் கொண்டு எழுந்தருளி அருளாட்சி செய்யும் திருக்கோலம் காணக்கண் கோடி வேண்டும்.

ஆதிகாலம் முதல் இன்றுவரை அடியார்களின் பூரண ஒத்துழைப்புடன் அர்ச்சகரே ஆதீனகர்த்தாவாக இருந்து அனைத்துத் திருப்பணி வேலைகளையும் கவனித்து ஆலய வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டு வருவது சிறப்பம்சமாகும்.

இன்றைய இரதோற்சவ சிறப்பு நாளிலே அவள் தாள் பணிந்து நாட்டில் சமாதானம், சாந்தி நிலைபெற்றிடப் பிரார்த்தித்து வணங்கி எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டி வழிபட்டுத் தேர் வடம் பிடிப்போம் வாரீர்.

ஓம் சாந்தி - எல்லாம் சக்திமயம்.

## தேர் வடம்பிடித்திங்கு தேவி வரம் பெறுவீர்!



அங்கிங்கெனாதபடி எங்கனும் நிறைந்து விளங்கும் திருவருட் சக்தி ஆன்மாக்கள் மீது கொண்ட முகிழ்ந்த பெருங் கருணையினால் குவலயம் எங்கும் குடிகொண்டு அருள் பொழியும் பதிகளில் ஒன்றாக வரும் அடியார் இடர் களைந்து அருள் வாரி வழங்க ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் எனத் திருநாமம் கொண்டு உறையும் இடம் கொக்குவில் தாவடிப் பதியில் பொலிவுற்று விளங்குகின்றது.

அன்னையின் அருட் கடாக்ஷத்தில் கல்வியும், கமமும் கலையும் சிறப்புற்று மக்கள் சீருடன் வாழ்ந்து வருகிறார்கள். அகிலாண்ட நாயகியான காளிக்கு ஆண்டுதோறும் குளிர்த்தி, நவராத்திரி, கௌரி நோன்பு, திருவெம்பாவை போன்ற பல விழாக்களுடன் பிரம்மோற்சவமும் சிறப்புற நடைபெற்று வருகின்றது. இப்படி அடியார்களால் ஆராதிக்கப்படும் அன்னையின் வருடாந்த மஹோற்சவம் இம்முறை மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்று இன்று தேர் உற்சவம் நடைபெறுகின்றது.

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைதல் ஆகிய ஐந்தொழில்கள் மூலமாக இவ்வையகத்தை அருளாட்சி புரியும் அன்னை, அழகிய திருக்கோலங் கொண்டு தேரில் ஆரோகணித்து அருள் வலம் வந்து அடியார்கள் அல்லல்கள் அறுத்து அருள் வாழ்வு அளிக்கின்றாள்.

நால் வேதங்களைச் சக்கரங்களாகவும் நான்முகனைச் சாரதியாகவும் கொண்டு நாயகியாம் பத்திரகாளி சம்ஹாரம் செய்யப் புறப்படும் இவ்விழாவின் தத்துவமானது பிரம்மனால் படைக்கப்பட்ட நாம் அவர் வழி நடத்தலில் இதயத்தில் இறைவியை இருத்தி வேதங்கள் கூறும் வழிநடந்து உலகியலில் ஏற்படும் இன்ப துன்பங்களைச் சம்ஹாரம் செய்து ஈற்றில் பரம்பொருளின் பதம் அடையவேண்டும் என்பதாகும். இத்துணைச் சிறப்புப் பொருந்திய தேர்த்திருவிழா சிறப்புற ஸ்ரீ வட பத்திராளியை என் சிந்தையிலிருத்தி வாழ்த்துகின்றேன்.

அன்னையைப் பூசிக்கும் அர்ச்சகரும், ஆரம் சூட்டி ஆராதிக்கும் அன்பரும் இசையினால் இறைஞ்சிடும் கலைஞரும், ஆனந்தத் தரிசனத்தில் ஆட்படும் பக்தரும் சிந்தையில் அன்னையைச் சிறைபிடித்த சீலரும் விரதங்கொண்டு வரம்பெறும் வனிதையரும் நாமங்கள் பாடி நலம் பெறும் புனிதரும் வடம்பிடித்து இருந்து தேவியை வணங்கிடும் அடியாரும் சகல சௌபாக்கியங்களும் பெற்றுச் சிறப்புற்று வாழ யாதுமாகி நிற்கும் காளியை என் மனத்துள் நிறைத்து அனைவருக்கும் நல்லாசிகள் கூறி அமைகின்றேன்.

*"எல்லோரும் இன்புற்றிருப்பதுவேயல்லாமல்*
*வேறொன்றும் யான் அறியேன் பராபரமே"*

மஹோற்சவக் குருமணி
வேதசிவாகம வித்வத் ஜோதி
**பிரம்மஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள்**
இணுவில்.


**சிறி நதியா நகை மாளிகை**
இல . 1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளைகள்: சானுயா நகை மாளிகை,
சிறி ரூபா நகை மாளிகை.

**காவேரி மெடிக்கல்ஸ்**
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி.

வேண்டும் வரமளித்
திருவருளால் ந
எல்லோரும் இன்புற்

**காவேரி சில்க்**
இல.48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

**பேபி கூல்பார்**
கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டி, கொக்குவில்.

**ஆனந்தகீ**
31, மத்திய
K.K.S. வீதி,

**கிங்ஸ்ரன் எலக்ரோனிக்ஸ் அன் சேவிஸ் சென்ரர்**
37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
காட்சி அறை : 62/30 ஸ்ரான்லி குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

**A.S.N.தொலைத்தொடர்பகம் அன் சாயி ஓ(f)ப்செற் பிரின்டேர்ஸ்**
வன்னியசிங்கம் வீதி, தாவடி, கொக்குவில்.
தொ.பேசி இல: 021 222 3527 & 021 222 6292

**ஐங்கரன் பான்**
**அன் ஓடியே**
பிள்ளையார் கோயிலடி
தாவடி வடக்கு,

**செந்தூரன் எலக்ரோனிக் அன் ஹாட்வெயார்ஸ்**
கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி.

**விநாயகர் தொலைத்தொடர்பகம்**
தாவடிச் சந்தி, கொக்குவில்.

**கஜன் மோ**
54, மணிக்க
யாழ்ப்பா

**மகாலட்சுமி தேநீர் அகம்**
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,

**அண்ணா தொழிலகம்**
இணுவில் தெற்கு, இணுவில்.
தொ.பேசி இல : 021 222 3565 & 021 222 2570


**சந்திரன் பா**
நவாலி றோட், அ
தொ.பேசி 0

உ
ஓம் சக்தி

## ..., தாவடி தெற்கு
# ...பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
# ...தோற்சவச் சிறப்பிதழ்

...மை சித்திரைத் திங்கள் 21ஆம் நாள்





## எங்கள் குலதெய்வம் வடபத்திரகாளி

இப்பூதலத்தில் மானிடராகப் பிறந்த நாம் எம் பிறப்பின் மகிமையை அறிந்து எம்மைப் படைத்த பரம்பொருளுக்கு ஆகம வழி நின்று ஆலயம் அமைத்து பூஜை வழிபாடுகள் இயற்றி நாமும் வாழ்ந்து உலகத்து உயிர்களும் உய்யும் பொருட்டு பல விழாக்களையும் செய்து வருகின்றோம்.

எங்கும் நிறைந்த பராசக்தி தாவடிப் பதிதன்னில் அழகுற எழுந்த ஆலயததில் ஸ்ரீ வடபத்திரகாளி தாயாக வீற்றிருந்து தன்னை மனமுருக தொழும் அடியார்களின் இன்னல்கள் களைநது அருள்நிறைந்த பெருவாழ்வு அளித்து வருகின்றாள்.

எம் முன்னோரால் ஆராதிக்கப்பட்ட காளித்தாயின் கோயில் இன்று பெரும் ஆலயமாக வளர்ச்சி கண்டு, இன்று கோபுரத் திருப்பணிகளில் முனைப்புற்று நிற்கின்றது. எமது ஆலயத்தின் மஹோற்சவம் சித்திரா பௌர்ணமியை தீர்த்த வாரியாகக் கொண்டு பதினைந்து தினங்கள் பெருவிழாவாக நடைபெற்று வருவது வழக்கம். இம்முறை இவ்விழாவின் முன்னேற்பாடாக ஆலயம் முழுவதும் அழகுற வர்ணம் தீட்டப்பட்டு முக்கியமாக ஆலயத்தின் முன்னைய சரித்திரம் ஆலயச் சுவர்களில் சித்திரங்களாகத் தீட்டப்பட்டது சிறப்பம்சமாகும்.

காளி அம்மனின் பராக்கிரமத்தை அறிந்து இன்றைய தேர்த் திருவிழாவுக்கு நாலாபுறத்திலிருந்தும் வரும் அடியார்களுக்கு அருள் மழை பொழிய அன்னை தேரில் வீற்றிருந்து திசை எட்டும் வலம் வரும் இன்றைய விழா சிறப்பாக நடைபெறவும், இதையொட்டி வெளிவரும் இம்மலர் மூலம் அம்பாளின் பெருமைகள் பெருகி ஆலயம் சிறக்கவும் அம்பாளைப் பிரார்த்தித்துக்கொள்கின்றேன்.

அன்னைக்கு நடைபெறுகின்ற அபிசேக ஆராதனைப் பெருவிழாக்களை பொறுப்பேற்ற சிறப்பாக நடத்தும் உபயக்காரர்கள்,திருப்பணிகள் செய்யும் கிராமத்து அடியார்கள் வெளிநாடுகளில் வாழ்கின்ற அடியார்கள் உட்பட அனைவருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீவடபத்திரகாளி அம்பாளின் திருவருள் கைகூடப் பெற்று எல்லோரும் ஸேஸமாக வாழ எங்கள் குலதெய்வம் காளியின் பாதாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

*'லோகா சமஸ்தா சுகினோபவந்து'*

**பிரம்மஸ்ரீ நா.சசிதரசர்மா**
(ரவிஜயா)
ஆதீனகர்த்தா.

## அம்பாளின் அற்புத நிகழ்வுகள்

அம்பாள் ஆலயத்தின் சுற்றாடலில் நடைபெற்ற அற்புத உண்மை நிகழ்வுகள் அளவிடற்கரியவை; மெய்சிலிர்க்க வைப்பவை. அவற்றுள் குறிப்பிடத்தக்க சில -

ஒரு சந்தர்ப்பத்தில் அர்ச்சகர் மாலைப் பூஜைக்காக ஆலயம் செல்லும் போது தனது பெண் குழந்தையையும் அழைத்துச் சென்றார். பூஜை வழிபாடுகள் முடிவுற்று ஆலயத் திருக்கதவுகளை மூடிவிட்டு வீட்டிற்குத் திரும்பும் வழியில் குழந்தையை ஆலயத்தினுள் வைத்துப் பூட்டியதாக நினைவு வரவே மீண்டும் ஆலயத்திற்கு விரைந்து சென்று திருக்கதவுகளைத் திறக்க முயன்றார்.

'பூட்டிய கதவு திறப்பது சரியல்ல; குழந்தையை யானே கவனித்துக் கொள்வேன். கவலை வேண்டாம்" என அசரீரி ஒன்று கேட்டது. பிள்ளையின் பாசப்பிணைப்பில் கட்டுண்ட அர்ச்சகர் இரவு முழுவதும் பிள்ளை பசியுடன் எப்படித் தனித்திருக்கும் என எண்ணி அசரீரியைப் பொருட்படுத்தாது திருக்கதவுகளைத் திறந்தார். கோபம் கொண்ட அன்னை குழந்தையை நெடுக்கு முகமாகப் பாதிகளாக்கி அர்ச்சகரின் காலடியில் போட்டாள்.

திடுக்குற்ற அர்ச்சகர் தன் தவறை உணர்ந்து அம்பாளை மண்டியிட்டு மன்னித்து அருள்வேண்டினார். குழந்தை அம்பாளுடன் ஐக்கியமாகியது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் ஆலய வீதியில் அமைந்திருந்த அம்பாளின் வாழை மரத்தோப்பினுள் ஒரு வாழை மிகப்பெரிய குலையுடன் தலை நிமிர்ந்து நின்றது. இதனை அபகரிக்கக் கண்வைத்த ஒருவன் யாரும் காணாத வேளையில் வாளுடன் நுழைந்து வாழைக்குலையை வெட்ட ஓங்கிக் கைகளை உயர்த்திய வேளை உயர்ந்த கைகள் அப்படியே மீண்டும் அசைக்க முடியாமல் நின்றுவிட்டன. கண்கள் இருண்டு போயிற்று.

வேதனையில் துடிதுடித்த வண்ணம் தன்தவறை உணர்ந்து அவளை நினைத்துக் கத்தினான். தாயல்லவா அவள். சிறிது நேர சோதனைக்குப் பின்னர் பூசை நேரத்துக்கு வந்த அர்ச்சகரை அவ்விடத்தே திருநீற்றுடன் அனுப்பிவைத்தாள். அர்ச்சகர் அவன் நிலைகண்டு அம்பாளை நினைந்து திருநீற்றை ஜெபித்துப் பூசியதும் திருடன் பழைய நிலைக்கு வந்து தன் இழிநிலையை எண்ணிக் கலங்கி அம்பாளை நினைந்து அழுது புரண்டு வீழ்ந்து வணங்கினான்.

இன்னொரு நிலையில் அண்மைக் காலத்தில் ஆலய உண்டியல் பெட்டியைத் திருடன் எடுத்துக்கொண்டு போக முற்பட்டவேளை ஆலய மண்டபத்தில் தூங்கிக் கொண்டிருந்த அர்ச்சகரை அம்பாள் நேரில் வந்து தட்டி எழுப்பி, இன்னும் தூங்குகிறாயா? எனது காணிக்கைப் பெட்டி களவு போகிறதே என்று திருடனைக் காட்டிக் கொடுத்த அற்புத நிகழ்வும் இடம்பெற்றது.

இவ்வாறான நிகழ்வுகள் பல ஆலய உட்பிரகாரத்தில் வர்ணங்களில் தீட்டப்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இன்னும் எத்தனையோ அற்புத நிகழ்வுகளைக்கொண்ட எம்பிராட்டி அகிலாண்ட நாயகி திரிபுரசுந்தரி ஸ்ரீவடபத்திரகாளி அம்பாளைத் தரிசித்து நாமும் வினைபோக்கி நல்லருள் பெறுவோம்.

ஓம் சாந்தி!

மலர் வடிவம்:
கோண்டாவில் செய்தியாளர்

...ரமளித்து அருள்தந்து காக்கும் அன்னை ஸ்ரீ வடபத்திரகாளியின்
...ளால் நாட்டில் நிலையான சாந்தியும் சமாதானமும் கிடைத்து
...இன்புற்றுவாழ இன்றைய இரதோற்சவ நாளில் பிரார்த்திக்கிறோம்


**லிங்கம் ஸ்ரோர்ஸ்**
தொலைபேசிச் சேவை &
யாழ். - கொழும்பு பயணிகள் சேவை
மானிப்பாய் வீதி, தாவடி.
தொலைபேசி 021 - 222 2690, 070 212227

**...ந்தகீ ரெக்ஸ்**
..., மத்திய சந்தை,
...S. வீதி, சுன்னாகம்.

**மகாநதி ஜூவல்லறி**
72 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ லக்சுமி ஸ்ரோர்ஸ்**
சுதுமலை வீதி,
தாவடி, கொக்குவில்

**... பான்ஸி வீடியோ**
**...ஓடியோ சென்ரர்**
...கோயிலடி, சுதுமலை வீதி,
... வடக்கு, கொக்குவில்.

**நிரு ரியூசன் சென்ரர்**
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் மேற்கு.

**வரன் வெற்றிலைக்கடை**
கிளை இல: 96, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 071 2307647

**...மோட்டோர்ஸ்**
..., மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ விநாயகர் வீடியோ அன் ஓடியோ றெக்கோடிங் சென்ரர்**
பலாலி வீதி, திருநெல்வேலி.

**சரண்யா மோட்டோர்ஸ்**
221, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**...ர் பான்ஸி பலஸ்**
...றோட், ஆனைக்கோட்டை.
...தொ.பேசி 021 222 2758

**செல்வம்ஸ்**
லூக்காஸ் பற்றறி யாழ்ப்பாண முகவர்
443, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**விஜிதா அரிசி ஆலை**
தாவடி தெற்கு, கொக்குவில்.
தொலைபேசி : 222 6658

# சிறையிலிருந்து விடுதலை செய்யப்படுவோரே மீண்டும் மீண்டும் சிறைக்கு வருகின்றனர்

## யாழ். சிறைச்சாலை ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,மே3

சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்படும் கைதிகளே மீண்டும் மீண்டும் குற்றவாளிகளாக சிறைக்கு வருகின்றனர்.

இவ்வாறு யாழ்.சிறைச்சாலை ஆணையாளர் எஸ்.சிவசுந்தரம் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

யாழ்.சிறைச்சாலை நிலைமை தொடர்பாக கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படுவர்கள் நீதிமன்றங்களின் உத்தரவுக்கு அமைய யாழ்.சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டு வருகின்றனர்.

தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களில் பலர் நீதிமன்றங்களினால் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் வீடு செல்ல விரும்புவதில்லை.

இந்தக் குற்றவாளிகள்தான் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபட்டுத் திரும்பி சிறைச்சாலைக்கு வருகின்றனர்.

அண்மைக் காலமாக யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற கொலை, கொள்ளை, கசிப்பு உற்பத்தி, பாலியல் வல்லுறவு போன்ற சம்பவங்களில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கூடுதலானோர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு வருகின்றனர். - என்றார் அவர். (எ-7-8)

## குருநகரில் ஜூலை மாதம் நெய்தல் விழா

குருநகில் எதிர்வரும் ஜூலை மாதம் நெய்தல் விழா நடைபெறவுளளது.

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பினால் நடத்தப்படவுள்ள இவ்விழாவில் விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவை இடம்பெறும்.

ஜூலை மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ள குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழாவைத் தொடர்ந்து இந்த நெய்தல் விழா நடைபெறவுள்ளதென குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னனி அமைப்பின் செயலாளர் ம. குயின்ரன் தெரிவித்தார். (எ-51)

## அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

அனுமதிப்பத்திரம் இன்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் 10ஆயிரம் ரூபாவைத் தண்டமாக விதித்துள்ளது.

மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தைச் சேர்ந்த வேலாயுதன் பிறேமலன என்பவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

இவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட மணலை இருபாலை கானான் சிறுவர் இல்லத்தில் கட்டடத் தேவைக்காக ஒப்படைக்குமாறும் யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்பி.விக்னராஜா உததரவிட்டார். (எ-4-7)

வடக்கு - கிழக்கு மாகாணத்தின்

# கல்வி அபிவிருத்தி பற்றி ஆராய கூட்டப்பட்ட கூட்டம் திடீர் ரத்து

யாழ்ப்பாணம்,மே3

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தி குறித்து ஆராயக் கல்வியமைச்சில் கூட்டப்பட்ட கூட்டம் திடீரென ரத்துச் செய்யப்பட்டது.

புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் வடக்கு - கிழக்கு கல்வி நிலை மற்றும் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று கடந்த வெள்ளியன்று இசுறுபாயவில் உள்ள கல்வியமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகள், வலயப் பணிப்பாளர்கள் ஆகியோர் கொழும்பு சென்றிருந்தனர்.

கூட்டம் ரத்துச்செய்யப்பட்ட தகவல் அவர்களுக்கு அங்கு கிடைத்ததால், வெறுமனே அவர்கள் திரும்ப வேண்டி ஏற்பட்டது .

மேதின ஏற்பாடுகளை ஒட்டி கூட்டம் ரத்துச்செய்யப்பட்ட தகவல் கடந்த வியாழக்கிழமை மாலையே மாகாணக் கல்வித் திணைக்களத்துக்குக் கிடைத்தது என்றும் -

உரிய நேரத்தில் தகவல் கிடைக்காததால் சகல அதிகாரிகளும் கொழும்பு சென்று திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் - தொிவிக்கப்பட்டது. (எ-3)


இன்டநெட் பிரியர்களுக்கான




sltnet
PREPAID CARD

மற்றும்

அனைத்துத் தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:

S.M.S
CARD SALES CENTRE
ஆஸ்பத்திரி வீதி,
பஸ்நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.

(சி-34259)(26-16-18)



உ
சிவமயம்

ஊர்காவற்றுறை, தம்பாட்டி, நுனிபுரம்
அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்



தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்

தேர்த்திருவிழா - 03.05.2004 திங்கட்கிழமை

| | | |
|---|---|---|
| காலை | 5.30 | மணிக்கு அபிஷேகம் |
| காலை | 7.30 | மணிக்கு வசந்த மண்டபப்பூசை |
| முற்பகல் | 9.00 | மணிக்கு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் புதிய தேரில் ஆரோகணிப்பார் |
| நண்பகல் | 12.00 | மணிக்கு நவசக்தி அர்ச்சனை |
| பிற்பகல் | 1.00 | மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் |

ஆலயப் பொதுமண்டபத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

(31522)(42-18-16-26) - தேர்த்திருவிழா உபயகாரர்கள்.



இரண்டாம் ஆண்டு இதய அஞ்சலி

மலர்வு 04 05 1927

உதிர்வு 25 04 2002



திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா

திதி : சதுர்த்தசி 03.05.2004

"ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறாதம்மா எம் துயரம்
பன்னிரண்டு செல்வங்களைப் பெற்று
பகலிரவாய்க் கண்விழித்து - அவர்களை
பாரினிலே உயரவைத்தாய் - அந்த
புகழை காலமெல்லாம் இருந்து பார்க்க
காலனவன் விடவில்லையே
ஆறுதலுக்கு ஆயிரம் ஆயிரம் உறவு உண்டு
ஆனால் அம்மா என்ற சொல்லுக்கு நீங்கள் இல்லை"

உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

"செல்வவாசா",
கண்டி றோட்.
வண்ணாங்கேணி, பளை.

உமது பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
தகவல் :- கணவர் - (வேலுப்பிள்ளை), பிள்ளைகள்.

(31449) (18-16-26)

குறிப்பு :- 2004.05.03 அன்று நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
நிஷாந்தினி கந்தசாமி
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி. மாணவி)
திதி: 03.05.2004

அன்னை மடியில் 18-12-1989
இறைவன் அடியில் 21-04-1997

அன்புச் செல்வமே!
"புன்முறுவல் பூத்த எழிலுருவமும் அன்புப் பேச்சும்—எம் நெஞ்சை விட்டகலவில்லை.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்."

(31516)(38-18-16-26)

167.நாவலர் வீதி.
யாழ்ப்பாணம். - குடும்பத்தினர்.



கேள்விப்பத்திர அறிவித்தல்

சீர் உடைத்துணி வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் சீர் உடைத்துணி வழங்குவதற்கு தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

வெள்ளைப் பொலியஸ்டர் சேட்டிங் (White Poliyester Shirting 80/20)
1182.02 மீற்றர்

மேற்படி துணிகளை பின்வரும் அளவுகளில் ஒரே துண்டாக பொதி செய்து தருவதற்குமான கூறுவிலைகள் எதிர்பார்க்கப்படுகின்றது.

வெள்ளை சேட் துணி

| | | | |
|---|---|---|---|
| 2.74 | மீற்றர் அளவில் | 03 | துண்டுகள் |
| 15.08 | மீற்றர் அளவில் | 01 | துண்டு |
| 6.75 | மீற்றர் அளவில் | 145 | துண்டுகள் |
| 9.00 | மீற்றர் அளவில் | 01 | துண்டு |
| 10.4 | மீற்றர் அளவில் | 15 | துண்டுகள் |
| 14.97 | மீற்றர் அளவில் | 01 | துண்டு |

கேள்விப்பத்திரதாரர் தங்கள் கூறுவிலையுடன் மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 500.00உம் மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 5000.00உம் காசுக்கட்டளையாக அல்லது காசாக நிதிக்கிளையில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சீர் உடையின் 6"x6" அளவுடைய மாதிரியுடன் *நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திருநெல்வேலி* எனற முகவரியிட்டு 14.05.2004 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாகப் பதிவுத் தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படவேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சீர்உடைகள் வழங்கலுக்கான கேள்விப்பத்திரம்" UJ/F/SK/T/04/04 என குறிப்பிட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அன்றையதினம் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும் கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்தவர்கள் சமுகந்தரலாம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி-34823) (26-18-16)

# குடாநாட்டின் கல்விசார் பிரச்சினைகளும் அபிவிருத்தி நோக்கிய செயற்றிட்டங்களும்

**யாழ். குடாநாட்டில் கல்வித்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், அதனை நிவர்த்திசெய்து கல்வித்துறையை அபிவிருத்தி நோக்கி முன்னெடுப்பதற்கு செய்யவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்கின்றது இக்கட்டுரை.**

**கடந்த 26 ஆம் திகதிய 'உதயனில்' கட்டுரையின் மூன்றாம் பகுதி வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இன்று பிரசுரமாகிறது.**

பாடசாலை அனுமதியில் 'டொனேசன்' வாங்குவதனால் வறுமையான குடும்பத்தில் பிறந்த குழந்தை அருகில் பாடசாலை இருந்தும் பணம் இன்மையால் அங்கு கற்கும் வாய்ப்பை இழக்கின்றது. இதனால், தூரஇடத்திற்குச் சென்று கலவி கற்கின்ற நிலைமையும் சிலவேளை பாடசாலைக்குச் செல்லும் தன்மை படிப்படியாகக் குறைவடைந்து இடைவிலகல் நிலைக்கே தள்ளப்படுகின்ற சந்தர்ப்பமும் உண்டு.

இதனை யாழ். குடாநாட்டுப் பாடசாலை அதிபர்கள் நன்குணர்ந்து தமது நிலையை சற்று பின்நோக்கிச் சிந்திப்பதுடன், தமது சுயத்துடனும் பேசிப்பார்க்க முனைதல் வேண்டும். அலுவலகத்துக்கு காற்றாடி வேண்டும் என எண்ணும் அதிபர் பின்னர் குளிரூட்டப்பட்ட அலுவலகம் தேவை என ஆசைகொள்ளும் பொழுதே மாணவர்களின் கல்வியில் அது 'டொனே'சனாக மாறுவடிவம் பெறுகின்றது என்பதை உணரவேண்டும்.

கல்விசார் நிறுவன அமைப்புகளில் இடம்பெறும் உட்பூசல்கள், அதிகார இழுபறிகள், ஆளணியினருக்கிடையிலான போட்டி பொறாமை மற்றும் மாணவர்களைப் பழிவாங்கும் மனப்பாங்கு என்பன அதிகரித்து வருவதை அன்றாடச் செய்திகளாக குடாநாட்டு பத்திரிகைகளில் நாம் அவதானிக்கமுடிகின்றது. குறிப்பிட்ட நிறுவனங்களின் நிதி மோசடி, நியமன அடிப்படையிலான மோசடி என்பன நிரூபிக்கப்படும் சட்டத்தின் மூலம் அவர்களைத் தண்டிப்பதில் பல்வேறுபட்ட அரசியல், பொருளாதார தலையீடுகளைக் காணமுடிகின்றது. மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் கல்விநிறுவனம் சார்ந்த முறைப்பாடுகள் அதிகரித்து வருவதையும் இங்கு சுட்டிக்காட்டமுடியும்.

பாடசாலை என்ற ஒழுங்கமைந்த கல்வி அமைப்புக்கு சமாந்தரமாகத் தனியார்கல்வி நிறுவனங்களின் விருத்தி அமைவதால் ஆசிரியர்களுக்குரிய பொறுப்பையும் வெகுமதியையும் அது குறைத்துவிடுகின்றது. (பேராசிரியர் சபா - ஜெயராஜா - படி) என்ற கருத்து இங்கு ஞாபகப்படுத்தப்படுகின்றது. ஓர் ஆசிரியர் பாடசாலையில் சிறப்பான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டால் மாணவர் வரவு நேர்த்தியாகவும் இடைவிலகல் குறைவாகவும் அமையும்.

பெற்றோர், ஆசிரியர் மத்தியில் இடம்பெற்றுவரும் போட்டி அடிப்படையிலான மனப்பாங்கு, பரீட்சை அமைப்பு தனியார் கல்வி நிறுவன வளர்ச்சிக்கு உரமிட்டவை எனலாம். பாடசாலைகளில் ஒழுங்கான முறையில் பாடத்திட்டத்தை நிறைவுசெய்யாமல் ஆசிரியர் தனியார் கல்வி நிலையத்தில் சிறப்பாகப் பாடத்திட்டத்தை கற்பிக்கும் நடைமுறையை நாம் கற்ற அனுபவவாயிலாக ஊகித்து அறிந்துகொள்ளலாம்.

இன்று சில பிரபல ஆரம்பப் பாடசாலைகளில் ஆசிரியர் மாணவரை தனது கல்வி நிலையத்துக்கு வரும்படி பிள்ளைகளுடன் சுமுகமாக உறவாடி தன்வசப்படுத்தும் உளவியல்சார் அணுகுமுறையை கையாள்கின்றனர். தனியார் கல்வி நிறுவனம் சார் கட்டளைகளைப் பாடசாலை வேளையில் அறிவிக்கும் இயல்பும், பாடசாலை விசேட நிகழ்வுகளை அதற்கேற்ப மாற்றியமைக்க பாடசாலை முகாமைத்துவத்தை சாதுரியமாக நகர்த்தும் தருணம் தனியார் கல்வி நிறுவனத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களிடம் இருப்பதைக் காணமுடிகின்றது.

இம்முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். பாடசாலை அமைப்பு குழப்பம் பெறாத வகையில் சீராக இயககம்பெற பாடசாலை முகாமைத துவம் மாற்றியமைக்கப்படவேண்டும். நாளாந்தம் பாடசாலை முடிவடைந்த பின்னரும் விடுமுறை காலங்களிலும் மாணவர்களை வழிப்படுத்த பல்வேறு நிகழ்வுகளை பாடசாலையில் ஒழுங்கமைக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொள்ள பாடசாலை சமூகம் முயற்சித்தல் வேண்டும்.

தனியார் கல்விநிலையங்களின் மீது ஆசிரியர்கள் அதிகளவில் நாட்டம் கொள்வதாகப் பேராசிரியர் இரத்தினஜீவன் கூறிய கருத்தையும் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பாடசாலைக் கல்வியை மாத்திரம் நம்பி இருக்கும் வறிய மாணவர்களின் கல்விக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே ஆசிரியர்கள் இந்த நாட்டம் இருப்பதுடன் கல்விசார் பாதிப்புக்களையும், சமூக மேம்பாட்டையும் சீர்குலைப்பதாக இவர்களின் செயற்பாடுகள் மறைமுகமாக இயக்கம் பெற சந்தர்ப்பமுண்டு எனவும் குறிப்பிடுகின்றார்.




குடாநாட்டைப் பொறுத்த மட்டில் நகரப்புறத்தைவிடக் கிராமப்புறத்தை பொறுத்தமட்டில் பிள்ளைகள் அதிகளவில் வேலையில் ஈடுபட்டுக்கொண்டு கல்வியை கற்பவர்களாகவும் அல்லது பாடசாலைக்குச் செல்லாமல் சிறுவயதிலேயே வேலையில் ஈடுபடும் நிலையை நாம் காணலாம். இதறகுப் பெற்றோர், சமூகம் என்பன முக்கிய காரணங்களாக அமைகின்றன.

சில சமூகங்களில் சிறுவர்களை அச்சமூகத்துக்குரிய தொழில்சார் நடவடிககைகளில் வழிப்படுத்தும் வகையில் செயற்பட பெற்றோர் முயற்சிக்கின்றனர். உதாரணமாக வலையை சிக்கெடுத்தல், புகையிலைச் செடியின இலை கட்டுதல் போன்ற வேலைகளுக்கு இவர்களைப் பயன்படுத்தும் நிலைமையை நாம் அவதானிக்கலாம். இந்நிலை அவர்களின் படிப்பைப் பாதிக்கும் என்பதை ஒரு பரவலான சிந்தனையில் பெற்றோர் சிந்தித்தாலும் அவர்களின் வறுமை அல்லது பொருளாதாரநிலை அதற்கு இடம்கொடுப்பதில்லை எனலாம்.

குடநாட்டைப் பொறுத்தமட்டில் சமகாலத்தில் பல்வேறு வசதி வாய்ப்புக்கள் நீண்ட காலத்திற்குப் பின்னர் கிடைத்தமையாலும் அநேகமானவர்கள் அதில் கூடிய கவனம் செலுத்துவதனாலும் கல்வியில் நாட்டம் குறைவடைவதையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். வீட்டுச் சூழலைப் பொறுத்தமட்டில் தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி, கணனி மற்றும் வெளிநாட்டவர் வருகை போன்ற காரணிகளால் கற்றல்சூழல் பாதிப்படைவதை நாம் குறிப்பிடலாம். 18 வயது வந்தவுடன் பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்குப் பெற்றோர் முயற்சிப்பது பிள்ளைகளின் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தி கல்வி மீதான நாட்டத்தை குறைக்க சந்தர்ப்பம் அதிகம் உண்டு.

**ப.இராஜேஸ்வரன்**
**ஆசிரியர்**

பாடசாலைகளிலும் சமூகத்தில் இடம்பெறும் சமூக நியமமில்செயற்பாடுகளும், கலாசாரத்துக்கு ஒவ்வாத செயற்பாடுகளும் சமூகக் கட்டுப்பாடுகள் மாணவர்களின் மனப்பாங்கு என பதை கல்விசார் மேம்பாடுகளில் பல்வேறு பின்னடைவுகளை ஏறபடுத்துவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன எனவும் கூறலாம்.

இவ்வாறாக கல்விசார் அமைப்பில் ஏற்பட்டுள்ள பின்னடைவை நிவர்த்திசெய்யும் வகையில் ஒவ்வொரு பிரச்சினையையும் கருத்திற்கொண்டு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு செயற்றிட்ட நடவடிக்கைகயை அமுலாக்கி வருவதை நாம் இன்று அதிகளவில் காணமுடிகிறது.

பாடசாலையின் பௌதிக, ஆளணி வளத்தை உயர்த்தும் வகையிலும் மாணவரின் சமூகப்பிரச்சினை, உடல உளம்சார் இடர்பாடுகள், இடைவிலகல், பாடசாலை அனுமதி, முன்பள்ளி அபிவிருத்தி, வறுமையைப் போக்குதல், கற்றல்சூழலை ஏற்படுத்திக்கொடுத்தல், ஆசிரிய வாண்மைத்துவவிருத்தி, பாடசாலை மட்ட முகாமைத்துவ அபிவிருத்தி போன்ற விடயங்களில் கல்வியின் தேசியக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு சமூக, கலை, கலாசார, அரசியல் பொருளாதாரக் காரணிகளுக்கு அப்பால் அரச, அரசசாரபற்ற, நிறுவனங்கள் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இவை ஊடகக் கல்வியின் மேம்பாட்டை எதிர்காலச் சமூகக் கட்டுமானத்தில் நாம் காணக்கூடியதாக அமையும்.

### கல்விசார் அமுலாக்கல் திட்டங்கள்

யாழ். குடாநாட்டைப் பொறுத்த மட்டில் இதுவரை இனங்காணப்பட்ட பல்வேறுபட்ட கல்விசார்ந்த பிரச்சினைகள் மற்றும் இடர்பாடுகளைத் தீர்க்கும் வகையிலும், நிவர்த்திசெய்யும் வகையிலும் பல்வேறு முயற்சிகள் கல்விசார் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் கல்வியியலாளர்களினால் செயற்றிட்ட முறையில் ஆராயப்பட்டு அமுலாக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அவையாவன:-

★ பாடசாலையின் பௌதிக வளங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், அரச உதவியுடன் மீளக்கட்டி எழுப்பப்படுதல். நியாப், யுனிசெவ், ஜிரிசற் என்பவற்றின் செயற்பாடுகளை முன்மாதிரியாக எடுத்துக்கூறலாம்.

★ பாடசாலையில் இருந்து விலகும் மாணவர்களையும், பாடசாலையில் மாணவரைச் சேர்ப்பதற்கும், பல்வேறு சலுகைகள், வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல். எடுத்துக்காட்டாக இலவச உணவு, இலவச சீருடை மற்றும் இலகுவாக பிறப்புச் சான்றிதழ் பெறும் நடைமுறை அமுலாக்கம் என்பவற்றைக் கூறலாம்.

★ உயர் பாதுகாப்பு வலயப் பாடசாலைகளை மீளவும் இயங்கச் செய்ய பல்வேறு அமைப்புகள் முயற்சிசெய்கின்றன. இதன் விளைவால அண்மையில் அரியாலை, வசாவிளான் பகுதிப் பாடசாலைகள் மீள இயங்கத் தொடங்கியிருப்பதைக் காணலாம்.

★ இடைவிலகலுக்கு உள்ளாகும் மாணவர்களைப் பற்றி தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சிறுவர் நலத் திட்டத்தின் கீழ் அண்மையில் வவுனியாவில் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டபொழுது பிறப்புச்சான்றிதழ் இன்மை, கற்றல் உபகரணம் இன்மை, வலுவிழந்தோர் இல்லங்களில் சேர்க்கப்பட வேண்டியவர்கள், சிறுவர் இலலத்தில் சேர்க்கப்படவேண்டியவர், உள ஆலோசனைபெற வேண்டியோர் என மாணவர்நிலை இனங்காணப்பட்டு அவர்களின் பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்பட்டு கற்றல் வாய்ப்புக்கான வசதி யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

★ பௌதிகஆளணி வளப் பகிர்வில் பிரதேச வேறுபாடு இன்றி வழங்க அரசின் பன்முகப்பட்ட கல்விசார் அதிகாரப பகிர்வு விரிவாக்கப்படுதல் நல்ல எடுத்துக்காட்டாக அமைகின்றது.

★ இடைவிலகல் தன்மையை நிவர்த்திசெய்யும் வகையில் திறந்த பாடசாலை (Open Schools) நிறுவுதல், இருப்பிட வசதி, பாடமேம்பாட்டுத் திட்டம் (Enrichement programme), முறைசாராக் கல்விச் செயற்பாடுகளை விரிவாக்கல் என்பன இடம்பெறுவதையும் காணலாம்.

★ ஜிரிசற், யுனிசெவ், சர்வோதயம், போரூட், தமிழர் புனர்வாழ்வுக் கழகம, யு.என்.டி.பி., நியாப் போனற அரசசார்பற்ற நிறுவனங்களின் கல்விசார் அமுலாக்கச் செயற்பாடுகள் பாடசாலைகளில் பல்வேறு அடிப்படையில் துரிதமாக இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

★ உபகரணம் வழங்கல், மீள வலியுறுத்தல், வகுப்பு நடத்தல், இழப்பீட்டுக் கல்வி வழங்குதல், மிதிவெடி கல்வி, ஆசிரியர்பயிற்சி.

★ பாடசாலைக்கும் பல்கலைக் கழகத்திற்கும் இடையிலான இணைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு கல்விசார் மேம்பாட்டை ஏற்படுத்தல்.

உதாரணமாக - ஆங்கில ஆசிரியருக்கு பயிற்சிவழங்குதல்.

★ தொழில்வாய்ப்பைப் பெறும் வகையில் முறைசாராக் கல்வி விரிவாக்கமும் தொழில்நுட்பக் கல்லூரிகளினதும் ஆசிரியர்கல்வி நிறுவனங்களிலும் பயிற்சிகள் இடம்பெறுவதைக் கூறலாம். (வளரும்)

## கல்விச்சாலைக் காட்சிகள்



வேலணை செட்டிப்புலம் அ.த.க.பாடசாலையில் நடைபெற்ற கால்கோள் விழாவை தீவக வலய தமிழ்மொழி பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் கு.சரவணபவானந்தன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் எவ். சேவியரும் படத்தில் உள்ளார்.
*(படம்: மண்டைதீவுச் செய்தியாளர்)*



நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய ஆரம்பப் பிரிவு இல்ல மெய்வன்மைப் போட்டிகளை தீவக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஸ்ணன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அதிபர் ச.சத்தியவரதன், ஆசிரியர் க.சேதுலிங்கம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.



நெல்லியடி மத்திய மகாவித்தியாலய உயர்வகுப்பு மாணவர்களின் ஒன்றுகூடலை யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறைத் தலைவர் வி.பி.சிவநாதன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அதிபர் எஸ்.சேதுராஜா, ஆசிரியர்களான ஐ.சண்முகம், எஸ்.சரவணபவான் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.
*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*



யாழ். ஆனைப்பந்தி மெ.மிஷன் வித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். பாடசாலையின் அதிபர் எஸ்.சோமேஸ்வரபிள்ளையும் படத்தில் காணப்படுகின்றார். *(எ-12)*

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

அச்சுவேலி தெற்கில் சிவசக்தி கோயிலுக்கு அண்மையில் காலியாகவுள்ள வீடு, வளவு உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: குமரையா நித்தியானந்தன், முரளி 0714-744943, நடராஜா 0712-515971. (சி-34870)

கலர்மீன்கள், மீன்தொட்டிகள், குருவிகள், கூடுகள், பூங்கன்றுகள், சாடிகள், அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:40/11, சீனியர் லேன், யாழ்ப்பாணம்.(31456)

தரமான **Prima Broiler**, சிவப்பு/வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் 03.05.2004 திங்கட்கிழமை மாலை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை கிளையிலும், **Suddi Farm** வட்டுக்கோட்டையிலும் பதிவுசெய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31287)

## தவறிவிட்டது

நொக்கியா கையடக்கத் தொலைபேசி ஒன்று கடந்த 28-04-2004 அன்று புளியங்குளத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பயணஞ்செய்யும் போது தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் அல்லது அது பற்றி தகவல் தெரிந்தவர்கள் ச.சிவனேசன், பண்ணை முகாமையாளர், மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், திருநெலவேலி. T.P.: 021-222-2174 என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (31554)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த சதய நட்சத்திரம், 33வயதுள்ள, கனடாவில் பிரஜாவுரிமையுள்ள, நற்பண்புமிக்க மணமகனுக்கு படித்த, நற்குணமுள்ள, அழகான மணமகள் தேவை. (இலங்கை வந்து திருமணம் செய்து அழைத்துச் செல்வார்) தொடர்பு: விளம்பர இல.2242, C/o உதயன்., யாழ்ப்பாணம். (31358)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 35வயது, பரணி நட்சத்திரம், 4இல் செவ்வாயுள்ள, லண்டன் **B.Sc.** முடித்து அரசாங்க தொழில்புரியும் **PR** கிடைத்த மணமகனுக்கு அழகிய, நன்கு படித்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். புகைப்படம், குறிப்புகளுடன் ஒரு வாரத்திற்குள் தொடர்பு கொள்ளவும். விள.இல.2245. மே/பா உதயன். (31548)

## கருத்தரங்கு

ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டக் கருத்தரங்கு இன்று காலை 8.30 மணிமுதல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் வலிகாமம் கல்வி வலய அதிகாரிகள் கலந்துகொண்டு செயற்றிட்டம் தொடர்பான விரிவுரை நிகழ்த்துவார்.(எ-185)

## விற்பனைக்கு

கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட பரீனா கேம்பிறிச் கார் உடன் விற்பனைக்குண்டு.
906, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம், (31542)

---

## யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் - 2004

01-05-2004ஆம் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி மேற்படி கூட்டம் 05-05-2004 புதன்கிழமை பி.ப.4.00மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.
மீசாலை.

செயலாளர்,
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.
ப.மா.சங்கம்.

(31556) (26-16-18)

## V.S.P. விலை அதிகரிப்பு

பரிமளா ஸ்ரோர்ஸ் தயாரிப்பான
V.S.P. நல்லெண்ணெய்
01.05.2004 சனிக்கிழமை முதல்
10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது
என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருகின்றோம்.

பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:222 2785.
(31559)(34-26-16-18)

## அமரர் K.B. இரத்நாயகா பிரிவு குறித்த அஞ்சலி

ஹாட்லியின் புகழ்பூத்த மாணவரும், தலைசிறந்த விளையாட்டு வீரனும் மூத்த அரசியல்வாதியுமான

**K.B.இரத்நாயகா**

அவர்களின் பிரிவு ஹாட்லிச் சமூகத்தை அதிரவைத்துள்ளது. தனது இறுதி மூச்சுவரை ஹாட்லியின் சிறப்புக்காய் சோர்விலா ஈடுபாடு காட்டிவந்தவர். 03. 05. 2004இல் நடைபெறவுள்ள அன்னாரின் இறுதிக்கிரியை நாளில் ஹாட்லி மக்கள் நாமெல்லாம் அவரது ஆன்மா ஈடேற்றத்துக்காய் சில மணித்துளிகள் மௌனம் காத்து அஞ்சலி செலுத்துவோம்.

பருத்தித்துறை.
(சி-34872) (26-18-17)

ஹாட்லிக் கல்லூரி
பழைய மாணவர் மன்றம்.

## A.M.T. Transport Service - Vacancies

மேற்படி நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

- ▲ கணனி அறிவுள்ள கணக்காளர்
- ▲ வாகன சுத்திகரிப்பு நிலைய மேற்பார்வையாளர் (Forman) (வீட்டு மின்சுற்று A.C. தொடர்பான அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை)

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் 05-05-2004
புதன்கிழமை பி.ப. 2.00மணிக்கு
பின்னர் சமுகமளிக்கவும்.

A.M.T. TRANSPORT SERVICE,
**Point Pedro Road,**
**Irupali Junction,**
**Kopay.**
T.P.: 222 5784.
(31562) (26-18-17)

## கணக்காளர் தேவை

வன்னியில் இயங்குகின்ற பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கணக்காளர் ஒருவர் தேவை. ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும் எதிர்வரும் 15.05.2004ஆம் திகதிக்கு முன்னதாக சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 2247,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(சி-34873) (26-18-17)

## காப்புறுதி முகவர்கள் தேவை

இலங்கையின் முன்னணிக் காப்புறுதி நிறுவனம் ஒன்று தனது யாழ்., வவுனியாக் கிளைகளுக்கு காப்புறுதி முகவர்களை இணைத்துக்கொள்ளவுள்ளது. ஆர்வமும், தகைமையும் (G.C.E. O/L Pass) உள்ள 49வயதிற்குட்பட்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுதிகதி: 18-05-2004

**விளம்பர இலக்கம்: 2246,**
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(31558)(34-26-18-16)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லம்மா நடராஜா

"திருத்தணிகை" ஆடியபாத வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், 65/358, விஸ்ற்வைக் வீதி, கொழும்பு - 15ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா நடராஜா கடந்த 01.05.2004 சனிக்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - அம்மணிப்பிள்ளை ஆகியோரின் மகளும் காலஞ்சென்ற சோதிடர் கலாநிதி S.S.நடராஜாவின் (முன்னாள் பிரதம எழுதுவினைஞர்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மனாட்சிப்பிள்ளை மற்றும் கனகம்மா (ஆஸ்திரேலியா), செந்தில்மதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மிதிலா (கொழும்பு), சபேசன் (ஜேர்மனி), கலா (லண்டன், முன்னாள் ஆசிரியை, நல்லாயர் திருக்குடும்பக் கன்னியர்மடம் கொழும்பு), அசோகன் (கனடா), பகீரதன் (பதவி நிலை தொழில் நுட்ப உத்தியோகத்தர் யாழ்.பல்கலைக்கழகம்), கீதா (லண்டன், முன்னாள் ஆசிரியை, வெஸ்லிக் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலிஸ்ரா (ஜேர்மனி), கலாராணி (கனடா), மாலதி (ஆங்கில போதனாசிரியர், யாழ்பல்கலைக்கழகம்), கிருபாகரன் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சர்மிளா, குருபரன், அனபாயன், ராகவி, வைஷ்ணவி, கார்த்திகன், தனுஷ்கா, அனுஷன், லக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2004) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதம்பிட்டிய இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*65/358, விஸ்ற்வைக் வீதி,*
*மட்டக்குளி, கொழும்பு-15.* (31564)(37-17-18-26)

தகவல்:
ந.பகீரதன் *(மகன்).*

## ஐயம்பிள்ளை சிதம்பரப்பிள்ளை (திரவியம்)



மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை (திரவியம்) அவர்கள் 01.05.2004 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மகனும் செல்லக்கிளியின் அன்புச் சகோதரனும் சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும் தேவா, கிரிஜா, றஞ்சி, ஜெயந்தி, ஈசன், தாசன், துளசி, சங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும் குகனேஸ்வரன், கிரிஜா ஆகியோரின் மாமனாரும் கஜனன், கபிலன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2004) திங்கட்கிழமை நண்பகல் 12மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்காட்டு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தற்காலிக முகவரி:
*புகையிரத நிலைய வீதி,*
*கோண்டாவில்.*

நிரந்தர முகவரி:
*மறவன்புலோ மத்தி,*
*சாவகச்சேரி.* (31560)

தகவல்:
சிவதாசன்
*(மகன்).*
(26-17-18)

## திருமதி பெலிசிற்றஸ் ஜேம்ஸ்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பெலிசிற்றஸ் ஜேம்ஸ் நீக்கிலஸ் அவர்கள் 29.04.2004 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேம்ஸ் நீக்கிலஸ் (ஆயுர்வேத வைத்தியர், பிறப்பு இறப்பு, திருமணப் பதிவாளர் நாரந்தனை, ஊர்காவற்றுறை) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற பேரின்பநாதன் (R.U.D.B.) மற்றும் ஜெயநாதன் (இளைப்பாறிய ஆசிரியர், புனித சூசையப்பர் கல்லூரி, கொழும்பு), சத்தியநாதன் (லண்டன்), அருட்சகோதரி விக்ரறின் (திருச்சிலுவைக் கன்னியர்சபை பொதுஆலோசகர்), றோய் (கனடா), அருட்சகோதரி அன்சில்லா (யாழ்.திருக்குடும்பசபை மாகாணத் தலைவி), ஜீவநாதன் (கனடா), கிறாசியா (கனடா), ஜோதிநாதன் (கனடா), காலஞ்சென்ற பரிமளா ஆகியோரின் அன்புத் தாயாரும் மல்லிகா, லெற்றீசியா, புஸ்பம் (லண்டன்), தர்ஷினி, ஜெயந்தி, (கனடா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-05-2004) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ரொறன்ரோவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*101, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(31561)(37-17-18-26)

தகவல்:
அருட்சகோதரி ஸ்ரெலா துரைசாமி
- மாகாண ஆலோசகர்,
(மகள் அருட்சகோதரி அன்சில்லாவுக்காக)
திருக்குடும்ப மாகாண இல்லம்.

---


**MOTHER BOARDS »»**

Intel, VIA, SiS chipset - solution to P4/Celeron/AMD - Athlon, Duron

Mercury @ MICRO PC SYSTEMS




யாழ்., கிளிநொச்சியில் உத்தரவாதமும் விற்பனைக்குப் பிந்திய சேவையும்

MICRO PC மைக்ரோ பிசி சிஸ்டம்ஸ்

யாழ்ப்பாணம்: 175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் தொலை 021-2225893

கிளிநொச்சி: கணனிமையம் (TCC) கந்தசாமி கோயிலடி.

# உலகம் முழுவதும் பத்திரிகையாளர்களுக்கு இருந்துவரும் ஆபத்தும் அச்சுறுத்தலும்

## எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பின் அறிக்கையில் பதிவு

**14ஆவது உலக பத்திரிகை சுதந்திரதினம் இன்று. அதை யொட்டி எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.**

2004 ஜனவரி முதலாம் திகதி முதல் இதுவரை உலகநாடுகள் பலவற்றிலுமாக 13 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

பத்திரிகையாளர்களுக்கு மிகுநத அபாயகரமாக விளங்கும் நாடாக இன்னமும் ஈராக்கே இருந்துவருகிறது. அங்கு 10 பத்திரிகையாளர்களும் ஊடகத்துறை உதவியாளர்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 2003 மார்ச் மாதம் ஈராக்கில் சண்டை தொடங்கிய காலத்திலிருந்து 23 பத்திரிகையாளர்கள் அங்கு தம் கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் குறைந்தது ஆறு பேர் அமெரிக்கத் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டவர்கள்.

- 6 ஊடக உதவியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

- 431 பத்திரிகையாளர்கள் கைது செய்யப்படிருக்கிறார்கள்.

- 366 பத்திரிகையாளர்கள் உடல் ரீதியாக துன்புறுத்தப்பட்டு அல்லது அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

- 178 ஊடகங்கள் தணிக்கைக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

இன்று 2004 மே மாதம் 3ஆம் திகதி 22 நாடுகளில் 133 பத்திரிகையாளர்கள் சிறையிலிருக்கிறார்கள்.

கியூபா நாட்டிலேயே மிக அதிகமான 29 பத்திரிகையாளர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள். சீனாவில் 27 பேர், எரித்திரியாவில் 14பேர், ஈரானில் 12, மியான்மாரில் 11பேர் சிறையிலுள்ளார்கள்.

இணையத்தளத்தின் மூலம் தகவல்களை வெளியிட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் சீனாவில் 61 பேர் உட்பட பலநாடுகளிலும் 73பேர் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

2003ஆம் ஆண்டில் பலநாடுகளிலுமாக 42 பத்திரிகையாளர்கள் கொல்லபபட்டுள்ளார்கள். 766 பேர் கைது செய்யப்பட்டார்கள். ஆயிரத்து 460 பேர் உடல் ரீதியில் தாக்கப்பட்டு அல்லது அச்சுறுத்தப்பட்டுள்ளனர். 501 ஊடகங்கள் தணிக்கைக்குள்ளாக்கப்பட்டன.

### இலங்கையில்

இலங்கையில் மட்டக்களப்புக்கு அருகில் சுங்கங்கேணி என்ற இடத்தில் தினமுரசு பத்திரிகையில் சுமார் 5ஆயிரம் பிரதிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

நவம்பர் மாதம் நாலாம் திகதி இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தகவல் தொடர்பு அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கரை பதவி நீக்கம் செய்தார். அரசின் கட்டுப்பாட்டிலிருக்கும் இரண்டு தொலைக்காட்சி நிலையங்களுக்கும் அரச வானொலி மற்றும் பத்திரிகைகளுக்கும் தமது கட்சி உறுப்பினர்களை முக்கிய நிர்வாகப் பதவிகளுக்கு நியமிக்கலானார்.

1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஊடகத்துறை மீதான ஊழல் விசாரணைகளும் சட்ட நடவடிக்கைகளும் பெரும் அச்சுறுத்தல்களாக இருந்து வருகின்றன.

ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள 'உதயன்' பத்திரிகை ஆசிரியருக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் எதிராக யாழ்ப்பாண சிறை அதிகாரி ஒருவரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. சிறையில் இருந்த வேளை தாம் துன்புறுத்தப்பட்டதாக மனித உரிமை ஆணைக் குழுவிடம் ஒருவர் புகார் தாக்கல் செய்திருந்ததை வெளியிட்டமைக்காகவே இந்த நிலை ஏற்பட்டது.

நவம்பர் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் வேலுப்பிள்ளை தவச்செல்வம் என்பவர் முகமாலை சோதனைச் சாவடியல் இரகசிய இராணுவப் பிரிவினால் ஒரு மணி நேரம் தடுத்து நிறுத்தப்பட்டார். "உங்களைப் போன்றவர்களுக்கு ரணில் அரசில் அதிக சுதந்திரமிருக்கிறது. இப்பொழுது ஜனாதிபதி பொறுப்புக்களை எடுத்துக்கொண்டு விட்டார். உன்னை நாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யமுடியும்" என்று தமக்குக் கூறப்பட்டதாக அவர் தெரிவித்திருந்தார். ராணுவத்துக்கெதிராகக் கட்டுரைகள் எழுதினால் எதிர் நடவடிக்கைகளை எதிர்பார்க்க வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டதாகவும் அவர் கூறியிருந்தார்.

2003 பெப்ரவரியில் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட சட்டமொன்றில் குற்றச் சம்பவங்களை வெளியிடுவதற்கு எதிராக சில ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருந்தன. இச்சட்டத்தின் 5 ஆவது பிரிவின்கீழ் திட்டமிட்ட குற்றச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகளால் சாட்சியமளிப்பவர்கள் அல்லது புலன் வசாரணைகளில் ஈடுபடுகிறவர்களின் கௌரவத்தைப் பாதிக்கும் விதத்தில் பயமுறுத்துவது அல்லது கேள்வி எழுப்புபவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கௌரவம் என்பது நிச்சயமில்லாத ஒரு கொள்கை, பத்திரிகை செய்திகளை மிக இலகுவாக இச்சொல்லில் வைத்து மடக்கிவிடமுடியும் என்று உள்ளூர் பத்திரிகையாளர் சங்கங்கள் இச்சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இருந்தபோதிலும் இச்சட்டம் இன்னமும் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்படவில்லை. மார்ச் 10ஆம் திகதி கொழும்பில் கூட்டமொன்றில் பேசிய ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, வெகுவிரைவில் பிரதமருடன் உத்தியோகபூர்வ வாசஸ்தல மட்டுமின்றி பக்கசார்பான பத்திரிகைகளின் காரியாலயங்களும் முற்றுகையிடப்படும் என்று அறிவித்திருந்தார்.

வீரவன்ஸ சுதந்திரமாகச் செயற்படும் ஊடகங்கள் எல்லாவற்றையுமே இதன்மூலம் அச்சுறுத்தியுள்ளார் என்று சுதந்திர ஊடக இயக்கங்கள் குற்றஞ்சாட்டின.

கடந்த மே மாதம் 7 ஆம் திகதி பி.பி.ஸி. நிறுவனத்துக்கு செய்தி வழங்கியமைக்காக தாம் தொலைபேசியில் அச்சுறுத்தப்பட்டதாக வவுனியாவிலுள்ள பத்திரிகையாளர் பொன்னையா மாணிக்கவாசகர் வவுனியா பொலீஸில் புகார் செய்தார். அவர் மேற்கொண்ட ஆய்வுகளின்படி அந்த ரெலிபோன் அழைப்பு மன்னாரிலிருந்து வந்ததாகவும் அரசுக்குச் சார்பான ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரிவினரே தம்மை எச்சரித்திருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார். ஆனால், அவர்கள் அதை மறுத்திருந்தனர்.

சிலுமின பத்திரிகையின் பத்திரிகையாளர் பொத்தல ஜயந்த என்பவர் ஜூன், ஜூலை மாதங்களில் கொலை பயமுறுத்தல்கள் வந்ததாகப் புகார் தெரிவித்திருந்தார். அரசின் வங்கித்துறையில் பெருமளவில் மோசடிகள் நடைபெறுவதாக அவர் செய்தி வெளியிட்டிருந்தமைக்காகவே இந்தப் பயமுறுத்தல்.

ஜூலை மாதம் 2ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவுக்கு மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த விஜயசேகராவினால் சாட்சிகளின் முன்னிலையில் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டது.


ஒக்ரோபர் 25ஆம் திகதி சண்டே லீடர் நிருபர் பிரெட்றிக்கா ஜான்ஸ் என்பவரும் சுதந்திர புகைப்படப்பிடிப்பாளர் ஹெர்ஷால் எட்வார்டும் சண்டே லீடர் ஆசிரியருக்கெதிரான வழக்கொன்றில் திலங்க சுமத்திபால என்பவர் சம்பந்தப்படுத்தப்பட்டிருந்தது தொடர்பாகத் தாக்கப்பட்டனர்.

2003 ஜனவரி 7ஆம் திகதி சேனாதிராஜா ஜெயானந்தமூர்த்தி என்ற பத்திரிகை நிருபர் மட்டக்களப்பு நகரில் வைத்து அச்சுறுத்தப்பட்டார். அவரது வீடு தீக்கிரையாக்கப்பட்டது. அவரும் குடும்பமும் ஆபத்தின்றித் தப்பினர். ராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இது நடந்திருப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டது. இஸ்லாமிய அமைப்புக்கள் சிலவற்றின் செயற்பாடுகள் பற்றி இவர் செய்திகள் எழுதியுள்ளார் என்றும் புலிகளுக்குச் சார்பாக எழுதுகிறார் என்று சிங்கள இனவாதிகள் குறைகூறி வந்தார்கள் என்றும் கருதப்படுகின்றது.

2000ஆம் ஆண்டு ஒக்ரோபரில் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட பி.பி.ஸி. செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்குத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

மானிப்பாயில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தின் போது 2002ஆம் ஆண்டு சில பத்திரிகையாளர்கள் பொலீஸாரின் தடியடிகளுக்குள்ளானார்கள். அவர்களின் புகைப்படக்கருவிகள் குறிப்புப் புத்தகங்கள் மற்றும் அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டன. (ப)







நேற்றுமுன்தினம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மேதின நிகழ்வுகளில் சிவஸ்ரீசந்திரசேகர சர்மா பொதுச் சுடரேற்றுவதையும் கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# பானொஸ் தெற்காசியா வழங்கும் ஊடகவியல் கல்வியாதாரக் கொடை

## விண்ணப்ப திகதி மே 14 வரை நீடிப்பு

2004ஆம் ஆண்டில் பானொஸ் தெற்காசியா (PSA) அமைப்பு ஆய்வு மற்றும் விசாரணைகள் மூலம் சிங்கள, தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் முரண்பாட்டுப் பிரச்சினைகள் சம்பந்தமான தரமான ஆய்வுக் கட்டுரைகள்/நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதில் ஈடுபடும் விருப்புக்கொண்ட இலங்கைப் பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகவியலாளர்களுக்கு 10 கல்வியாதாரக் கொடைகளை (Fellowships) வழங்கவுள்ளது.

பானொஸ் தெற்காசிய ஊடகக் கல்வியாதாரக் கொடைகளின் பிரதான குறிக்கோள் இலங்கையின் நீண்ட கால முரண்பாடு மற்றும் நிலையான தீர்வொன்று இல்லாத தற்போதைய நிலைமை என்பவை குறித்த கண்ணுக்குத் தெரியும் ஆகுசெலவுகளை மாத்திரமின்றி, சமூக, கலாசார, வாழிடவியல் மற்றும் மனித ஆகுசெலவுகளையும் வெளிச்சமிட்டுக் காட்டும் நல்ல, விசாரணை ரீதியான பத்திரிகைத் தொழிலின் தரத்தையும், அளவையும் உயர்த்துவதாகும்.

தெரிவுசெய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் 12 மாதங்கள் கொண்ட தமது கல்வியாதாரக் கொடை காலப் பகுதியல் (2004 ஜூன் 01 - 2005 மே 31) மாதம் 8000/= ரூபா தொகையை நிதியுதவியாகப் பெற்றுக்கொள்வர். அவர்கள் தமது சொந்த நிறுவனங்களினுள் தொடர்ந்தும் பணியாற்றுதல்வேண்டும். உருவாக்கப்படவேண்டிய கல்வியாதாரக்கொடை, விடயத் தலைப்புகள், நிபுணர்கள் அடங்கிய மதியுரைக் குழுவொன்றின் கலந்தாலோசனையுடன் தெரிவுசெய்யப்படும்.

பானொஸ் தெற்காசிய அமைப்பு பங்கேற்கும் நிறுவனங்களின் பொறுப்பாசிரியர்களைச் சந்தித்து ஆதரவு, ஒத்துழைப்பு, அவசியமேற்படின் பிரயாண நோக்கங்களுக்காக 6 வார கால விடுமுறை மற்றும் பின்னர் உருவாக்கிய விடயங்களைப் பிரசுரித்தல், ஒலி/ஒளிபரப்புச் செய்தல் என்பவற்றை உறுதிசெய்யும். பானொஸ் தெற்காசிய அமைப்பு பிரத்தியேகமாக, தமது வழமையான வதிவிடங்களுக்கு வெளியே ஆய்வுவேலைகளை உள்ளடக்கும் கல்வியாதாரக் கொடைப் பிரேரணைகளுக்கு ஊக்குவிப்பு அளிக்கும். தமது கல்வியாதாரக் கொடை விடயங்களுக்காக இலங்கையினுள் பிரயாணம் செய்ய விரும்பும் தெரிவுபெற்ற ஊடகவியலாளர்களுக்கு மேலே குறிப்பிட்ட நிதியுதவிக்கு மேலதிகமாக, சிறிய பிரயாணக் கொடையையும் வழங்கும்.

கல்வியாதாரக் கொடைக்குத் தெரிவு பெற்றோர் தமது ஊடகவியல் விசா ரணைகளின் அடிப்படையில் பின்வரும் விடயங்களை உருவாக்குதல் வேண்டும்.

★ ஆகக்குறைந்தது 1500 சொற்கள் கொண்ட நெகிழ்ச்சியான அளவிலான ஆய்வுக்கட்டுரைகள்/நிகழ்ச்சித் திட்டங்கள். இவை அவர்களின் சொந்தப் பத்திரிகை மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் 2004 ஜூன் - 2005 மே காலப்பகுதியில் பிரசுரிக்கப்படும் அல்லது ஒலி/ஒளிபரப்புச் செய்யப்படும்.

★ 5000 சொற்கள் ஒரு விடய ஆழம்பொருந்திய ஆய்வு அறிக்கை. இது பதிப்புக்கான திருத்தங்களுடன் பின்னர் பானொஸ் தெற்காசிய அமைப்பினால் வெளியிடப்படவுள்ள ஒரு நூலின் உள்ளடக்கம் பெறக்கூடும்.

ஆர்வமுள்ளோர் பின்வரும் விடயங்களை 2004 மே 14ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்குப் பிந்தாமல், சமர்ப்பித்தல் வேண்டும். (முன்னர் விண்ணப்ப இறுதிநாள் மார்ச் 30ஆம் திகதியாக அறிவிக்கப்பட்டு இப்போது நீடிக்கப்பட்டுள்ளது)

★ சுயவிவரங்கள்

★ கடந்த 12 மாத காலத்தினுள் உருவாக்கப்பட்ட) முரண்பாடுகள் சம்பந்தமான ஐந்து வரையிலான பிரசுரிக்கப்பட்ட/ஒலி-ஒளிபரப்புச் செய்யப்பட்ட மாதிரிகள்/ஒளிநாடாக்கள/ஒலி நாடாக்கள்

★ விண்ணப்பதாரி ஏன் கவனத்தில் கொள்ளப்படவேண்டுமென்பதை விளக்கும் 500 சொற்கள் கொண்ட கடிதம் தாம் கல்வியாதாரக் கொடைக்குத் தெரிவுசெய்யப்படின் கவனம் செலுத்தவுள்ள தலைப்பு எதுவென்பதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரியை ஒரு வருட காலத்துக்கேனும் தொழில்சார் செயற்பாட்டு ரீதியில் நன்கறிந்த இருவரின் சான்றாதரவுக் கடிதங்கள்.

விண்ணப்பங்கள் தபால் மூலம் அல்லது ஈமெயில் மூலம் "கருத்திட்டக் கூட்டிணைப்பாளர், பானொஸ் தெற்காசிய அமைப்பு, 155ஏ, டாக்டர் டனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு - 8, ஈமெயில்:panos@eureka.net, வெப்தளம்: www.panos.org.np" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

# தலைமைப்பதவி கடினமானது இப்படிச் சொல்கிறார் கங்குலி

புதுடில்லி,மே3

இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர்களை கைப்பற்றி பாகிஸ்தான் மண்ணில் புதிய வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.



ராவல்பிண்டியில் நடந்த மூன்றாவது டெஸ்டில் வெற்றிபெற்றதன் மூலம் கப்டன் பதவியில் கங்குலி சாதனை படைத்துள்ளார். அதிக டெஸ்ட்டில் வெற்றிபெற்ற இந்தியக் கப்டன் என்ற சாதனையைப் பெற்றார். இதற்கு முன்பு அசாருதீன் தலைமையில் அதிக வெற்றிகளை இந்திய அணி பெற்றிருந்தது.

இந் நிலையில் கப்டன் பதவி என்பது மிகவும் கடினமானது என்று கங்குலி கூறியுள்ளார். பி.பி.ஸி. டெலிவிசனின் ஆசியா ருடே நிகழ்ச்சியில் அளித்த பேட்டியில் கங்குலி கூறியத்ாவது:-

கிரிக்கெட்டில் கப்டன் பதவி சவாலானது என்பது எனக்குத் தெரியும். கப்டன் பதவி மிகவும் கடினமானது. இதைக் கப்டன் பதவியிலிருந்த அசாருதீனும் டெண்டுல்கரும் புரிந்து இருபபார்கள். .அணியில் உள்ள இளம் வீரர்களின் திறமை எனக்கு சற்று எளிதாக இருககிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இளம் வீரர்கள் ஆடுகளத்தில் மிகவும் கடினமாக போராடுகிறார்கள். வெற்றி பெறவேண்டும் என்ற உத்வேகம் அவர்களிடம் உள்ளது.

டிராவிட் ஆடுகளத்தில் மென்மையாக நடந்து கொள்வார் என்று மக்கள் நினைக்கிறார்கள் இது தவறானது. அவர் துடுப்பாட்டம் மற்றும் களத் தடுப்பு செய்யும்போது ஆக்ரோஸத்தை வெளிப்படுத்துவார்.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை அதன் சொந்த மண்ணில் கைப்பற்றியது மிகவும் சிறப்பானது. 1996ஆம் ஆண்டு முதல் நான் அணியில் ஆடிவருகிறேன்.

ஆனால் தற்போது வெளிநாட்டு மண்ணில் தொடரொன்றைக் கைப்பற்றி இருக்கிறோம். மற்றத்தொடர்களை விட இந்தியா - பாகிஸ்தான் தொடர் மிகவும் முக்கியத்துவம் பெறறது. கிரிகெட்டுக்கு அப்பாற்பட்டவர்கள் கூட இதை எதிர்பார்க்கிறார்கள். லாகூரில் நடந்த கடைசி 2 போட்டிகளைப் பார்க்க 12ஆயிரம் ரசிகர்கள் இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் வந்தார்கள்.

கடந்த 2ஆண்டுகளுக்கு முன்பு லோர்ட்சில்நடந்த இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றோம் அப்போது சநதோசத்தில் ஏற்பட்ட உணர்ச்சியால் எனது சட்டையைக் கழற்றி எறிந்தேன். அதை நினைத்து இப்போதும் தர்மசங்கடம் அடைகிறேன்.

இவ்வாறு கங்குலி தெரிவித்துள்ளார்.

(-10)

# விளையாட்டு

## ஐ.சி.சி.கோப்பை கிரிக்கெட் இம்முறை அயர்லாந்தில்

லண்டன்,மே.3

சர்வதேச கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு அயர்லாந்தில் நடைபெறுகிறது.

இதற்கான ஒப்பந்த கிரிக்கட் சபை தலைவர் ஈசான்மணி, செயல் அதிகாரி மல்காம் ஸ்பீட் ஆகியோர் கையெழுத்திட்டனர்

அயர்லாந்தில் பெல்பாஸ்ட் மற்றும் டப்ளின் நகரங்களில் ஜுலையில் நடைபெற உள்ள இப்போட்டியில் 12நாடுகள் பங்கேற்கின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெல்பாஸ்ட், டப்ளின் நகரங்கள் அயர்லாந்தில் வடக்கு மற்றும் தெற்கு தீவுகளில் உள்ளன. இவ்விரண்டிலும் போட்டியை நடத்துவதற்கு ஐரிஷ் கிரிக்கெட் ஒன்றியத்தை கேட்டுக்கொண்டிருந்தேன். அவர்களும் அதற்கு ஒத்துக்கொண்டு போட்டியை நடத்துவது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது என ஈசான்மணி தெரிவித்துள்ளார்.

இந்தக் கிரிக்கெட்போட்டியில் அதிகபட்சமாக 12நாடுகள் பங்கேற்பது இதுவே முதல் முறையாகும். அடுத்த உலகக் கோப்பைப் போட்டி மேற்கிந்தியத் தீவுகளில் 2007ஆம் ஆண்டில் நடைபெறுகிறது.


அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 573 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 30-04-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5634492-5646857 |

வெற்றி இலக்கங்கள்

11 21 48 53

லக்கினம் மேடம்

ஜக்பொட் பரிசு ரூபா.16,16,750/- வெல்லப்பட்டுள்ளது.

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,73,877 | 10/- | 27,38,770/- |
| 2.இலக்கங்கள் | 25,180 | 20/- | 5,03,600/- |
| 1.இல + லக்கினம் | 24,883 | 30/- | 7,46,490/- |
| 2.இல + லக்கினம் | 2,273 | 100/- | 2,27,300/- |
| 3.இலக்கங்கள் | 655 | 500/- | 3,27,500/- |
| 3.இல + லக்கினம் | 70 | 5,000/- | 3,50,000/- |
| 4.இலக்கங்கள் | 02 | 1,00,000/- | 2,00,000/- |
| 4.இல + லக்கினம் | 01 | 16,16,750/- | 16,16,750/- |
| மொத்தம் | 3,26,941 | - | 67,10,410/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 67,10,410

தொடர் இல. 4668495 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 மே 04ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5638577-3-60
5635503-1-63
5641820-4-10
5635385-3-16
5637667-0-88


## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,மே.3

வலி.கிழக்கு முன்பள்ளி ஆசிரியர்களின் மாதாந்த ஒன்று கூடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி பாலர் விடுதியில் நடைபெறவுள்ளது.

இந்த ஒன்று கூடலில் வலி.கிழக்கு முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-4)

## சாவகச்சேரியில் நாளை பௌர்ணமி விழா

சாவகச்சேரி,மே3

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலக அபிவிருத்தி கலாசாரப்பிரிவினரால் நடத்தப்படும் பௌர்ணமி விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிகடு சாவகச்சேரி பிரதேச சபையின் மேல் மாடியில் நூலக அபிவிருத்திச்சபையின் தலைவர் கு.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையாவும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் வரவேற்புரையை சாவகச்கேரி பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரனும் சமய விசேட சொற்பொழிவை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் நிகழ்த்துவார்

(எ-31)

## நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம்,மே3

மனித வள அபிவிருத்தி மற்றும் கல்வி கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கில டிப்ளோமா கற்கைநெறிக்கு ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி பல்கலைக்கழக சபை மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நேர்முகத் தேர்வுக்கான கடிதங்கள் உரியவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் - இதுவரை கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் இன்று திங்கட்கிழமை யாழ் பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையின் உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

(எ-ரி)

# பாடசாலைமட்டக் கிரிக்கெட் கொக்குவில் இந்து சம்பியன்

வலி வடக்கு,மே3

யாழ். மாவட்ட மட்டத்தில் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி இவ்வாண்டுக்கான சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும்,தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் கொக்குவில் இந்துக் கல்லூரி துடுப்பாட்டத்ததை ஆரம்பித்தது. சகல விக்கட்டுக்களையும் 95ஓட்டங்களுக்குள் அது இழந்தது.


தொடர்ந்து மகாஜனக்கல்லூரி துடுப்பாட்டத்தை ஆரம்பித்து 83 ஓட்டங்களுடன் தனது சகல விக்கட்டுக்களையும் இழந்தது.

ஆட்ட முடிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி மகாஜனக் கல்லூரியை 12ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

இவ்விரு கல்லூரிகளும் வடக்கு-கிழக்கு மகாண மட்டத்தில் இடம்பெறும் போட்டிகளில் கலந்து கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-86)

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவில்லும்

தாயின் மடியில் 27 01 1946



இறைவனடியில் 04 04 2004

### அமரர் அந்தோனி அருளப்பு

(செபஸ்ரியாம்பிள்ளை)

04.04.2004 ஆம் திகதி எமது தந்தை இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஓடோடி வந்தவர்களிற்கும் பல வழிகளில் எமக்கு உதவி புரிந்தவர்களிற்கும், வெளிநாடுகளிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களிற்கும் எமது மனநிறைவிற்கு திருப்பலியை ஒப்புக்கொடுத்த அருட்தந்தையர்க்கும், எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எம் தந்தையின் ஆன்ம சாந்திக்காக நாளை (04.05.2004) செவ்வாய்க்கிழமை கச்சாய் புனித இராயப்பர் ஆலயத்தில் 11.30மணிக்கு இடம்பெறும் இரங்கல் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

*கச்சாய் வடக்கு,*
*கொடிகாமம்.*

(31578)(37-11-16-32)

- குடும்பத்தினர்.

## இருபதாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 15 - 06 - 1914



நிறைவு 02 - 05 - 1985

வேலணை

### அமரா உருக்குமணி இராசரத்தினம்

(அதிபர், ஆசிரியர்)

அன்னை யுருக்குமணி அமர ராகி
ஆண்டிருப தானாலும் அன்பு மக்கள்
இன்னமுந்தான் மனமுருகிக் கண்ணீர் சிந்தி
இரங்குகிறார் என்பதனை யுணரும் போது
நன்றாற்றி நன்மக்கட் பேறு கண்டு
நயந்துலகில் வாழ்ந் திறந்த தாயாரென்ற
தன்மையினை உருக்குமணி பெற்றாரேனும்
தாயாரின் பிரிவு மனக் கவலை தானே.

நினைந்துருகும்:
வைத்திய கலாநிதி சிதம்பரப்பிள்ளை
இராசரத்தினம் *(கணவர்)*,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.

*121, இரண்டாம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*

(31576) (26-11-16)

## மரண அறிவித்தல்

திருமதி

### இராஜஇராயேஸ்வரி சதாசிவக்குருக்கள்

(குஞ்சுமணி அம்மா)

நாயன்மார்க்கட்டைச் சேர்ந்த திருமதி இராஜ இராயேஸ்வரி சதாசிவக் குருக்கள் நேற்று (02.05.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசுவாமி புலவர் - முத்தம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற சதாசிவக் குருக்களின் மனைவியும், சோமசுந்தரத்தின் தாயாரும், ஞானகலாவின் மாமியாரும், ஹரிதர்சினி, வர்ணன், சுகன்யா, ஷம்யுக்தா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2004) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30,அரசடிப்பிள்ளையார் வீதி,*
*நாயன்மார்கட்டு.*

(31577)(37-11-16)

தகவல்:
ச.சோமு (மகன்)

# சந்திர கிரகணத்தால் நாட்டுக்குக் கேடாம்!

## முன்னணி சோதிடர்கள் கணிப்பு

கொழும்பு,மே3

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பூரண சந்திரகிரகணம் நிகழவிருக்கின்றது. இதேவேளை, இரு வால் நட்சத்திரங்களும் வானத்தில் தோன்றவுள்ளன. இந்த இரு நிகழ்வுகளும் ஒரே சமயத்தில் நடைபெறுவதால் இலங்கையில் எதிர்பாராத விபத்துக்களும் யுத்தமும் ஏற்படக்கூடும் என்று முன்னணிச் சோதிடர்கள் ஆருடம் கூறியுள்ளனர்.

சந்திரகிரகணமும் வால் நட்சத்திரங்களும் ஒரே சமயத்தில் தோன்றுவது நாட்டிற்குக் கேடு விளைவிப்பதாக அமையக்கூடும். இதனால் நாட்டிற்குச் சாதகமான விளைவுகள் எதுவும் ஏற்படாது. இச் சந்திரகிரகணத்தினால் நாடு யுத்தத்திற்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். அத்துடன, மக்கள் எதிர்பாராத விபத்துக்களைச சந்திக்க வேண்டியும் வரலாம். இச்சந்திர கிரகணத்தினால் மக்களின் மன நிலையில் குழப்பங்கள் உண்டாகக்கூடும். எனவே, மக்கள் பொறுமையாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறானதொரு சந்திரகிரகணம் கடந்த ஆண்டு ஏப்ரலில் ஏற்பட்டபோது நாட்டின் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால் அதிகமானோர் இறந்தனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

கொழும்பு பல்கலைக்கழகப் பௌதிகவியல் பேராசிரியர் சந்தன ஜெயரட்ன தகவல் தருகையில், இக்கிரகண நிகழ்வானது இலங்கையர்களுக்குக் கிடைத்த மிகவும் அரியதொரு சந்தர்ப்பமாகும். இவ்வாறான ஒரு நிகழ்வு, குறைந்தபட்சம் இன்னும் மூன்று வருடங்களுக்கு இடம்பெறாது. ஆயினும் பகுதியான கிரகணங்கள் இவ்வாண்டு முழுவதும் அடுத்த ஆண்டும் இடம்பெறும். ஆனால், இவற்றை இலங்கையில் தெளிவாகப் பார்க்க முடியாது. இப்போதெல்லாம் பூரண சந்திரகிரகணம் நிகழும்போது சந்திரனின நிறம் முழுவதும் கறுப்பாகத் தோன்றுவதில்லை. மங்கலான சிவப்பாகவே தோன்றுகின்றது. பூமியின் வழிமண்டலத்தில் மாசு ஏற்பட்டுள்ளதையே இது தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. முழுவதும் கறுப்பாகத் தோற்றமளித்த சந்திர கிரகணம் கடைசியாக ஏற்பட்டது 1816 ஆம் ஆண்டிலாகும். - என்று தெரிவித்தார்.

இதேசமயம் -

எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நிகழவிருக்கும சந்திரகிரகணம் அன்றையதினம் நடு இரவின் பின்னர் ஆரம்பித்து மறுநாள 5ஆம் திகதி அதிகாலை 5.10 மணி வரை நீடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. அதன்போது இரு வால் நட்சத்திரங்களும் தோன்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது (ஐ)

## பிரதேச செயலரின் நடவடிக்கை

வலி,தென்மேற்கு,மே3

மானிப்பாய் மேற்கு முதலியார் குளத்தின் அணைக்கட்டுப் பகுதியில் அனுமதியின்றி மணல் எடுத்துச் செல்வதைத் தடுப்பதற்கு வலி. தென்மேற்கு பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுதொடர்பாக எமக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து இப்பகுதி கிராம அலுவலர்களை இப்பகுதியிலிருந்து மணல் ஏற்றிச் செல்பவர் குறித்து கண்காணிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன், இதுபற்றி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மானிப்பாய் பொலீஸ் நிலைய பொலீஸாரிடமும் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.(எ-135)

## திருமறைக் கலாமன்றத்தின் புதிய கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம்,மே3

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றது.

'சீடா' நிறுவனத்தின் பிரதிநிதி திருமதி நந்திகா புதிய கட்டடத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

மன்ற இயக்குநர் பேராசிரியர் மரிய சேவியர் அடிகளார், அருட்திரு ஜே.பி.செல்வராஜா அடிகளார், மன்றப பிரதி இயக்குநர் ஜோன்சன் ராஜகுமார் ஆகியோர் உரையாற்றினார்கள்.

'சீடா' நிறுவனத்தின் நிதியுதவியுடன் மேற்படி மன்றத்தின் கட்டடத் தொகுதி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (ஐ-4-5-6)

# ஆறு மாகாணசபைகளுக்கும் ஜூலை முதல்வாரம் தேர்தல்!

கொழும்பு,மே.3

வடமேல் மாகாணசபைத் தேர்தல் முடிவுற்ற நிலையில் எஞ்சியுள்ள ஆறு மாகாண சபைகளுக்குமான தேர்தல் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரத்தில் நடைபெறும் எனத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மத்திய, ஊவா மாகாண சபைகளின் பதவிக்காலம் கடந்த மாதம் 25 ஆம் திகதி முடிவடைந்தது. சப்ரகமுவ மாகாணங்களின் பதவிக்காலம இன்றுடன் முடிவடைகிறது. மேல் மாகாணசபையின் பதவிக் காலம் நாளையும் வடமத்திய மாகாணசபையின் பதவிக்காலம் வருகிற 5ஆம் திகதியும முடிவடையவுள்ளன.

இதேவேளை, தென்மாகாண சபையையும் எதிர்வரும் 5ஆம் திகதி கலைக்கப்படவுள்ளது. தென் மாகாண சபையின் பதவிக் காலம் எதிர்வரும் 8 ஆம் திகதியே முடிவடைகிறது. எனினும், மாகாணசபைகளுக்கான தேர்தலகளை ஒரேநாளில் நடத்தத் தேர்தல் ஆணையாளர் தீர்மானித்ததையடுத்தே அதற்கு வசதியாகத் தென்மாகாணசபை எதிர்வரும் 5ஆம் திகதி கலைககப்படவுள்ளது.

இதேவேளை, மத்திய, ஊவா மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடைந்துள்ள நிலையில் இம் மாகாண சபையின் தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 14 ஆம் திகதிமுதல் 21 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்படவிருப்பதாகத் தெரிய வருகிறது.

(ஐ-க)

## கந்தப்பொல சம்பவம்:

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க அரசு முடிவு

கொழும்பு,மே3

நுவரெலிய மாவட்டத்தில் கந்தப்பொலவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த இருவரின் குடும்பங்களுக்கும் தலா ஒருலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரிலேயே இந்த நஷ்டஈடு வழங்கப்படவுள்ளதாக தோட்ட உட்கட்டமைப்பு மற்றும சமூக அபிவிருத்தி அமைச்சர் சி.வி.இரத்னாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்தச்சம்பவத்தில் சேதமாக்கப்பட்ட சுமார் 42 கடைகளுக்கும் 8 வீடுகளுக்கும் நஷ்டஈடு வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. சேதவிவரங்கள் கிடைத்த பின்னர் நஷ்டஈடு வழங்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.


மது கல்வி நிறுவனம்
டச்சுவீதி, இருபாலை, கோப்பாய்.
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க A/L 2006
கலை, வர்த்தக வகுப்புகள்
யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்...
LOGIC - சுதன்
ஆரம்பம் : 05.05.2004 மாலை 4 மணி
வகுப்புகள் யாவும் இருபாலைச் சந்திக்கருகில் உள்ள உயர் கல்விப் பிரிவில். அனுமதிகள், மேலதிக விவரங்கள் அலுவலகத்தில்! (31577)(13-14-36) - நிர்வாகி.

கொம்பியூட்டர் பொலிமர் இறபர் முத்திரை
இலவசம்
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு:
யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
(30331)(18) யாழ்ப்பாணம்.

eTouch COMPUTER SYSTEM
The right way to touch IT
புதிய பிரிவுகள் ஆரம்பம்
★ DIPLOMA IN MS OFFICE திங்கள், புதன், வெள்ளி (4-6 pm)
★ DIPLOMA IN AUTOCAD சனி, ஞாயிறு (7.30-8.30 pm)
ஆரம்பம்: சனி 7.30 pm, திங்கள 4.00 pm
Course Fees - 2100/= DURATION 3 MONTHS
மானிப்பாய் வீதி,
மருதனார்மடம்.
T.P: 459-0222
(31510)(43-13-14-36)
DIRECTOR
eTouch


**யாழ்.பல்கலைக்கழக 2 ஆம் வருட முகாமைத்துவ மாணவர்களின் கல்விச்சுற்றுலா பற்றிய கலந்துரையாடல்.**

மேற்படி கல்விச் சுற்றுலா 05.05.2004 (புதன்கிழமை) காலை 8.00 மணிக்கு புறப்பட இருப்பதால், அது சம்பந்தமான கலந்துரையாடல் (04.05.2004) செவ்வாய் பி.ப 3.30 மணிக்கு MH2 இல் நடைபெற இருப்பதால் அனைத்து சுற்றுலாச் செல்லும் மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(31575)(40-13-14-36) -சுற்றுலா ஏற்பாட்டுக்குழு.


நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதினத்தில் டொல்பி ஒலி அமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேல்
நடித்த


(C341800)(22)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00 (பி.நே.)
ஆசனப் பதிவுகளுக்கு:
நாகம்ஸ் பாட்டா
சுன்னாகம்,
நாகம்ஸ் சினிமா

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்
ஸ்ரீகாந்த், பூமிகா, விவேக் நடித்த
"ரோஜாக் கூட்டம்"
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.) (பீஸ்)
வெள்ளி சனி ஞாயிறு இரவு 8.45 இரசு (பி.நே.)
DO NOT DISTURB
(#34420)(14)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா,
பிரகாஷ்ராஜ்
நடித்த


(C)34517(22)
10.30.,2.30, 6.30, 9.30 (பி.நே.)
(ரீஸ்)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.



## தெல்லிப்பழை காசிவிநாயகர் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம்

04-05-2004 செவ்வாய் பகல் 11.00 மணிக்கு கொடியேற்றம்
11-05-2004 செவ்வாய் பகல் 10.00 மணிக்கு சங்காபிஷேகம்
மாலை 3.00மணிக்கு வேட்டைத் திருவிழா
மாலை 6.30மணிக்கு சப்பரத்திருவிழா
12-05-2004 புதன் பகல் 10.30 மணிக்கு பஞ்சமுக விநாயகர் சித்திரத் தேரில் ஆரோகணித்தல்.
13-05-2004 வியாழன் பகல் 11.30 மணிக்கு தீர்த்தோற்சவம்
மாலை 5.00 மணிக்கு கொடியிறக்கம்.
14-05-2004 வெள்ளி மாலை 4.30 மணிக்கு சித்தி புத்தி சமேத விநாயகருக்கு திருகல்யாண உற்சவம்.

பிரதமகுரு: சிவஸ்ரீ சி.கணேசலிங்கக்குருக்கள்,
(31523)(36-13-14) மஹோற்சவ குரு: சிவஸ்ரீசு.தியாகராஜக் குருக்கள்.


## 31 ஆம் நாள் நினைவலைகள்



அமரர் தம்பு கந்தசாமி
(சிவஸ்கந்தபுரி - அச்சுவேலி வடக்கு)

தோற்றம் 28 ★ 10 ★ 1920

மறைவு 03 ★ 04 ★ 2004

எங்கள் அன்புத் தெய்வமே
மாதம் ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
என்றும் உங்கள் நினைவுகள் - நிலைத்திருக்கும்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் இன்று (03.05.2004) திங்கட்கிழமை வேலணையில் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

2, ஆம் வட்டாரம்,
வேலணை. (31581)(36-13-14) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரசையா பூலோகம்

காரைநகர், இலகடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சரசையா பூலோகம் அவர்கள் நேற்று (02.05.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி சரசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - இராசம்மாவின் மகளும் பகவதி, ஞானக்கிளி, கோமதி, கமலாம்பிகை (பிரான்ஸ்), பொற்கலை ஆகியோரின் அன்புத் தாயாரும் தணிகாசலம், செல்வரட்ணம், சடாட்சரம், சுப்பிரமணியம் (பிரான்ஸ்), சிவநேசன் (ஆயுர்வேத வைத்தியர், காரைநகர்) ஆகியோரின் மாமியாரும் திருமதி யோகராணி ராஜ்குமார் (பிரான்ஸ்), யோகராசா-சுபாசினி (ஸ்ரீராம் எலக்ரோனிக்ஸ், யாழ்ப்பாணம்), ஸ்ரீஸ்கந்தராசா - சிவனேஸ்வரி (லண்டன்), தியாகராசா (லண்டன்), திருமதி சிவராணி சிவானந்தன், தயாவதி, தயாரூபி (வலயக் கல்வி அலுவலகம், தீவகம்), தயாபரன், துஸ்யந்தினி, கண்ணதாசன், கிரிசாந்தி, குகரஞ்சினி ஆகியோரின் பேர்த்தியும் ஜனார்த்தன், துஷாரா, கௌசல்யா, பிரசன்னா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2004) திங்கட்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலகடி,
காரைநகர். (31580)(36-13-14)
தகவல்
அ.செல்வரட்ணம் (மருமகன்).


Special Offer for May 2004

3 Years Limited Warranty for Computer

Processor Intel. ASUS Mother Board.
Kingston Memory 128MB. ViewSonic Monitor E55.
ASUS VGA 64MB Upgraded. Keyboard PS/2,
Mouse PS/2. Floppy Drive, Hard Drive 40GB.
P4 ATX Casing. ASUS CDRom 52X.
ASUS Soundcard. CREATIVE Speaker.

*Kingston Memory Life Time Warranty*

| | |
|---|---|
| Intel Celeron 2.0GHz | 47,950.00 |
| Intel P4 2.0GHz | 53,950.00 |
| Intel P4 2.8GHz | 57,950.00 |
| Intel P4 3.0GHz | 79,500.00 |

"We are Selling Printer, Scanner, UPS, Computer, Network Accessories & Etc.."

intel inside pentium 4
intel.
hp invent


3 Years Warranty
HP Laserjet 1300 Laser Printer.
Price SL.Rs. 44,750.00


HP Laserjet 1010 Laser Printer.
Price SL.Rs. 24,300.00


HP Deskjet 3550 Colour Inkjet Printer.
Price SL.Rs. 6,850.00

ViewSonic 15" Monitor
SL.Rs. 11,750.00
3 Years Warranty

Authorized Reseller : Global Informatics (Pte) Ltd.
Global Informatics (Pte) Ltd
379, Kasthuriyar Road. Jaffna. Sri Lanka.
Tel: 0777364247, 0777489361, 0212225736.

ViewSonic

# புலிகள் பற்றிய கதிர்காமரின் கருத்து; ஜாதிக ஹெல உறுமய கடும் கண்டனம்

கொழும்பு,மே3

இலங்கை வெளிநாட்டமைச்சர் லஷ்மன் கதிர்காமர் தமிழீழ விடுதலைப் புலிகளை அரசு தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு பேச்சு நடத்தும் என்றவாறு புதுடில்லியில் கருத்து வெளியிட்டிருப்பதை ஜாதிக ஹெல உறுமய கட்சி மிகக் கடுமையாகக் கண்டித்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தும் என்று கதிர்காமர் புதுடில்லியில் கூறியிருப்பதானது அவர் முன்னர் கூறியிருந்த கருத்துக்கு முற்றிலும் முரண்பாடான நிலைப்பாடாகும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும்கூட அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்கு முன்னர் சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்தும் என்று தனது தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தது. இப்பொழுது என்னவென்றால் விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம் விதித்த முன்நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டவர்போல் வெட்கமற்ற முறையில் புதுடில்லியில் கருத்து வெளியிட்டிருக்கிறார் என்று ஜாதிக ஹெல உறுமயப் பொதுச் செயலாளர் திலக் கருணாரட்ன கூறியிருக்கிறார்.

இன்றைய அரசு தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு தமிழீழத் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதற்காகவே இவ்வாறு கொள்கையை மாற்றிக்கொண்டுள்ளது என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

புலிகளின் இடைக்கால அதிகார சபைக்கான திட்டத்தைப் பகிரங்கமாக குறை கூறியவர் கதிர்காமர். ஆனால், இப்போது முழுவதுமாக மறுபக்கம் திரும்பிவிட்டார். இடைக்கால அதிகார சபையைக் கண்டித்து வந்த அர்ஜுன ரணதுங்க போன்றவர்களும் முழுமையாக மறுபக்கம் திரும்பிவிட்டார்கள் என்று கேட்க விரும்புகின்றோம் என்றார் திலக் கருணாரட்ன.

ஹெல உறுமய தமிழ்த்தேசியக கூட்டமைப்புடன் சேர்ந்து வாக்களித்ததை அவர்கள் குறைகூறினார்கள். இப்பொழுது ஜே.வி.பி. என்ன கூறுகின்றது என்று கேட்க விரும்புகின்றோம் -இவ்வாறு கூறியிருக்கிறார் திலக் கருணாரட்ன. (ப)

# இசை நிகழ்ச்சியில் கைக்குண்டு வீச்சு! நாத்தாண்டியாவில் 44 பேர் காயம்!!

கொழும்பு,மே3

நாத்தாண்டியா தும்பன்னாவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் கிராமவாசிகளினால் நடத்தப்பட்ட இசை நிகழ்சியினபோது கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கைக்குண்டுத் தாக்குதல காரணமாக 44 பேர் காயமடைந்துள்ளனர் எனவும், காயமடைந்தவர்கள் மஹரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 5 பேரின் நிலை கவலைக்கிடமானதாக இருந்ததால் இவாகள மேலதிக சிகிச்சைக்காக போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். காயமடைந்தவர்களில் நான்கு பெண்களும அடங்குவர்.

குடும்பச் சச்சரவு காரணமாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளன என்றும் - கைக்குண்டுத் தாக்குதலை நடத்தியவர் இராணுவத்திலிருந்து தப்பி யோடியவராக இருக்கலாம் எனத் தாம சந்தேகிப்பதாகவும்தும்பன்னாவ பொலீஸார் தெரிவித்தனர்.

# புதிய அரசமைப்புக்கான நகல் சட்டங்கள் பூர்த்தி

கொழும்பு,மே3

தற்போதுள்ள அரசமைப்பை நீக்கி விட்டு புதிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பான நகல் சட்டங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆனால் அரசமைப்பு நிறைவேற்று சபையொன்றை நிறுவுவது தொடர்பான கருத்துக்கள் பற்றி இதுவரை முடிவான தீர்மானம மேற்கொள்ளப்படவில்லை.

தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டபின்னர் அரசமைப்பு சபையை அமைப்பதே தமது முதல் நடவடிக்கையாகும் என அரசு கருத்து வெளியிட்டிருந்தது.

தற்போதைய அரசமைப்பின்மூலம அரசமைப்பை மாற்றிஅமைப்பது தொடர்பாக அரசமைப்பிலுள்ள சட்டவிதிகளை கவனத்தில்கொள்ளாது சிறுபெரும்பான்மை வாக்குகள் மூலம் அரசமைப்பை நிறைவேற்றி அதற்கு மக்கள் அங்கீகாரத்தை பெறுவதே அரசின் திட்டமாகவிருந்தது. ஆயினும் ஒரு சில அரசமைப்புதொடர்பான ஆய்வாளர்கள் அத்தகையமுறை, உலக அரசமைப்பு நிறைவேற்று முறைகளுக்கு முரணானது எனக் கருத்து வழங்கியுள்ளனர். அதைவிடவும் சபாநாயகர் பதவி அரசின் பக்கம் இல்லா நிலையில் இத்திட்டத்தை முன்னெடுத்ததுச் சென்று செயல்படுத்தமுடியுமா என்று கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. (ஐ)

## பஸ்-மோட்டார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன் முகமாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் டிப்போவைச் சேர்ந்த பஸ்ஸும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதுண்டன என்று கூறப்படுகிறது.

படுகாயம் அடைந்த இளைஞர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமானார்.

இந்தச் சம்பவம் குறித்து யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா நேற்றுப் பிற்பகல் மரணவிசாரணைகளை நடததினார்.

இறந்தவரின் தந்தையான கே.சிவநேசன், பஸ் சாரதியான தம்பையாப் பிள்ளை ஸ்ரீஸ்காந்தராசா ஆகியோரின் வாக்குமூலங்களை நீதிவான் பதிவு செய்தார்.

சட்டவைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை நடத்திய பின்னர் உயிரிழந்தவரின் தந்தையிடம் சடலத்தை ஒப்படைக்கும்படி நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

பிரஸ்தாப பஸ்ஸின் சாரதியை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படியும் -

சம்பவத்துடன் தொடர்புடைய சாட்சிகள் ஏதும் இருப்பின் அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தபின அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியும் -

நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ஐ-3-6-31-75)

## நேற்று ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும நோர்வே வெளிவிவகார அமைச்சின் இரு அதிகாரிகள் ஆகியோர் ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்குபற்றினர்.

இலங்கை அரசின் சார்பில் ஜனாதிபதி குமாரதுங்கவுடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் கதிர்காமா, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பல்லிகக்கார மற்றும் அரச அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்துகொணடனர்.

பேச்சு மேசைக்கு இரு தரப்பும், திரும்புவதற்கு இன்னும் சில காலம் பிடிக்கும் அதேசமயம், இருதரப்பும் யுத்தநிறுத்தத்தை மதித்து நடப்பதும் அது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடன் நெருங்கிச் செயற்படுவதும் முக்கியமானதாகும் - என்று நோர்வேயின் வெளிவிவகார பிரதி அமைச்சர் ஹெல்கிஸன் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்ட அவர், முன்னரே ஒழுங்கு செய்யப்பட்ட தமது பயணத்திட்டத்தின்படி இன்று கொழும்பிலிருந்து இநதோனேஷியா புறப்படுகின்றார்.

நோர்வே குழுவின் ஏனைய பிரதிநிதிகள் இன்று கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை அங்கு சந்தித்துப் பேசுவர்.

நேற்று ஜனாதிபதி குமாரதுங்கவுடன் தாங்கள் நடத்திய கலந்துரையாடல்களின் பெறுபேறுகளை அவர்கள தமிழ்ச்செல்வனுக்கு எடுத்துரைப்பர் என்றும் -கிளிநொச்சிச் சந்திப்பை முடித் துக்கொண்டு இன்று மாலை கொழும்பு திரும்பும் நோர்வேக் குழுவினர் இங்கு மீண்டும் ஜனாதிபதி குமாரதுங்கவைச் சந்தித்து கிளிநொச்சிப் பேச்சுக்களின பெறுபேறுகள் குறித்து அவருடன் ஆராய்வார்கள் என்றும் தெரிகின்றது. (ஐ-ரி)

# மோட்டார் சைக்கிள் மோதி சிறுமி படுகாயம்

இருபாலை கட்டப்பிராய்ப் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் சிக்கி படுகாயம் அடைந்த 9வயதுச் சிறுமி ஒருத்தி நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.


கோப்பாய் தெற்கு கட்டப்பிராயைச் சேர்ந்த பொன்ராசா கயல்விழி என்ற சிறுமியே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். கட்டப்பிராய்ச் சந்தியில் சைக்கிளில் இருந்து இறங்கி தமது வீட்டுக்குச் செல்ல பிரதான வீதியைக்கடக்க முற்பட்டபோதே பிரதான வீதியில் இருந்து வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் இச்சிறுமியை மோதியது என்று கூறபட்டது. (ஐ-180)

# நாடகப்போட்டி இன்றும் நடக்கும்

யாழ்ப்பாணம்,மே3

வடக்கு-கிழக்கு மாகாண கலாசார அலுவலகள் திணைக்களம் யாழ். மாவட்ட நாடக மன்றங்களுக்கு இடையே நடத்தும் நாடகப் போட்டிகள் யாழ்வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று ஆரமபமாகின. போட்டிகள் தொடர்ந்து இன்றும் நடைபெறும்.

மழை காரணமாக நேற்றைய போட்டிகளில் கலந்துகொள்ளத் தவறிய நாடக மன்றங்கள் இன்று போட்டிகளில் பங்குபற்ற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)







நோர்வேத் தலைநகரில் ஈழத் தமிழர்கள் நடத்திய மேதினப் பேரணியின் காட்சிகள் இவை. தலைவர் பிரபாகரனின் உருவப் படங்களைச் சுமந்தவாறு பல நூற்றுக்கணக்கானோர் இந்தப் பேரணியில் பங்குபற்றினர் (ஐ)

## பேச்சை முடிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துங்கவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று 'திவயின' சிங்கள வார இதழ் தெரிவித்திருக்கின்றது. தற்போது போர் நிறுத்தத்தைக் கண்காணித்து வரும் ஸ்கன்டிநேவியன் நாடுகளின் கண்காணிப்பாளர்களை அப்பணியிலிருந்து நீக்கவேண்டும் என்று ஜே.வி.பி. ஜனாதிபதியிடம் கேட்டிருக்கிறது - என்றும் 'திவயின' தெரிவித்திருக்கிறது.

இதேவேளை -

புதிதாக ஆரம்பிக்க உத்தேசித்திருக்கும் சமாதானப் பேச்சுக்களை நாட்டுக்குள்ளேயே நடத்துவது என்று ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார் என்றும் ஜனாதிபதி செயலகத்தை ஆதாரம காட்டி 'திவயின' தகவல் வெளியிட்டிருக்கிறது. (ஐ)

## ஆரையம்பதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிய செயற்பாட்டாளராக இருந்த ரெஜினோல்ட் என்பவரின் நெருங்கிய சகா என ஆரையம்பதி பிரதேச தகவலகள் தெரிவிக்கின்றன.

சம்பவம் நடைபெற்று சுமார் ஒரு மணிநேரத்தின் பின் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்ற காத்தான்குடி பொலீஸார் சடலத்தை எடுத்துச சென்று மட்டக்களப்பு போதனா வைததியசாலையின் பிரேத அறையில் ஒப்படைத்தனர்.

பிரேத பரிசோதனையும் மரணவிசாரணைகளும் இன்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இடம் பெறவுள்ளன.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஆரையம்பதி பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.(ஐ-21)

## எழுத்துமூல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறப்படுகின்றது.

அந்த விடயங்கள் சம்பந்தமாக அரசுத் தரப்பின் நிலைப்பாட்டைக் கோரிப்பெற்று அதன் அடிப்படையில் பேச்சுக்கான திட்டங்களை வகுத்துக் கொள்ள நோர்வே தீர்மானித்துள்ளது - என்று கூறப்படுகின்றது. (ஐ-க)

## சென்.ஜோன்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திடீரெனத் தவறிக் கடலில் வீழ்ந்தார் என்று கூறப்படுகிறது.

படகிலிருந்த சுழியோடிகள் உடனடியாகக் கடலில் குதித்துத் தேடுதல நடத்தினர். எனினும், நீரில் மூழ்கியவரைக் காப்பாற்ற முடியவில்லை.

உடனடியாகக் கடற்படையினருக்கும் பொலீஸாருக்கும் தகவல் கொடுககப்பட்டது. அங்கு வந்த கடற் படையினர் சுழியோடிகளுடன் இணைந்து நேற்று மாலைவரை கடலில் தேடுதல நடத்தினர். எனினும், நீரில் மூழ்கியவரின் சடலத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

நேற்று நெடுந்தீவுக் கடலில் பலத்த மழையுடன் கடற்கொந்தளிப்பும் காணப்பட்டது. இதனால் கடலில் வீழ்ந்தவரைத் தேடும் நடவடிக்கைகள்யாவும் நேற்று மாலையுடன் இடைநிறுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. இன்று காலை மீண்டும் தேடுதல் நடத்தப்பட உள்ளது. சென் ஜோன்ஸ் கல்லூரியின் பொருளியல் ஆசிரியரான ஜெயசீலன் வட்டுககோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

திருமணச் சடங்கு ஒன்றில் கலந்துகொள்ள இவர் நெடுந்தீவு சென்று திரும்பியபோதே இந்த அவலம் நேர்ந்தது. (ஐ-4-11)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்
A/L 2005
பௌதிகம்
புலங்கள்
ஆசிரியர்:
திரு.ஜெயசீலன் B.Sc. (Hons)
ஆரம்பம் 04.05.2004 செவ். 4.00 Pm

BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்நகர்.
A/L 2006 கலைப்பிரிவு
ஆரம்பம்:
பிரிவு 2 04-05-2004 செவ். 4.30 (O.T)
TAM. : N. பாலா
LOG. : P. கமல்
H.C. : பத்மராஜா
GEO. : I.S. ஜெகன்
ECO. : P.சண்
DRA. : தர்மா
ENG. : P.N.சுதர்சன்
(31566) (40)

CHEMISTRY
By: VAKEESAN
Organic Chemistry
சுதுமலையில்:
03.05.2004
மாலை 7.00 Pm
ஆரம்பமாகும்
பல்கலைக்கழகம் முன்பாக
04.05.2004
காலை 6.00 am
யாவும் புதிய நேரப்படி
(31549)(32)

கண்ணீர் அஞ்சலி
'உதயன்' மடிப்பு விநியோகப் பகுதியில்
கடமையாற்றிய
சிவனேசன் பாபுசங்கர்
அவர்கள் நேற்று (02.05.2004) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார். அவரது திடீர் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.
மடிப்பு விநியோகப் பகுதி ஊழியர்கள்,
உதயன் நிறுவனம் (சி-34850)(32-14-13)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.